eviyin KANMANI -Tamil Fortnightly July- 1, 2009. Regd. No. N/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India nder No.49510/89 Published every 1st and 15th of every month.

என்னைப் பத்தி

அன்பு நிறைந்த கண்மணி [illegible] வாசகர்களுக்கு வணக்கம். கண்மணி வாயிலாக மீண்டும் [illegible] தங்களை சந்திப்பதில் [illegible] எழுத்துலகில் படிப்படியாய் [illegible] கண்மணிக்கு நன்றி!

விரும்பினாய் விழப்பார்வையால் [illegible] நினைத்தேன் முடியாமல் [illegible] உன்னில்! பார்வையால் நனைத்தாய்! [illegible] துவட்டினாய்! மறைந்திருந்துப் பார்த்தாய்! எதிர்பாராமல் முன் வந்து திகைக்க வைத்தாய். நீ விழிகளில் உறவாடியது சில மணித்துளிகள் தான் ஆனால் பல ஆயிரம் தருணங்களில் அதை நினைக்க வைத்துவிட்டாயே!

இத்தனை ஏக்கங்களை சுமந்து இருக்கும், இரு இளம் நெஞ்சங்களின் ஊடல் கலந்த நேசமே ''ஆயிரம் நிலவே வா'' ''ஆதி- வெண்ணிலா'' உங்களுடன் இணைந்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தங்களின் விமர்சனங்களுக்காக காத்திருக்கிறேன்.

இப்படிக்கு

எஸ்.லதா சரவணன்



உன்னில் விழுந்தேன்...

-எஸ்.லதா சரவணன்

மலைகளின் ராணி எனப் புகழ் பெற்ற ஊட்டி மலைப்பாதையில் கறுப்பு நிற சாண்ட்ரோ கார் வெண்ணையாய் வழுக்கி சென்று கொண்டிருந்தது.

அதில் வெல்கம் ஓட்டல் அதிபர் ஆதவன் குளிரை அனுபவித்தபடியே மனதை உறுத்தாத இசையை கேட்டபடி இருந்தான்.

மனம் எதையோ அசைபோட்ட படியே வந்தது. மாலை மங்கிய நேரமாகையில் இருளை விரட்ட சாலையெங்கும் பொன் நிற விளக்குகள். யூக்கலிப்டஸ் மரங்களின் மணம், இரவு அன்னை பூமி குழந்தையை இருள் என்னும் நெஞ்சிற்குள் அணைத்துக் கொண்டிருந்தாள் அந்நேரம்.

காரை லாவகமாய் வளைவுகளில் ஓட்டியபடியே தன் முதலாளியைக் கண்டு நகைத்தான் கிருஷ்ணன்.

அதில் கலைந்த ஆதவன் ''என்ன கிருஷ்ணா? என்கிட்டே சொன்னா நானும் சிரிப்பேன் இல்லையா? தனியா சிரிக்கிறீயே?'' என்றான்.

''ஒரு நிமிடம் கூட ஓய்வில்லாமல் ஓடுபவர் நீங்கள். எப்படி இன்னும் ஒரு மாதத்திற்கு எந்த வேலையும் செய்யாமல் இருக்கப் போகிறீர்களோ என்று நினைத்தேன் சிரிப்பு வந்திடுச்சு''!

''என்ன பண்றது கிருஷ்ணா? இது அம்மாவின் கட்டளை. எனக்கே கூட நம்ப ஊரை விட்டு ரொம்ப நாள் பிரிஞ்சு போயிட்ட மாதிரி ஒரு பீலிங். அதான் கொஞ்ச நாள் அம்மா அப்பாவோட இருக்கலான்னு...!''

''ரொம்ப சந்தோஷம். இந்த வருடம் உங்களுக்கு திருமணம் செய்ய அய்யாவும் அம்மாவும் தீர்மானம் செய்து இருக்காங்க?''

''கல்யாணமா? நான் அறியாம இந்த சதிவேலை

எல்லாம் நடக்கிறதா? கிருஷ்ணா இதுவும் ஒரு வகையில் அபிஷியல் ட்ரிப் தான். ஊட்டி சிறந்த பொழுது போக்கு இடமும் கூட. நம்ம ஹோட்டல் பக்கத்தில் 40 ஏக்கரில் நிலமிருக்கு விலை பேசிட்டேன். அதிலே ஒரு பிக்னிக் ஸ்பாட் அமைக்கலாம் என்று ஒரு ஐடியா''

''இது பெரியம்மாவிற்கு தெரிந்தால் மிகவும் கோபிப்பார்களே அய்யா''

''கோபிப்பதா...? கட்டி வைத்து உதைப்பார்கள். என்ன செய்ய. ஒரு விஷயத்தில் ஈடுபாடு அதிகரித்து விட்டால் அதை செயல்படுத்தியே தீர வேண்டுமென்ற வேகம் வந்து விடுகிறது. இந்த அன்பும், பாசமும் தடைக்கற்களாய் மாறிவிட்டால் கஷ்டமில்லையா?''

''சின்னய்யா நீங்க ஒரே பிள்ளை, உங்க திருமணத்தை பெரியவங்க மட்டுமில்லாம நாங்களும் ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.''

ஆதவன் தன்னை மறந்து ஒரு விநாடி நகைத்தாலும், மனதின் ஓரம் இலேசாய் வலித்தது. என் மனதில் கல்யாணம் என்ற பேச்சுக்கே இடமில்லை. நிலாவின் முகம் ஒருமுறை மனக்கண்களில் வந்து போனது. அதற்கு மேல் அவன் பேச்சை வளர்க்கவில்லை.

அதற்குள் தாமரை இல்லத்தின் வாயிலின் வாசலில் கார் நின்றது. காரிலிருந்து இறங்கியவன், சில்லென்ற காற்றை நுகர்ந்த படியே விழிகளை விரட்ட, வீட்டினுள் இருந்து தாய் செந்தாமரையும், தந்தை சந்திரசேகரும் மகனை ஆரத்தழுவிக் கொண்டார்கள்.

''எத்தனை நாட்கள் ஆகிறதடா தம்பி உன்னைப் பார்த்து. நேரம் வாய்க்கும் போது வந்து போகக்கூடாதா?

அம்மா, அப்பா நினைப்பே உனக்கில்லையா?'' அம்மாவின் அங்கலாப்பில்,

''விடும்மா வாசலில் வைத்தே எல்லாம் கேட்கணுமா'' என்றான்.

''ஊரெல்லாம் சுத்தியிருக்கான் முதல்ல பிள்ளைக்கு திருஷ்டி சுற்றிப்போடு''

ஆரத்தியெடுத்து உள்ளே அழைத்துப்போனார் தாமரையம்மாள். தந்தையின் நேசமிக்க கரங்களில் புதைந்தவன், ''தம்பி பிஸினஸ்யெல்லாம் எப்படியிருக்கு?''

''ரொம்ப நல்லாயிருக்குப்பா உங்க உடம்பு எப்படியிருக்கு?''

''அதுக்கென்னப்பா வயசாகுதில்லையா? அம்மாவும், ராணியும் நல்லாவே கவனிக்கிறாங்க''

''சரி ஓட்டல் எப்படி போகுது?''

''நாட் பேட்! ராணி இருக்கும் போது என்ன கவலை? எல்லாத்தையும் ரொம்ப பொறுப்பா கவனிச்சிக்கிறா?''

''ராணியா? அது யாருப்பா பேரு புதுசாயிருக்கு? நியூ அப்பாய்ண்ட்மெண்ட்டா? கேசவ் என்ன ஆனார்?''

அவர் வேலையில் இல்லை. என்னாலும் நேரடியா கவனிக்க முடியாததினால் நிர்வாகத்தில் நிறைய சிக்கல் வந்திருச்சு. நல்ல வேளை

ராணி வந்து சேர்ந்தா''

மேற்கொண்டு ஏதோ கேட்க முற்பட்டவனை அறைக்குள் நுழைந்த பணிப்பெண் கலைத்தாள்.

''அய்யா மணி எட்டாச்சு. ராணியம்மா மாத்திரை தரச்சொல்லி இருக்காங்க'' வெள்ளையும் சிகப்புமாய் இரண்டு மாத்திரைகளை அவர் கையில் திணிக்க மறுபேச்சின்றி விழுங்கினார் சந்திரசேகர்.

''அம்மா, அய்யாவுக்கு வெந்நீர் தயாராயிருக்கு.''

''நீ போ! சரி தம்பி மத்ததையெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். முதல்ல குளி. சாப்பிட்டு ரெஸ்ட் எடு''

''ஹோட்டல் வரை போகலான்னு இருந்தேன்.''

''மூச்... வீட்டை விட்டு நகரக்கூடாது. அம்மா வாயில் விரலை வைத்து அதட்ட புன்னகைத்தபடியே சென்றான் ஆதவன்.

''எங்க! ஆதவன் எத்தனை பெரிய மனுஷனாயிட்டான் இல்லை. சின்னப்பிள்ளையிலே என் புடவை முந்தானையைப் பிடிச்சுக் கிட்டே அலைவான்.''

''பிள்ளையைப் பற்றி பெருமை பேசுறது இருக்கட்டும். இந்த வருஷம் நிச்சயம் அவனுக்கு ஒரு கல்யாணம் பண்ணிடனும். அவனை சம்மதிக்க வைக்க வேண்டியது உன் பொறுப்பு''

''எங்கே கல்யாணத்தைப் பத்தி பேச்செடுத்தாலே ஓடிப்போயிடறானே'' தாமரையம்மாவின் குரலில் மிதமிஞ்சிய கவலை தொனித்தது.

இயற்கையின் மடியில் புதைந்து கிடந்த செடிகொடிகளும் கண்ணுக்கு குளிர்ச்சி அளித்தது. யூக்கலிப்டஸ் கலந்த வெந்நீர் உடலெங்கும் இதமாய் பரவிட, சுகமாய் குளித்து முடித்து இரவு உடையுடன் வெளியே வந்தான்.

சப்பாத்தி சப்ஜி சாதம் குழம்பு என அம்மா பரிமாறிட உண்டவன்.

'பக்கத்து வீட்டுப் பாலுவை நீ அடித்தாயா அவனிடம் நீ போய் மன்னிப்பு கேள்'.

'போங்கப்பா... அவனை அடிச்ச பிறகு, அவனிடம் போய் எது கேட்டாலும் தரமாட்டான்ப்பா!'

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி

''அய்யா பால்''

''பாலா, சாப்பிட்டதே வயிறு புல்லா இருக்கே. இதிலே இது வேறயா?''

''குடிப்பா. எத்தனை நாளாச்சு அம்மா கையால சாப்பிட்டு...''

''அம்மா இப்படியே நான் சாப்பிட்டுட்டே இருந்தா ஓடியாடி வேலை செய்ய முடியாதும்மா.''

''ஏம்பா நம்ம வீட்டுல இருக்கிற வசதிக்கு நீ உட்கார்ந்தே நாலு தலைமுறைக்கு சாப்பிடலாம். இன்னமும் வேலை வேலைன்னு ஏன் ஓடணும்?''

''அம்மா சாப்பாடும் ஓய்வும் இந்த வயசில் எனக்கு தேவையில்லை. உன் பிள்ளை சாதிக்கப் பிறந்தவன். நான் தொட வேண்டிய சிகரங்கள் இன்னும் நிறைய இருக்கு அதுக்குள்ளே ஓய்வெடுக்க நினைககலாமா?''

''அதுக்கில்லைடா ஆதாவா எங்களுக்கு நீ ஒரே பிள்ளை. வயசும் இருபத்தெட்டு ஆகுது. இந்த சின்ன வயசலே பெரிய தொழில் பண்றே. நம்ம பக்கத்து ஆளுங்க எல்லாம் உனக்கு பொண்ணு கொடுக்க நான் நீன்னு போட்டி போட்டுக்கிட்டு அலையறாங்க''.

''அப்போ கல்யாண மார்க்கெட்டுல எனக்கு நல்ல கிராக்கின்னு சொல்லுங்க''

''போடா போக்கிரி. பேச்சை மாத்தாதே!''

''தம்பி காசு பணமும் நம்மகிட்டே அளவுக்கு அதிகமாகவே இருக்கு. வர்றவ உன்னையும் நம்ம குடும்பத்தையும் தாங்குறவளா இருக்கணும்''

''அப்பா சொல்றது தான் சரி. அம்மா கேக்குறாளேன்னு தப்பா நினைக்காதே. நீ யாரையாவது மனசிலே நினைச்சிகிட்டு இருந்தா சொல்லிடு. உடனே முடிச்சிடலாம். எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. உன் சந்தோஷம் தான் தம்பி எங்களுக்கு வேணும்''

''அம்மா வீணே மனசைப் போட்டு அலட்டிக்காதீங்கம்மா. அப்படியெல்லாம் எதுவும் இல்லை''

''என்னமோப்பா. எங்களுக்கு நீ ஒரே பிள்ளை. உனக்கு ஒரு நல்லது பண்ணிப்பார்க்க மனசு கிடந்து தவிக்குது. சரி நேரமாகுது. நீ போய் தூங்குப்பா''

''ஆமா நம்ம மேனேஜர் கேசவன் ஏன் போனார்?''

''அவரெங்க போனார்? நானில்ல அவனை வேலையை விட்டு அனுப்பினேன். இப்போ ராணி தான் எல்லாத்தையும் கவனிச்சிக்கிறா?''

''அதானே வந்ததுமே கேட்கணுமின்னு நினைச்சேன் அது யாரு ராணி?''

''நம்ம பாதர் தேவசகாயம் தான் அந்த பொண்ணை இங்கே கூட்டிட்டு வந்தார். நல்ல குணமுள்ள பொறுப்பான பொண்ணு. படிச்ச

பொண்ணு பாதர் கேட்டுக்கிட்டதால சேர்த்தோம். வந்த கொஞ்ச நாள் லேயே கேசவன் கணக்கிலே பண்ணின குளறுபடி எல்லாம் கண்டுபி டிச்சிட்டா''

''தொழில்ல பக்தியும், சுறுசுறுப்பும் கனிவும் அவ மேல ஒரு தனி மதிப்பே வந்துடுச்சு''

''அப்படியா?''

''ஆமாதம்பி! நம்ம அவுட் ஹவுஸ்லில் தான் தங்கியிருக்கா. சொந்த தாய் தகப்பனை கவனிக்கிற மாதிரி கவனிக்கிறாப்பா எங் களை!அந்த அளவுக்கு அன்பு''.

''அவங்க எப்போ வருவாங்கம்மா?'' இப்போது ஆதவனிடம் மரியாதை கூடி இருந்தது.

''இல நேரம் தாமதமாகும். ஆனா எங்களைப் பற்றி போனிலா வது விசாரிக்கடுவா. தங்கமான பொண்ணு. சரி நேரமாச்சு நீ போய் தூங்கு. அப்பாவும் ரெஸ்ட் எடுக்கணும்.''

''சரிம்மா. லேப்டாப்பை எடுத்துக்கொண்டு படுக்கையில் சரிந் தான். ஸ்கிரீனில் ஓவியமாய் அவளின் முகம். ''எங்கே இருக்கிறாய் நிலா? உன் ஆதி இங்கே ஏக்கத்தில் துடிப்பதை நீ உணரவேயில் லையா? என் அன்பில் காதலில் முழுவதும் கரைந்து விடத் தோன்றா மல் என்னை விட்டுப் பிரிய நீயேன் முன் வந்தாய்''

''நிலா! கோடிப் பூக்களின் சுகந்தம் உன் புன்னகை முகம் லிகுமே அதையிலி நான் காணப்போகிறேனா கண்மணி! என்ன தவறு செய் தேன் நான்? எனக்கேன் இந்த தண்டனை. நீ மட்டும் இந்நேரம் என் அன்பை புரிந்து கொண்டு இருந்திருந்தால் நம் வாழ்வு எத்தனை இனிதாய் மலர்ந்திருக்கும் தெரியுமா?''

பெருமூச்சுகளை சுமந்தபடியே உறக்கம் தொலைத்த விழிக ளோடு தவித்திருந்தான் ஆதவன். அந்த இரவைப் போலவே அவன் கனவுகளிலும் இருள் படிந்திருந்தது.

ஓட்டல் தாமரை! உயர் ரக ஐந்து நட்சத்திர ஓட்டல். விளக்குக ளின் ஒளிவெள்ளம் இரவும் பகலும் வழிந்தோடி அந்த இடத்தையே மினி சொர்க்கபுரியாக்கி விட்டிருந்தது. பெரிய வெண்கலப் பானை யில் நீரை நிரப்பி பூக்களின் இதழ்களைப் பரப்பி விட்டிருந்தது.

கண்ணாடிக் கதவுகளின் பின் வரவேற்பறையில் குயில் குரலோடு அழகான நெற்றியை பற்றியபடி கொஞ்சிக் கொண்டு இருந்தாள் லாவண்யா.

''என்ன வருண் இது? ஆபீஸ் டைமில் கூப்பிடாதே? மேடமிற்கு தெரிஞ்சா தேவையில்லாத பிரச்சனை தான் வரும்''

''ஆமா பெரிய மேடம். எந்நேரமும் வேலை வேலைன்னு கண் கொத்தி பாம்பு மாதிரி. இவங்களும் சின்ன வயசு தானே. இத்தனைக் கண்டிப்பும் கறார்த்தனமும் தேவை தானா?''

''அதனால தான் அவங்க தலைமை பொறுப்பில் இருக்காங்க''

''ம்... நீ என்ன அவனுக்கு வக்கீலா? ஒரே இடத்திலே வேலை செய்யறோம்ன்னு தான் பேரு? ஒரு வார்த்தை கூட பேச முடியலை. இன்னைக்கு ஈவினிங் ஸ்விம்மிங் பூல் வந்திடேன் லாவண்.''

''முயற்சி பண்றேன் வருண். இப்போ தயவு செய்து போனை வை. ரூம் நெம்பர் 203-ல் மெனு சொல்லி கால் மணி நேரமாச்சு. அந்த ஆள் கத்தறான். முதல்ல அதைப்போய் கவனி.'' லாவண்யா போனை அதனிடத்தில் வைத்துவிட்டு, பெருமூச்சோடு நிமிர்ந்தாள்.

புதுமணத் தம்பதிகள் ரூம் கேட்டு வர, அவர்களின் பெயர் முக வரி எல்லாம் பதிவு செய்து பணம் பெற்று ரசீது தந்து ரூம் பாயை அழைத்து விட்டு ''ஹேப்பி மேரீட் லைப் அண்ட் ஹேப்பி பிக்னிக்'' என்று வாழ்த்தும் கூறிவிட்டு நிமிர மறுபடியும் போன் அழைத்தது.

இம்முறை ராணியிடமிருந்து அழைப்பு.

''யெஸ் மேடம்'' லாவண்யாவின் உடலில் ஒரு விறைப்பு தொற் றிக் கொண்டது.

''எஸ் மேடம்...! என்ற வார்த்தையைத் தவிர வேறெதுவும் பேசி னாளில்லை. பின்னர் ரூம்பாயை அழைத்தாள். மணிகண்டா எம்.டி. ரூமை கிளீன் பண்ணு''

''ஏன் அக்கா?''

''சின்ன முதலாளி வர்றாராம் ராணி மேடம் போன் பண்ணாங்க''

அந்த பெயரைக் கேட்டதும் எதிர் கேள்வி கேட்காமல் ஓடினான் அவன்.

வாட்ச் மேனின் விறைப்பான சல்யூட்டை பெற்றபடியே மிடுக் கான நடையோடு உள்ளே வந்தாள் ராணி.

மொரமொரப்பான காட்டன் புடவை ஒற்றையாய் சாட்டை போன்ற பின்னல், அதில் ஒரு மஞ்சள் நிற ரோஜா குத்துவிளக்கென ஜொலித்த நெற்றியில் அவள் கோபத்தினை உணர்த்துவது போல் சிகப்பு பொட்டு.

''லாவண்யா''

''எஸ் மேடம்''

''ஒரு பொக்கேக்கு ரெடி பண்ணிடு! பவுண்டேஷன் மோட்டார் ரிப்பிரஷ் பண்ணச் சொல்லு. எம்.டி வரும்போது எல்லாமே பர் பெக்ட்டா இருக்கணும் சரியா? ஒரு சின்ன தப்பு கூட கண்லே படக் கூடாது. புரியுதா?''

''ஓ.கே. மேடம்''

''வருணை என்னோட கேபினுக்கு வரச் சொல்லு''

''யெஸ் மேடம்!'' ராணி மறையவும், லாவண்யா ஒரு உதறலோடு வருணைத் தொடர்பு கொண்டாள்.

''ஏய் செல்லம் என்ன திடீர்னு? என் நியாபகம் வந்திட்டதா?''

''சும்மா இருங்க. மேடம் உங்களை உடனே அவங்க கேபினுக்கு வரச் சொன்னாங்க''

''என்னவாம்?''

''நம்ம எம்.டி. வர்றார் இல்லையா? அதைப்பற்றி ஏதாவது பேச வாங்க. நேரம் கடத்தாம சீக்கிரமா போங்க.''

லாவண்யாவின் குரலில் தொனித்த பரபரப்பு அவனையும் தொற்றிக் கொள்ள வருண் காரிடாரில் இறங்கி ராணியின் அறையை அடைந்தான்.

''மே ஐ கமீன் மேடம்''

''எஸ் என்ன வருண் இத்தனை தாமதா வர்றீங்க?''

''ஸாரி மேடம் இன்று வெள்ளிக்கிழமை அதனால ரூம் சர்விசுக்கு ஆள் அனுப்பிவிட்டு கேன்டீன் போய் பார்த்திட்டு வர லேட்டாயிடுச்சு''

''இட்ஸ் ஓ.கே.! மிஸ்டர். வருண் நம்ப எம்.டி. இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே வந்திடுவார். எல்லாம் பர்பெக்ட்டா இருக்கணும்.''

''ஷ்யூர் மேடம்''

''நீங்க போகலாம்''

அவள் கம்ப்யூட்டர் வசம் திரும்பிட வருண் ஒரு சிறு வெறுப்புடன் நகர்ந்தான். இவளுக்கு பெரிய ஹிட்லர்ன்னு நினைப்பு மனசிலே திட்டியபடியே நகர்ந்தான்.

ராணி பரபரப்பாய் இயங்கினாள். அக்கவுண்ட்ஸ் சம்பந்தப்பட்ட சி.டி. மற்றும் பிளாப்பிகளை டேபிளின் மீது வைத்துவிட்டு, சிப்பந்தி ஒருவன் கொண்டு வந்து வைத்த காபியை அருந்தியபடியே நேரம் பார்த்தாள். காலை ஒன்பதைத் தொட்டு இருந்தது. தொலைபேசியைக் கையில் எடுத்தாள்.

எதிர்முனை எடுக்கும் வரை பொறுமையாய் இருந்தவள் ''ஹலோ'' எனும் குரல் காதில் அழகாய் மோதியது. அரை விநாடியில் அயர்ந்தவள், பின் ''ஐயா'' ராணி உங்க ஸ்டாப் குட்மார்னிங்! ஹேவ் ஏ நைஸ் டே ஸார்'' என்றாள்.

''ஓ நைஸ் மிஸ் ராணி! நானே உங்களை பார்க்க வரணும்னு நினைச்சேன். எங்கே இருக்கீங்க?''

''ஹோட்டலில் ஸார்''

''இத்தனை சீக்கிரமாகவா? நானும் கிளம்பிவிட்டேன். இன்னும் பத்து நிமிடங்களில் நான் அங்கே இருப்பேன். இன்னைக்கு பிரேக் பர்ஸ்ட் உங்களோட தான்''

''வெல்கம் ஸார். உங்களுக்காக எல்லாம் தயாராயிருக்கு''

''வெகு குறுகிய காலத்தில் எல்லார் மனதிலும் இடம் பிடித்துவிட்டீர்கள் மிஸ் ராணி. அம்மாவும் அப்பாவும் உங்களைப் பற்றி ரொம்பவே உயர்வாய் கூறினார்கள்''

''நான் தான் அவங்களுக்கு நன்றி சொல்லணும். எங்கிருந்தோ அநாதையா வந்த என்னை சொந்த மகள் போல பார்த்துக்கிறாங்க.

என்னை நம்பி இத்தனை பெரிய பொறுப்பை தந்து இருக்காங்க. அதுக்கு நான் உண்மையா உழைக்க வேண்டாமா?''

''உங்களை மாதிரி திறமையான ஸ்டாப்ஸ் இருந்தாலே எங்க வளர்ச்சி இன்னும் உயரும். ஓ.கே. நாம நேர்ல மீட் பண்ணலாம். வரவேற்பு என்ற பெயரில் பெரிதாய் ஏதும் செய்ய வேண்டாம். எனக்கு பிடிக்காது.''

''ஷ்யூர் ஸார்''

பரஸ்பரம் ரிசீவர் சாத்தப்படவும் ஏனோ இனம் புரியாததொரு படபடப்பு ராணியினுள் உருவானது. காரணம் புரியவில்லை. சொன்னாற்போல் சரியாய் 10-வது நிமிடத்தின் ஆரம்பத்திலேயே காரில் வந்து இறங்கினான் ஆதவன்.

கையில் பூச்செண்டோடு வரவேற்பறையில் காத்திருந்த ராணியின் கண் இரண்டும் நிலைகுத்தி நின்றது.

இவனா? இங்கே? என்பது போல்.

ஆனால் ஆதவனின் கண்களிலோ பரவசம் ''ஏய்? நீ நிலா...! இங்கேயெப்படி?'' என்றான்.

''ஸாரி ஸார்! ஐ யாம் ராணி, நிலா இல்லை,'' என்றாள் வெகு அழுத்தமாய் இறுகிய முகத்துடன். ஆதவன் அடுத்த அறிமுகப்படலம் எதையும் காதில் பொருட்படுத்தாமல் இயந்திர தனமாய் தலையசைத்து தன் அறைக்குள் நுழைந்து கொண்டான்.

யாரிவள்? என் நிலாவே தான். ஆனால் ராணியென்கிறாளே. இல்லை என்று மனம் இடித்தது. ஜாடை வேண்டுமானால் மாறலாம். ஆனால் ஆசை ஆசையாய் காதலோடு நோக்கிய அந்த கண்களை அவன் அறிவானே.

இவனை கண்டதும் அவளின் விழிகளிலும் விநாடிக்கும் குறைவான நேரத்தில் ஒரு மலர்ச்சி தோன்றி உடனே ஒரு இறுக்கம் தோன்

''என் ஸ்நேகிதன்னு சொல்லி எங்கப்பாவை யாரோ எமாத்தி ஆயிரம் ரூபாய் வாங்கிட்டான்''.

''உன் ப்ரெண்டுன்னு சொல்லியுமா உங்கப்பா அவனை நம்பினாரு. ஆச்சர்யமா இருக்கு''.

-ஆர்.மதுமதி, மதுரை.

நிலாதே என்ன காரணமாய் இருக்கும். தானாய் புலம்புவதைக் காட்டிலும் அவளையே நேரடியாக கூப்பிட்டு கேட்டால் என்னவென்று தோன்றியது.

நேரம் தாழ்த்தாமல் அதை உடனே செயல்படுத்தவும் செய்தான். அடுத்த ஐந்தாவது விநாடி ராணி உள்ளே நுழைந்தாள். தனியாக அல்ல வருணுடன்.

''குட்மார்னிங் ஸார், வெல்கம் டு ஹோட்டல்''

''தேங்க் யூ. இவர்...?''

''இவர் பெயர் வருண். இங்கே சூப்பர்வைசர். சின்சியர் ஒர்க்கர். நீங்கள் ஓட்டலை ஒருமுறை பார்வையிட விரும்பினால் வருணுடன் போகலாம். டேபிளில் அக்கவுண்ட் சம்பந்தப்பட்ட அத்தனை தகவல்களும் எடுத்து வைச்சிருக்கேன். நீங்க பார்த்து வெரிபை பண்ணிடுங்க''

அவள் வெகு கவனமாய் வேறு வேதும் இல்லையென்பது போல் பேசினாள். விழிகள் அவனை நேராய் சந்திப்பதை தவிர்த்தது.

''வருண்! உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி. தேவைப்படும் நேரம் அழைக்கிறேன். நீங்க போகலாம்'' என்றான்.

இப்போது அந்த பெரிய அறையில் இவர்களிருவரும் மட்டும் தனிமையாய்.

''நான் ஒன்னும் புரபஸர் இல்லை உட்காரலாம் மிஸ்''

''பரவாயில்லை ஸார். நான் போகலாமா?''

''என்ன அவசரம் என் சந்தேகங்கள் இன்னும் தீரவில்லையே?''

''சந்தேகமா?'' புருவம் உயர்த்தினாள்.

''யெஸ். உங்க பெயர்?''

''ராணி?''

''உங்களுக்கு சமீபத்தில் ஏதும் அம்னிஷியா அட்டாக் ஆச்சா?''

''என் பெயர் என்னவென்று ஆராயத்தான் இங்கே வந்தீங்களா?''

''அதில்லை வெண்ணிலாங்கிற பேரை எப்போ மாத்துனீங்க?''

''ஸார் என் பேரு ராணி தான் உங்களை நம்ப வைக்க சர்டிபிகேட் காட்டட்டுமா?'' என்றாள்.

''பீ கூல்! ஏன் டென்ஷன் ஆவுறீங்க? இதே ஜாடையில் வெண்ணிலான்ற பெண்ணை எனக்குத் தெரியும். அது நீங்களான்னு கேட்டேன். இல்லேன்னா இல்லைன்னு சொல்ல வேண்டியது தானே! ஏன் கோபப்பட வேண்டும்''

அவனின் எதிர்கேள்வியில் ஒரு விநாடி மயங்கி பின் சுதாரித்தாள்.

''எனி ஹெல்ப் ஸார்''

''இந்த பிளாப்பிங் சிடி எல்லாம் என்னோட சிஸ்டமில் டவுன்லோட் பண்ணிடுங்க நான் சவினிங் பார்த்துக்கறேன்.''

''யெஸ் ஸார்!'' அவனை கடந்து லேப்டாப்பை ஆன் செய்தவள் லாகினுக்குப் பிறகு பாஸ்வேர்ட் கேட்க ஸார் உங்க பாஸ்வேட்?

''நிலா'' என்றான் வெகு கூர்மையாய் அவள் விழிகளை நோக்கியபடியே.

விரலும், மனமும் நடுங்கிட நான்கு வார்த்தையைத் தட்டினாள். அவளின் மனக்குமுறலினை அந்த விரல்களில் புரிந்து கொண்டவன் வாய்க்குள்ளேயே சிரித்தான்.

''ஓ.கே. மிஸ். மிஸ் தானே?''

கடவுளே இவனிடம் இன்னும் எத்தனை குத்தல்களை தாங்க வேண்டுமோ? என்ற படியே.

''ஆமாம்'' என்றாள்.

''மிஸ்... நிலா ஸாரி . ராணி இந்த ஹோட்டலை பார்வையிட வேண்டுமே?''

''நான் வருணை அழைக்கிறேன் ஸார்''

''இங்கு இன்ஜார்ஜ் நீங்கதானே. அப்போ நீங்களே வரலாமே?''

''அது வந்து ஸார்?'' அவள் மறுப்பு தெரிவிப்பதற்குள் அவன் எழுந்து விட்டதால் வேறு வழியின்றி அவளும் புறப்பட வேண்டியதாகி போனது.

முதலில் ரிஷெப்ஷனில் லாவண்யாவை அறிமுகப்படுத்திவிட்டு, இதர வேலையாட்களை சிறு அறிமுகம் செய்தாள். காலியான அறையொன்றை கவனித்தான். ஒழுங்காய் விரிக்கப்பட்ட விரிப்புகள். அழுக்கில்லா திரைச்சீலைகள், சுவரை அலங்கரிக்கும் சுவரொட்டிகளோடு பூக்களும் என அறை கண்ணைக் கவரும்படி ரசனையோடு இருந்தது.

''வெரிகுட் ரூம்ஸ் எல்லாம் நல்லா மெயிண்டெண்ட் பண்றீங்க?''

அடுத்தடுத்து உணவருந்தும் இடம், நீச்சல்குளம், உணவு தயாரிக்கும் விதம் என அவன் பார்வை விரிந்தது.

நீச்சல் குளம் அருகில் வந்ததும் இருவரிடமுமே சற்று நேர மௌனம் நீடித்தது. அவன் மனதில் அந்நாளைய நினைவுகள் பூத்தன. ராணியின் நிலையும் அது தான். இது போன்ற நிலையில் தானே தன்னையும் மறந்து அவன் அணைப்பில் கட்டுண்டு நின்றது.

ஆதவன் அவள் புறம் திரும்பினான். அவளின் உணர்வுகள் ததும்பிய முகத்தில் நிலாவும் தன்னைப் போல் பழைய நினைவுகளில் புரள்கிறாள் என்று தோன்றியது.

''நிலா?'' மெல்ல அழைத்தான்.

''ம்...! தன்னையும் அறியாமல் 'ம்'...! என்றவள் உடனே சுதாரித்து ஆதவனிடம் இருந்து விலகி நடந்தாள். அவனும் வேறெதுவும் பேசாமல் பின் தொடர்ந்தான். அவள் அவனுடன் நெருங்கி நடந்தது எல்லோரையும் புருவம் உயர்த்திப்பார்க்கவே செய்தது.

ராணிக்கு இது தர்ம சங்கடமாய் இருந்தது. ஆதவனுடன் தனித்திருக்கும் ஒவ்வொரு நொடியும் முள் மேல் நிற்பதைப் போல் இருந்

இரவு நேராய் அறைக்குள் வந்து முடங்கி விட்டாள். தாமரையம்மாளிடம் கூட நேரில் சென்று பேசவில்லை. போனிலேயே விசாரித்து விட்டு உடம்பு சரியில்லை என்ற பொய்யோடு தனக்கென்று ஒதுக்கப்பட்ட இடத்திற்கு வந்துவிட்டாள்.

உடையைக்கூட களைய மனமின்றி அப்படியே படுக்கையில் சரிந்து விட்டாள். இவனெப்படி இங்கே? யார் கண்ணில் இருந்து தப்பியோடி வந்து இங்கே தஞ்சம் புகுந்தாளோ அவனிடமே மாட்டிக் கொண்டாளே?

நேரில் தான் பார்க்கவில்லையே தவிர மனதில் ஓராயிரம் முறை பார்த்திருப்பாளே? எத்தனை முகமூடிகள் இட்டாலும் ஆதியின் நினைப்பை மறைக்க இயலாமல் தவிப்பது உண்மை தானே. விவஸ்தை கெட்ட மனம் இடித்துரைத்தது. இந்நிலை நீடிப்பது கூடாது. என்ன செய்ய வேறு எங்காவது போய் விடலாமா என்றால் அதுவும் அவளால் முடியாதே?

தனியாளான அவளின் செலவிற்கும் மேல் வரும் வருமானத்தினைக் கொண்டு ஆசிரமத்தில் இரண்டு பிள்ளைகளை படிக்க வைத்து வருகிறாள்.

இப்போது திடீரென்று எடுக்கும் எந்தவொரு முடிவும் பாவம் அவர்களை பாதிக்குமே? இவை தவிர, பெரியவரிடமும், தாமரையம்மாளிடமும் இருந்து விடைபெறுவது அத்தனை சுலபம் இல்லையே? சரியானதொரு காரணம் இல்லாமல், அவரிடம் இருந்து தப்பிச் செல்லவும் இயலாதே.

தாயின் மறைவிற்குப் பிறகு, தனியாய் தவித்தவளை இன்னொரு அன்னையாய் தாங்கி நேசக்கரம் நீட்டி கௌரவமாய் வாழ்ந்திட ஒரு வாழ்க்கையும் ஏற்படுத்தி தந்த மதரின் பேரும் கெடுமே. இருப்பினும் இதையெல்லாம் மனதில் வைத்து இங்கே வேலையைத் தொ-

'சர்க்கரை' என்ற வார்த்தையைப் பயன்படுத்தி ஒரு வாக்கியம் அமை?'
'காபி குடித்தேன்'
'முண்டம் இதில் எங்கேடா சர்க்கரை இருக்கு?'
'காபியில் சார்!'
-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி

கும் பட்சத்தில் ஆதியின் அருகாமை நெருப்பு மூட்டாதா?

ஒரு காலத்தில் ஒரு முறையேனும் காணமாட்டோமா என்று ஏங்கித் தவித்த அந்த முகத்தை இன்று எதிர் கொள்ளவே முடியவில்லையே. மனம் குமைந்தது. சிலர் வாழ்வில் அழமட்டுமே பிறந்தவர்கள். அந்த வகை தான் ராணியும்.

2

கற்பனையும், நினைவுகளும் இல்லையென்றால் உலக இயக்கமே திசை மாறிப்போயிருக்கும். சில நிகழ்வுகள் நடக்கும் நேரத்தை விடவும், நினைவிற்குள் அமிழும் நேரம் தான் அதிகமாய் இனிக்கும். அதுவும் காதல் கொண்ட மனது, ஒரே விஷயத்தையே ஆயிரம் முறை யோசிக்கும். மனமும் மூளையும் அரை மயக்க நிலையிலேயே இருக்கும். காதல் போதை போன்றது.

இனிக்க இனிக்க சுவைத்து விழுங்கும் நேரம் கசப்பைக் தருவது. வெண்ணிலா இது தான் அவளின் பெயர். சிறு வயது முதலே அவளின் செய்கையில் உள்ள தெளிவும், கம்பீரமும் அனைவரையுமே கவர்ந்தது. தாய் நந்தினி மகளின் அழகிற்காய் செல்லமாய் அழைக்கும் பெயர் தான் ராணி.

ராணியின் தாய் நந்தினி வசதியான குடும்பத்தில் பிறந்தவள். ஒரு விபத்தில் பெற்றோரை இழந்து உறவுகளால் ஆசிரமத்தில் விடப்பட்டவள். அழகும் படிப்பும் வளர கூடவே காதலும் வளர்ந்தது. மதரின் ஆசிர்வாதத்தோடு அவனையே திருமணமும் புரிந்து கொண்டாள்.

கணவன் சீனிவாசனுக்கு எதற்கெடுத்தாலும் சந்தேகம், தினம் தினம் அடி உதை சித்ரவதை இதில் ராணி வேறு கையில்! எத்தனையோ போராட்டத்தோடு வாழ்வை எதிர்த்துப் போராடியவள். கணவனும் சந்தேகத்தில் பிரிந்து போய் விட, இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையோடு மதரிடமே மீண்டும் அடைக்கலம் புகுந்து விட்டாள். அப்போது வெண்ணிலா ராணிக்கு வயது பதினொன்று.

தாயின் வலிகளையும், வேதனைகளையும் அவள் வெகுவாய் உணர்ந்து இருந்தாள். சந்தேகம் எனும் பேயின் பிடியில் அழகான மலரான அம்மா பட்ட வேதனைகள் அவள் மனதில் பசுமரத்து ஆணி போல் பதிந்தன. பின் அன்னையும் மறைய, படிப்பு முடித்து மதரின் ஆலோசனையில் பாதர் தேவசகாயம் கிருபையில் இந்த வேலை கிடைத்தது.

காதல் காற்று தீண்டாதவர்கள் பூவுலகில் யாருமில்லை. எத்தனையோ இரும்பு கதவுகளை மனதிற்குள் போட்டிருந்த போதும் ஆத-

வனைக் கண்டதும் நெருப்பிற்கு இளகும் இரும்பாய் மாறினாள் வெண்ணிலா. ஆதவனை சந்தித்த நாள் கண் முன் விரிந்தது.

வெண்ணிலா அப்போது கல்லூரி இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்த நேரம், சக மாணவியின் திருமணத்திற்கு என சேலத்திற்கு சென்ற போது தான் முதன் முதலில் ஆதவனைக் கண்டது.

மாணவப் பருவம் என்பதே மனக்கவலை அற்ற பருவமல்லவா? அர்த்தமற்ற சிரிப்பு, தேவையில்லா கோபம், உணர்வுகளுக்கு அதிகம் மதிப்பளிப்பது போன்ற ஒட்டுமொத்த இளமையின் நெகிழ்ச்சி அல்லவா? பட்டுப்பூச்சியாய் சுற்றித்திரியும் வயதல்லவா?

தோழிகளோடு அழகாய் உடை உடுத்தி அழகாய் அடக்கமாய் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தவள் எல்லாருடைய கவனத்தையும் ஈர்த்தாள்.

''டேய் பாபு! உன் ஆளு வெண்ணிலா இன்னைக்கு ரொம்பவும் நல்ல மூடில் இருக்கா போல, பேசாம இப்பவே உன் லவ்வை அவகிட்டே ஓப்பன் பண்ணிடேன்.''

''ஆமாடா கூட்டமும் அதிகமாயிருக்கு, அவளால அடிக்கக்கூட முடியாது?''

''சும்மாயிருங்கடா...!''

''ஏண்டா மச்சான்! காலேஜில உன் பின்னாடி சுத்தாத பொண்ணுங்களே இல்லை. நீ யென்னடான்னா உன்னை திரும்பிக் கூட பாக்காத இவ பின்னாடி சுத்துறே?''

''வானத்திலே ஆயிரம் நட்சத்திரம் இருந்தாலும் நிலா ஒண்ணு தானடா?''

''ரொம்ப நெஞ்சை பிழியறடா. என்கிட்டே கொட்டாம அவகிட்டே போய் பேசு போ.''

''நானும் எவ்வளவோ ட்ரை பண்றேன்டா ஆனா என்னால முடியலை. அவ கண்ணைப் பார்த்ததும் ஆட்டோ மேட்டிக்கா ஆப் ஆயிடறேன்.''

''இதே டயலாக்கை இன்னும் எத்தனை தடவைதாண்டா சொல்லுவே?''

''டேய் இதெல்லாம் லவ் பண்றவனுக்குத் தாண்டா மச்சி புரியும். சரி நீயென்ன பண்ணுவே?''

''நமக்கெல்லாம் வில்லனைக் கண்டா மாதிரி ஓடுறாங்க. அதுக்கெல்லாம் மச்சம் வேணும்டா''

இளசுகள் ஒருவரையொருவர் கிண்டல் பேசியபடி இருக்க, வெண்ணிலா இவையெல்லாம் கவனியாமல் மிகவும் மும்முரமாய் வேலையில் ஈடுபட்டு இருந்தாள்.

கரும்பச்சை நிறத்தில் ராசிசில்க் புடவையும் அதற்கேற்றாப் போல் சோளியும், முத்து மணியில் கற்கள் பதித்த வளையல்கள், கம்மல், நெக்லஸ் என மணிவகைகளே அவளை தேவதையென காட்

டின. திருமண வரவேற்பு மிகப்பெரிய ஓட்டல் ஒன்றில் நடந்தது.

கண்ணைப் பறிக்கும் விளக்குகளோடு மேலும் ஜொலித்தனர் மணமக்கள். தோழியின் வீடு பசையுள்ள இடமென்பதால் பணத்தை வாரி இறைத்திருந்தார்கள். நம்மூர் திருமணங்களில் மட்டும் தான் இந்த நேர்த்தி இருக்கும்.

அழகான சடங்குகள், அன்பான உறவுகள், வேடிக்கையான பேச்சுகள் என அந்த இடமே கலகலப்பாய் இருந்தது. சுவையான உணவு பப்பே முறையில் வெஜ் நான்வெஜ் என்று இருவகையாய் பிரித்து வைக்கப்பட்டு இருந்தது. கூடவே மென்மையான இசைக் கச்சேரி வேறு.

உடையின் சலசலப்பும், உறவினர்களின் வாழ்த்தும், பூமாலையின் கனமும் தாளாமல் மணப்பெண் தேவி வெண்ணிலாவை அருகிலேயே நிறுத்திக் கொண்டாள்.

''என்ன தேவியிது! என் கையை விடுடி, கல்யாணமான பொண்ணு என் கையைப் பிடிச்சு கிட்டு இருந்தா மாப்பிள்ளை கோபிச்சிக்கப்போறார்.''

''எனக்கு ஒரே படபடப்பாயிருக்கு''

''அதான் பக்கத்திலேயே அவர் இருக்காரே நான் வேற நந்தி மாதிரி எதுக்கு?''

பெண்களிருவரும் புன்னகைத்தனர். இதே பிரபு வெண்ணிலாவையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருந்தான். நெஞ்சில் நெருப்பு எரிந்தது. நேற்று இரவு வரவேற்பிற்கு கிளம்பும் முன்பே வெண்ணிலாவிடம் தனிமையாய் கிடைத்த சந்தர்ப்பத்தில் காதலைச் சொல்லிட,

''ஸாரி பிரபு, காதல் கல்யாணம் இதெல்லாம் எனக்கு எந்த ஈடுபாடும் இல்லை, உங்க அழகுக்கு என்னைவிட நல்ல பெண்கள் கிடைப்பாங்க. ப்ளீஸ் இனி இதைப்பற்றி பேச வேண்டாம்'' என்று முகத்திலடித்தாற் போல் கூறி விட்டாள்.

காலேஜின் ரோமியோ அவன், பிரபுவின் கண் அசைவிற்கென எத்தனையோ பெண்கள் ஏங்கிட பிரபுவிற்குள்ளும் கர்வம். எப்பேர்பட்டவளும் தனக்கு அடிமையாகிவிடுவாள் என்று! ஆனால் வெண்ணிலா எந்த மாய வலையிலும் சிக்க மாட்டாள் என்பதையுணர்ந்து காதல் எனும் வலை வீசிட, அவள் அதிலும் சிக்கவில்லை என்றதும், கூடவே நண்பர்களின் சீண்டல் வேறு அவனுக்கு போதையேற்றியது.

இந்த முறை ஊருக்கு திரும்புவதற்குள் அவளை அடைந்துவிட வேண்டுமென்ற வெறியே பிறந்து விட்டது. எனவே கண்களில் விளக்கெண்ணெய் ஊற்றிக் கொண்டு சந்தர்ப்பத்திற்கென காத்து இருந்தான் பிரபு.

உறவினர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி குழுக்களாய் பிரிந்து ஏதேதோ பேசிக் கொண்டிருக்க, திடீரென ஓட்டல் ஊழியர்களி

டையே சின்ன சலசலப்பு, கையில் ஒரு பூங்கொத்தோடு நெடிய கால்களை நீட்டி தோள்களைக் குலுக்கி அலட்சியமாய் நடந்து வந்தவனைக் கண்டதும் மணமகனின் முகத்தில் அத்தனை மலர்ச்சி.

''கங்கிராட்ஸ்'' மணமகன் வாசுவின் கையைப் பற்றி குலுக்கினான்.

''தேங்க்ஸ் ஆதவா! எங்கே நீ வராம போயிடுவியோன்னு நான் ரொம்பவே பயந்தேன்''

''என்ன வாசு நீ நேரில் வந்து அழைத்ததும் நான் வராமல் இருப்பேனா?''

''மைதி வே தேவி! இது என்னோட பெஸ்ட் ப்ரெண்ட் ஆதவன் இந்த ஹோட்டலின் உரிமையாளன்''

''வணக்கம்'' கரம் குவித்தபடி தேவி புன்னகைக்க,

''பெரிய பிஸியான ஆளு ஆனா இத்தனை வேலையிலும்...!'' நண்பனின் பேச்சை இடைமறித்தான் ஆதவன். ''இவன் சரியான ஓட்டை வாய் ஆசாமி வாயைத் திறந்தா மூடவே மாட்டான் சிஸ்டர்.'' வசீகரமாய் சிரித்தவன் தேவியைத் தாண்டி அருகில் பதுமையாய் நின்றவளைக் கண்டான்.

''மேடம் யாரு?''

''என் தோழி வெண்ணிலா''

''வணக்கம்'' என்றான், பதிலுக்கு கரம் குவித்தாள். தாமரை மொட்டென குவிந்திருந்த வெண்ணிற விரல்களை பார்த்ததும் தொட்டு பார்த்திட ஆசை பிறந்தது ஆதவனுக்கு!

சட்டென தலையை உதறிக் கொண்டான். இதென்ன நினைப்பு என்று. அதற்குள் வாசு குறுக்கே புகுந்தான். ''நல்லவேளை ஆதவா நீ வந்தே. தேவிக்கு துணையா சிஸ்டர் இருக்காங்க. நான் தான் அம்போ வென்று இருந்தேன்.''

''அதான் நான் வந்திட்டேனே'' ஆதவன் வெண்ணிலாவைப் பார்த்து கண் சிமிட்ட, இவள் விதிர் விதிர்த்தாள்.

''இது உன் ஓட்டல்! நான் கேட்கக் கூடாது தான். இருந்தாலும் என் மணவிழாவாயிற்றே ஏதாவது சாப்பிட்டியா?''

''அதெல்லாம் பிறகு பார்க்கலாம்?''

''நோ... நோ... சிஸ்டர் இப் யூ டோண்ட் மைண்ட் ஆதவனுக்கு உணவு அரேஞ்ஜ் பண்ண முடியுமா?''

''நானா...'' வியப்போடு கேட்டாள் வெண்ணிலா.

''ஆமாம் ஸார் பாவம்! இவகூட இன்னமும் சாப்பிடலை, போ வெண்ணிலா! போய் சாப்பிட்டு வா.''

''அவள் மேலும் தயங்கிட, வாங்க மிஸ். மாப்பிள்ளையும், பொண்ணும் மறைமுகமா விரட்டும் போதே போயிடலாம். அப்புறம் தள்ளி விட்டுடுவாங்க, நாமெதற்கு பூஜை வேளையில் கரடியாட்டம்? கம் ப்ளீஸ்'' என்றழைத்து விட்டு நடக்கவும் இவளும் பின்னே

நடந்தாள்.

உரிமையாளன் என்பதால் எங்கு திரும்பினாலும் பல தலைகள் அசைந்தன. ஆதவன் இவளிடம் நெருக்கமாய் பேசியபடியே வர அனைத்துக் கண்களும் தன்னையே துளைப்பது போல் தோன்றியது வெண்ணிலாவிற்கு!

''ஏன் வெண்ணிலா அளந்து தான் பேசுவீங்களா?''

''அப்படியெல்லாம் இல்லை ஸார்''

''ஸார் மோரெல்லாம் வேண்டாமே''

''கேட்டாலும் இல்லை''

''எது?''

''மோர்தான்''

''எனக்கு சுத்தி வளைச்சுப் பேசத்தெரியாது. யூ ஆர் வெரி ப்யூட்டிபுல்'' என்றான் ஆதவன்.

''இப்போ நான் வெட்கப்பட்டு தேங்க்ஸ் சொல்லணுமின்னு நினைச்சா நிச்சயம் ஏமாந்து தான் போவீங்க, நீங்க என் கெஸ்ட், உங்களை உபசரிக்க வேண்டியது என் கடமை என்ன சாப்பிடறீங்க?''

அவள் நீளமாய் பேச ஆதவன் புன்னகைத்தான். வெகு சீரான பல் வரிசை, தலை சரிந்து முன்னும் பின்னும் குலுங்கி, குளிர் காற்று போல் அந்த புன்னகை வெண்ணிலாவை சற்று அசைத்துப் பார்த்தது. அந்த கோபத்தில்!

''இப்போ நான் என்ன சொல்லிட்டேன்னு விழுந்து விழுந்து சிரிக்கிறீங்க? பார்த்து பல் சுளுக்கி விடப்போகிறது''

''உன் பட்டு விரல் உரசினால் எந்த சுளுக்கும் பறந்து விடுமே!''

''உங்களுக்கு ரொம்பவும் திமிர் மிஸ்டர்...!''

''ஆதின்னு கூப்பிடலாம். எனக்கு நெருக்கமானவங்க அப்படித்தான் கூப்பிடுவாங்க''

''உங்களை கூப்பிட வேண்டிய அவசியம் எனக்கில்லை.'' ''கோபிக்காதே நிலா, முகம் சிவந்து கோவைப் பழமாய் ஆகிவிடுகிறது. உண்மையைச் சொல்லப்போனால் உன்னிடம் பேச வேண்டும்

''நாய் கடிக்கு என்ன செய்யணும்?''

''முதல்ல ஒரு நல்ல நாயை விட்டு கடிக்க விடணும்!''

-ஆர். மதுமதி, மதுரை.

என்று எதுவோ தூண்டுகிறது. ஏன் என்று எனக்கே புரியவில்லை''.

''நான் வழி சொல்லவா?''.

''ப்ளீஸ்.....!''

''ஒரு எலுமிச்சம் பழத்தை எடுத்து உச்சியிலே நல்லா தேய்ங்க'';

''அதையும் தங்களின் திருக்கரங்களே செய்தால் நலம்'',

''உங்களை ஒரு ஜென்டில்மேன்னு நினைச்சேன். ஒரு பெண் கிட்ட எப்படி பிஹேவ் பண்றதுன்னே தெரியலையே!''

''ஏய் நானென்ன உன்னைக் கட்டியா பிடிச்சேன்''.

''ச்சீ... இந்த ஆசை வேற இருக்கா... உங்க கூட வந்ததே தப்பு.'' அவள் திரும்பி நடக்க முயல, அருகில் இருந்த செடியில் புடவைத் தலைப்பு மாட்டி இழுக்க தடுக்கி விழப்போக, ஆதவன் தன் வலிமையான கரங்களினால் அவளைத் தாங்கினான்.

3

வெண்ணிலாவின் கை அவன் தோளில் பதிந்தது. ஆதவனின் விரல்கள் அவள் இடுப்பின் குழைவான பிரதேசத்தில் அழுத்தியது. நேருக்கு நேராய் இருஜோடிகளின் கண்களின் சந்திப்பு. தன்னையும் அறியாமல் மயக்கம் ஒன்று ஆட்கொண்டு இருந்தது.

ஆதவன் முகம் நோக்கி குனிந்தான். வெண்ணிலா கண்களை மூடிக் கொண்டாள். அவள் நெஞ்சுக்கூடு ஏதோ ஏக்கத்தில் மேலும் கீழும் அசைந்தது. ஈரமான உதடுகள் அதிகமாய் ஈர்த்தன. மூடிய இமைகளோடு ஒரு தேவதை உறங்குவதைப் போல் கற்பனை செய்தவன்,

இடத்தின் சூழ்நிலை உணர்ந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளை விடுவித்தான் பிரிய மனமேயின்றி! அந்த மயக்கத்தில் இருந்து மெல்லக் கலைந்தவள் மோனமான அந்த விழி வீச்சை தாங்க முடியாமல் தலை கவிழ்ந்த வண்ணம் '' நன்றி '' என்றாள்.

'' நானல்லவா நன்றி சொல்ல வேண்டும். இந்த தேவதையைத் தாங்கியதற்கு! அடியேனும் ஏதோ புண்ணியம் செய்து இருக்கிறேன் '' எனும் பாவனையில் தலை தாழ்த்தி கூறிட,

களுக்கென்று சிரித்து விட்டாள்.

'' அப்பாடா கோபமெல்லாம் தீர்ந்து விட்டதா? புன்னகை அழகு என்பதே உன்னைப்பார்த்து தான் புரிகிறது. ''

'' ஹோட்டல் அதிபர் என்று தான் நினைத்தேன். எப்போதிலிருந்து கவிஞர் ஆனீர்கள்....! ''

'' கடைக்கண் பார்வைதனை கன்னியர் தம் காட்டிவிட்டால்...!''

'' அய்யோ போதும் போதும்! என்னை விட்டுடுங்களேன் ப்ளீஸ்.''

'' அப்படி சரண்டர் ஆயிட்டா நோ ப்ராப்ளம். நிலாம்மா ஆபிஸிலிருந்து அப்படியே வந்து விட்டேன். பசிக்குது, சாப்பிடலாமா? ''

'' ஷ்யூர் '' இருவரும் ஒரு சேர நடந்தனர். லேசாய் விரல்கள் உரசின. மின்சாரம் பாய்ந்தது போலொரு உணர்வு.

'' நிலா நீயெப்படி வெஜ்ஜா? நான் வெஜ்ஜா? '' கேள்வி கேட்டான். ஏதோ நினைவில் அவள் பதில் சொல்லத் திணற,

'' பிரியாணி ஓ.கேவா? '' என்று கேட்டுவிட்டு அவனே இரண்டு பிளேட்டுகளில் கொண்டு வந்தான். இவளுக்கோ சங்கோஜமாய் இருந்தது. நிலாயென்று அவன் பெயரை சுருக்கி அழைத்ததும் இனித்தது.

'' ப்ளீஸ் ஆதி! நானே எடுத்துக்க மாட்டேனா? எல்லாரும் ஒரு மாதிரி வித்தியாசமாய் பார்க்கிறார்கள். இந்த ஓட்டலின் நிர்வாகி நீங்கள்... எனக்கு போய்...! ''

'' ஸோ வாட் நிலா அடுத்தவங்க பார்க்கிறதுக்கும் கேட்கிறதுக்கும் பயந்தா மூச்சு கூட விடமுடியாது. ''

'' நிலா! நீ எப்படி நம்புவாயாயென்று தெரியாது. சில பேரிடம் தான் பார்த்த முதலே ஒரு ஒட்டுதல் ஏற்படும். நீ முதற்பார்வையிலே என்னை ஈர்த்து விட்டாய். ''

நிலா ஸ்பூன் கொண்டு உணவை அளந்தாள். அதற்குள் தேவியிடம் அழைப்பு வர, அதே நேரம் ஆதவனிடம் யாரோ சில பேர் பேசிட இவள் நழுவினாள். ஆனால் விழிகள் எத்தனை கட்டுப்படுத்தியும் ஆதவனிடமே நிலைத்தன. அவனும் இவளையே தான் பார்த்திருந்தான்.

'' ஏய்! அவர் என்ன உனக்கு பழக்கமா? '' தேவி கேட்க திகைத்தாள்.

'' இல்லையே! ஏன் கேட்குறே? ''

'' இல்லை ஆதி! யாரிடமும் சுலபத்தில் பேச மாட்டாராம். எத்தனையோ பெண்கள் அவரிடம் பேச வந்து ஏமாற்றத்துடன் போய் இருக்கிறார்கள். ஆனால் உன்னிடம் இயல்பாய் பேசியதால் இவரே ஆச்சரியப்பட்டுப் போனார். தவிரவும் நீயும் இதுவரையில் யாரிடமும் சகஜமாக பேசியதில்லை, அதனால் தான்... '' தேவி இழுக்க...

'' அதெல்லாம் ஒன்றுமில்லை, உன் கணவரின் நண்பர்; தவிரவும் ஓட்டலின் அதிபர்; இந்த மரியாதையில் தான் பேசினேன். சரி நான் ப்ரண்ட்ஸ்லோட இருக்கேன் '' தோழியிடமிருந்து நழுவினாள். தேவியிடம் அத்தனை சமாதானம் கூறினாலும் அவளின் உள்மனமே அதை ஏற்க மறுத்தது.

எந்த ஆண்மகனையும் நிமிர்ந்து கூட பார்க்காதவள். கல்லூரியில் இவளிடம் பேச முயலும் ஆண்கள் எத்தனை! எதற்கும் இடம் தராமல் ஒதுங்கியிருந்தாளே. பிரபு எந்த வகையிலும் குறையில்லாதவன்

அவனே இவள் முன் மண்டியிட்ட போதும் ஒதுக்கினாளே!!

ஆனால், ஊடுருவும் விழிப் பார்வையாலும், புன்னகையிலும், அந்த தொடுதலிலும் இதயத்தில் ஒரு சிறு சலனத்தை ஏற்படுத்தி விட்டானே.

ஆதவனின் குறுகுறுத்த விழிகள் மீண்டும் போதையை ஊட்டின. முன்பின் அறியா ஒருவனிடம் ஏற்பட்ட இந்த ஈர்ப்பு அத்தனை சரியென்றுத் தோன்றவில்லை.

யோசனையோடு சென்றவளை தோழிகளின் கூட்டம் பிடித்துக் கொண்டது.

'' ஏய்! வெண்ணிலா என்னடி எதிரே நாங்க இருக்கிறது கூட தெரியாமா? எந்த கோட்டையை பிடிக்க தீவிர யோசனை? ''

'' உனக்குத் தெரியாதா? மேன்மை பொருந்திய வெண்ணிலா தன்னை ஆட்கொண்ட அண்ணலை யெண்ணி? ''

'' ஏய்! ''

'' யாரோ ஒரு ஆணழகனோடு பேசிக் கொண்டு இருந்தியே யாரது? ''

'' சீப் கெஸ்ட் ''

'' உனக்கா? ''

'' என்னடி பேச்சு இது? மாப்பிள்ளையின் நண்பர், இந்த ஹோட்டலின் நிர்வாகி. ''

'' கூடவே உன் அடைமொழியையும் சேர்த்துக் கொள்ளலாமே!''

'' அடிப்பாவிகளா? அவரைப் பார்த்து பத்து நிமிடம் தான் ஆச்சு. ''

'' கண்கள் கலக்க ஒரு நொடி போதும் அம்மணி. ''

'' கம்மாயிரு இரு சுதா இவ தான் லேடி விஸ்வாமித்திரர் ஆயிற்றே? ''

'' அப்போ எதைப்பற்றி அரைமணியாய் பேசினாளாம்? ''

''உங்க ஆபீஸில லஞ்ச லாவண்யம் பெருகிப் போச்சாமே...!''

''சேச்சே... லாவண்யாங்கிற பேர்ல நாலு பெண்கள் இருக்காங்க...! அதைத் தான் அப்படி சொல்றாங்க...!

-தேனி, எஸ்.மாரியப்பன்.



'' சாப்பாட்டில் உப்பு இருக்கா? புல் அளவா வெட்டப்படுகிறதா என்று? '' மீண்டும் கொல்லென்ற சிரிப்பு அலைமோதியது.

'' ஆனால் ஒன்னு வெண்ணிலா! உங்க ரெண்டு பேருக்கும் சூப்பர் பொருத்தம் ''

'' ஆள் மட்டும் இல்லை ரதி. இருவரின் பெயரும்! அய்யாவின் பெயர் ஆதவனாம். மேடம் பெயர் வெண்ணிலா கேட்க வேண்டுமா?''

'' அப்போ டே அண்ட் நைட் இணைந்தவர்னு சொல்லு '' சுதா கண்ணடிக்க,

'' ச்சீ விட்டால் அவரோடு எனக்கு கல்யாணமே பண்ணி வச்சிடுவீங்க போல இருக்கே! இனிமே உங்க கூட பேசினா எனக்கும் கிறுக்குதான் பிடிக்கும் '' தோழிகளின் கிண்டல் பேச்சுகளில் இருந்து விடுபட்டு கிளம்பினாள்.

கண்கள் தேவையில்லாமல் ஆதவனைத் தேடின. ஆனால் பிரபு இடைமறித்தான். '' என்ன வெண்ணிலா, பணக்காரனைப் பார்த்ததும் பல் இளிக்கிறாயே? அவனை விட எந்த விதத்திலும் நான் குறைந்தவன் இல்லையே. ''

'' யூ இடியட்...! உனக்கு ஒருமுறை சொன்னால் புரியாதா? அறிவில்லை? இனிமே இதே மாதிரி ஏதாவது உளறினா மரியாதை கெட்டுடும் ஜாக்கிரதை. '' விரலை நீட்டி எச்சரித்தபடியே நகர்ந்தாள்.

இருடி இரு. திமிராகவா பேசுறே? இந்த திமிரை அடக்குறேன். இங்கேயிருந்து போறதுக்கு முன்னாடி உன்னை அடைஞ்சே தீருவேன் மனதிற்குள் கறுவினான்.

மேற்கொண்டு இசைக் கச்சேரி தொடர்ந்தது. வசீகரா... என்ற பாடல் ஒளிபரப்பாகிட வெண்ணிலாவும், ஆதவனும் சில நேரங்களில் இணைந்தார்கள்ல, பிரிந்தார்கள், பார்வைகளால் ஒருவரையொருவர் விழுங்கினார்கள்.

ஏக்கங்களை சுமந்தபடி கரைந்திருந்தார்கள். விருந்து முடிந்தது. அவரவர்களில் பெண்கள் நான்கு பேருக்கும் தனி அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. தோழிகள் அனைவரும் களைப்பால் உறங்கிட வெண்ணிலாவிற்கு மட்டும் ஏனோ உறக்கம் வரவில்லை. மனம் முழுக்க ஆதவனே நிறைந்திருந்தான்.

ஆண்களின் மேல் ஒரு பிடிப்பே இல்லாமல், இருந்தவளை திரும்பி பார்க்க வைத்தவன் அல்லவா! இது சரியா, தவறாயென்று மனதினுள் மெல்லிய போராட்டமே நிகழ்ந்தது. அம்மாவின் முகம் ஒருமுறை மனதில் தோன்றியது.

எத்தனை போராட்டங்கள், எத்தனை வலிகள் எல்லாவற்றையும் எனக்காகத்தான் தாங்கிக்கொண்டு சொல்லம்புகள் இதயத்தில் புண்ணாக்கிய போதும், என் வாழ்வு மலர போராடியவள் ஆயிற்றே!

சூடுபட்ட பூனை அவள். இப்போது ஆதவன் பொறி வைக்கி

நானோ! ஜன்னலின் திரையை விலக்கினாள். எதிரே சலனமே இல்லாமல் நீச்சல் குளம்! பொன்னிற விளக்கு ஒளியில் நீர் மின்னியது. தோழிகள் அனைவரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர்.

4

இரவுக் கோழியாய் இவள் மட்டும் நீச்சல் குளம் நோக்கி நடந்தாள். அலைகளற்ற அந்த பச்சைநிற நீரின் மேல் இளநீல வளையங்கள் மிதந்தன. மஞ்சள் நிற ஒளியில் மின்னிய அந்த நீரை விரல்களால் அளந்தாள்.

வெது வெதுப்பாய் இருந்தது. குளித்தால் தேவலாம் போலிருக்க, நைட்டியின் மேல்கோட்டை நீக்கி விட்டு நீரில் அமிழ்ந்தாள். வெதுவெதுப்பான நீர் உடலுக்கு இதமாய் இருக்க, அத்தனை நேரம் களைத்து இருந்த மனமும், உடலும் உற்சாகம் கொண்டது.

மேலும் ஐந்து நிமிடங்கள் நீந்தியெழுந்து அருகேயிருந்த தொங்கு ஊஞ்சலில் சரிந்தாள். தென்னை மரத்தின் தாலாட்டு, காலையில் இருந்து வேலை செய்த அலுப்பும் நன்றாய் உடல் சோர்க்க நீந்தியதும் சேர்த்து சுகமாய் உறக்கம் வந்தது.

கனவில் ஆதவனின் குறும்பான கண்கள், ஆளை அடித்துப்போடும் புன்னகை, வசீகரமான பேச்சு ஒன்றோடு ஒன்றாய் மாறி மாறி வந்து இம்சித்தது.

அரைத்தூக்கத்தில் இருந்தவளுக்கு மெல்ல யாரோ ஊஞ்சலை ஆட்டுவது போல் தோன்ற திகைப்புடன் கண்களைத் திறந்தாள். எதிரே ஆதவன் ஊஞ்சலில் ஒரு கை வைத்து ஆட்டியபடி இருக்க, ஒரு கணம் இது கனவோ என்று தோன்றினாலும், உண்மை உரைக்க தூக்கி வாரிப்போட்டது இவளுக்கு.

ஏனெனில் அவளின் சயன நிலை படபடவென்று எழுந்திருக்க முயன்று தோற்றுப் போய் மீண்டும் விழுந்தாள்.

'' என்னம்மா! மகாராணிக்கு தூக்கம் கலைஞ்சிடுச்சா. ''

'' ஸாரி நான் அசந்து...! ''

'' தூங்க எல்லாம் அனுமதி வேணுமா என்ன? '' கேட்டபடியே அவன் இறங்க கை கொடுக்க, ஒரு கணம் தயங்கி பின் தந்தாள் மீண்டும் விரல்களின் பரிசம்,

'' தென்றலின் முன்னால் உன் பார்வைகள் என் உயிர் பூட்டைத் திறக்கும் சாவிகள்! விழிகளின் ஸ்பரிசத்தில் இருந்தே நான் மீளவில்லை, இந்த விரல்களின் ஸ்பரிசம் தேவையில்லையே! ''

'' என்ன? விழித்துக் கொண்டே தூங்குகிறாயா? ''

'' நீங்க எப்படி இங்கே? ''

'' நான் உறங்குவதற்கு முன்பு சற்று காலார நடப்பது வழக்கம். அதே போல் வந்தேன் நீ உறங்கிக் கொண்டு இருந்தாய். ''

சரி தொந்தரவு செய்ய வேண்டாமென்று...! ''

'' அதிக நேரமாகி விட்டதா? ''

'' அரை மணி தான் ''

'' கடவுளே! எழுப்பியிருக்கலாமே! ''

'' மனிதர்களை உறக்கத்தில் எழுப்புவதே தவறு. கடவுளை வேறு எழுப்ப வேண்டுமா? ''.

'' அதனால் தான் வெண்சாமரம் வீசினீர்களா? ''

'' ஏன் கூடாதா? '' பொருள் பொதிந்த பார்வையொன்றை அவள் புறம் வீசினான். ஸ்லீவ்லெஸ் நைட்டியின் ஈரம் காய்ந்து இருந்தாலும் மெல்லிய உடையென்பதால் அவள் பனிச்சிட்டது. ஆதவனின் ஏக்கமான பார்வையை சந்தித்த போது தான் தன் உடைபற்றிய நினைப்பே வந்தது அவளிற்கு!

அதை உணர்ந்தவன் போல், அவள் மேலாடையை எடுத்துப் போர்த்தினான்.

'' நான் வருகிறேன் ''

நகர முயன்றவளை கரம் பற்றி இழுத்தான்.

'' என்ன அவசரம். நடுங்குகிறாய் உட்கார் சூடாய் ஒரு கப் காபி சாப்பிடு, வா '' எதிரே இருந்த நாற்காலியில் அவளை அமர வைத்தான்.

இவன் கண்களுக்கு மட்டுமல்ல, கைகளுக்கும் ஏதோ சக்தி இருக்க வேண்டும்.

'' கருங்கடலாம் உன் கண்கள் அலைபாயும் விழி கூட்டிற்குள் அகப்பட்டு விட்டேன் நான், இமையென்னும் கரை சேர காதல் படகில் ஏறிவிட்டேன்! ''

'' நிலா! '' முகத்திற்கு நேராய் நீட்டிய அவன் விரல்கள் அவளை நிகழ் உலகிற்கு கொண்டு வந்தன. '' உனக்கு கண்களைத் திறந்தபடியே கனவு காண்பது பிடிக்குமோ? இந்தா காபி. '' நீட்டிய கோப்பையை வாங்கியவள், பருகியதும் புது தெம்பு வந்ததைப் போல உணர்ந்தாள்.

'' மணப்பெண் உனக்கு நெருங்கிய தோழியா நிலா? ''

'' ம்... இருவரும் சிறுவயது முதலே நல்ல தோழிகள். ''

'' இப்போ என்ன பண்றே? ''

'' பி.பி.ஏ. தேர்ட் இயர் படிக்கிறேன். ''

'' மேற்கொண்டு என்ன படிப்பா? இல்லை திருமணமா? ''

'' இரண்டுமே இல்லை! வேலை, மூன்று வேளை உணவும், உடையும் அளிக்கும்படி ஒரு வேலையைத் தேடிக் கொள்ள வேண்

டும். எத்தனை நாள் தான் என் கார்டியன்களுக்கு தொந்தரவாய் இருப்பது? ''

'' கார்டியனா? உன் பேரண்ட்ஸ்? ''

'' எனக்குன்னு யாரும் இல்லை. நான் அனாதை இல்லத்தில் வளர்ந்தவள். உறவுன்னு யாரும் இல்லை. அம்மாவும் காலமாகி நான்கு வருடமாகி விட்டது. இல்லத்து நிர்வாகியான பாதரின் உதவியால் யாரோ சிலர் படிக்க வைக்கிறார்கள். ''

அவன் முகம் சற்றே கனிந்தது. '' யாருமில்லை என்று எண்ணாதே கண்மணி! '' என்று அவளை அணைத்து ஆறுதல் சொல்ல வேண்டும் போல் இருந்தது. தன்னை அடக்கியபடியே பேச்சை மாற்ற விரும்பி அவளின் விருப்பு வெறுப்புகள் பற்றி பேசத் துவங்கினான்.

இயல்பான பேச்சில் நேரம் கழிந்தது. '' வாரேன் ஆதி! நேரமாயிட்டது. ப்ரண்ட்ஸ் யாராவது பார்த்திட்டா ரொம்பவும் கிண்டல் பண்ணுவாங்க. காலையிலேயே அவங்க கிட்ட மாட்டிக்கிட்டு...! ''

'' எதைப்பற்றி? ''

'' நானும், நீங்களும் ஒன்றாய் பேசிக்கிட்டு இருந்ததைப் பற்றி...''

சிரித்தான், '' நிலா... நம் நட்பு மேலும் தொடர வேண்டுமென்று நான் விரும்புகிறேன். '' ஆதவன் அவளை நோக்கி கையை நீட்ட இவளும் நீட்டினாள்.

பற்றிய கரத்தை விடாமல் தன் உதடுகளுக்கு அருகில் கொண்டு போய் மென்மையாய் முத்தம் பதித்தான். உடல் சிலிர்த்தது வெண்ணிலாவிற்கு!

கண்களை மூடிக் கொள்ள, முகத்தினை இரு கரத்தினால் ஏந்தி மூடிய இமைகளுக்கு முத்தமிட்டான். பின் கன்னம் சுவைத்து இறுதியில் இதழ்களை சிறைப்படுத்தி... இவள் மொத்தமாய் தன்னிலை

'பல தடவை ஜெயிலுக்குப் போயுமா நீ இன்னும் திருந்தலை?'

'ஜெயிலுக்கு போனாலும் திருந்த மாட்டேன்றதைப் புரிந்து கொண்டு என்னை விட்டுடுங்களேன் எசமான்!'

அரவக்குறிச்சிப்பட்டி
எம். அசோக்ராஜா.



மறந்தான்.

'' நிலா! ஐ லவ் யூ '' மந்திரமாய் ஒலித்தன வார்த்தைகள். ஆதவ னின் கண்களை சந்திக்க திறனின்றி புன்னகையோடு ஓடிப்போய் விட்டாள். ஆதவன் கண்கொட்டாமல் அவளையே பார்த்தான்.

அதையே மற்ற இரு கண்களும் குரோதத்தோடு பார்த்துக் கொண்டு இருந்தன. அவை பிரபுவின் கண்கள்.

எத்தனை நாள் நான் இவள் பின்னாடியே சுற்றி இருப்பேன். ஆனால், இன்று காத்திருந்தவன் பொண்டாட்டியை நேற்று வந்தவன் கூட்டிப்போன கதையாய் இவன் யார் குறுக்கே வர? மனம் முழுக்க எரிச்சல் மண்டிப்போய் இருந்தது. இதை இப்படியே வளர விடக்கூடாது வேரிலேயே நசுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தீவிரமாய் யோசித்தான்.

அவன் மனம் கொடூரமான திட்டம் ஒன்றை யோசித்து அதை உடனே செயல்படுத்தவும் துணிந்தது. வெண்ணிலா புகைச்சலாய் வந்தது பிரபுவின் குரல்.

தனக்கு பின்னால் பின்னப்படும் சதிவலை பற்றி உணராமல் வெண்ணிலா கட்டிலில் ஆதவனை எண்ணியபடி படுத்து இருந்தாள். ஆதவன் தொட்ட இடம் குறுகுறுத்தது. மூடிய போர்வைக்குள் அவன் இருப்பதைப் போல் எண்ணி இருந்தாலும் ரொம்ப தைரியம் தான்.

காலையில் சந்தித்த ஒரு பெண்ணிடம் திடீரென்று முத்தமிட்டு நானும் மடத்தனமாய் எதிர்ப்பு காட்டாமல் ச்சே! என்னவோ அவன் கையைப்பற்றிய அந்த விநாடி என்னை முழுவதுமாய் அல்லவா ஒப்புவிக்க மனம் அசைந்து தந்தது. ஏன் இந்த திடீர் மாற்றம்? நானா இப்படி மாறிப் போனேன்? என்று தன்னைத் தானே எண்ணியபடி வியந்தாள் வெண்ணிலா.

'' டைரியை பிரித்து எழுதினாள். ''

'' ஒரே நினைவுத் தூறலில் நனைகிறோம் நாம். ரசனைகள் மட்டுமல்ல ரகசியங்களும் ஒத்திருக்கின்றன உனக்கும் எனக்கும். உன் வருகையை எதிர்பார்த்தேன் அதிகாலையிலேயே!. ஏனோ நெஞ்சிற்குள் இனம்புரியா குறுகுறுப்பு. வருகிறேன் என்று நீ உறுதியளிக்கும் வரையில் படபடத்த இதயம் தலையசைப்பில் பட்டு சிறகை விரித்துக் கொண்டது. வரப்போகும் அந்த சில மணித்துளிகளுக்காகவே காத்திருக்கிறேன் கடக்கிறேன் நிமிடங்களை!''

''வந்தாய் விழிக்கூண்டிற்குள் எனை சிறை பிடித்து விட்டாய்! பதைபதைக்க பார்வை வலை விரித்தாய்! விழுந்து விட்டேன் அதில்! இருளும் ஒளியும் இணைந்திருந்த நேரம் வான வீதியில் வெண் பனிக்கு மேகத்தில் நீயும் நானும் சஞ்சரிக்கின்றோம்! ''

'' உனை நேரில் காணா நேரம் ஆயிரம் வார்த்தைகளை உச்சரிக்கும் இந்த உதடுகள் நீ அருகில் இருக்கும் நேரம் அரை வார்த்தை பேசக் கூட தயங்குகிறது. எதையோ கேட்க எண்ணி அருகில் வந்தேன், விநாடிக்கும் குறைவான நேரத்தில் என் கரங்களைப் பற்றினாய்! இடைபற்றி இழுத்தணைத்து நெஞ்சின் சூடுரைத்த நேரம்! என் இதழ்களை நோக்கி நீ குனிய, பதறிப் போய் நான் விலக!... உன் துணிவு கண்டு எனக்குள் வியப்பு!

விலகி நின்றேன். தலைசரித்து பார்த்து கரம் நீட்டினாய். உன்னிடம் போக துடித்த, நீட்டிய கரங்களை பற்ற துடித்த என் இரு கைகளையும் கட்டிக் கொண்டேன். குனிந்து இருந்த முகத்தை விரல் கொண்டு நிமிர்த்தினாய்! அடுத்த நொடியில் உன் பிடியில் நான்! என் கைகள் உன்னில் பாதுகாப்பாய். எப்படி அவை உன்னில் சேர்ந்தன?

உன் தொடுதலில் தான் எத்தனை மென்மை? இந்த அணைப்பிற்காகவே ஏங்கியது மனம். உன் இனிய முத்தம் வேகமாய் வந்தடைந்த இதழ்கள் என் இதழ்களை நனைத்துவிட்டு பிரிந்து, பிரிவு தாளாமல் மீண்டும் இணைந்தாய். வெட்கம் தாளாமல் உன்னைத் தள்ளி விட்டு விலகினேன்.

நான் நேசித்த விழிகள் கொஞ்சின. '' வா '' என்னும் ஒற்றைச் சொல் காற்றாய் மிதந்து வர...! மீண்டும் உன் அணைப்பில் கட்டுண்டேன். இதழ்களால் இதயத்தை குடித்தாய்!

விலகி சென்று பின் திரும்பி வந்தாய். மீண்டும் இடையைப் பற்றி அணைத்துக் கொண்டாய். இது பிரிவை உணர்த்திய அணைப்பு. உன் உதடுகள் முகத்திலும், தோள்களிலும், கழுத்திலும் பதிந்தன. ஒரு முழு நிமிட அணைப்பிற்குப் பின் எனை விட்டுப்பிரிந்தாய், சென்று மறைந்தாய்.''

அதே நேரம் அறைக்கதவு தட்டப்படும் சப்தம் கேட்டு கதவைத் திறந்தாள் வெண்ணிலா! ஹோட்டல் பணியாள் ஒருவன் சீருடையில் இருந்தான்.

'' என்ன? '' என்றாள்.

'' மேடம் இங்கே வெண்ணிலாங்கிறது? ''

'' நான் தான்... ''

'' எங்க எம்.டி. இதை உங்களிடம் தரச் சொன்னார். '' என்றான் வெகு பவ்யமாய்.

"அந்த ஆளு திடீனு எப்படி பணக்காரர் ஆனார்?".

''அரசியல் கூட்டங்கள் நடக்கிற இடத்துல செருப்புக்கடை வச்சார் அதான்''

-ஆர்.மதுமதி, மதுரை.

ஏதும் பேசாமல் வாங்கிக்கொண்டவள் கதவை சாத்திவிட்டு, கடிதத்தை பிரித்தாள்.

அன்புள்ள வெண்ணிலாவிற்கு, நான் உன்னிடம் மனம் விட்டு சில விஷயங்கள் பேச வேண்டியிருப்பதால், நாளை காலையில் ரூம் எண் 30க்கு வரவும். பயம் வேண்டாம்.

இப்படிக்கு,

ஆதவன்.

-என்று எழுதியிருந்தது.

இவளும் இத்தனை நேரம் ஆதியை நினைத்துக்கொண்டு இருந்ததைப் போல், அவனும்... நினைப்பே இனித்தது.

5

காலையில் தோழிகள் அனைவரும் மணமக்களோடு சின்னதாய் ஒரு பிக்னிக் கிளம்பிவிட, வெண்ணிலா மட்டும் தனித்து நின்று விட்டாள், யாருக்கும் சந்தேகம் வராத வகையில். ஆனால் பிரபுவும் போகாமல் இருந்ததை அவள் அறியவில்லை. மிகவும் எளிதான ஒரு ஒப்பனையோடு அவள் அறை எண் 30க்கு செல்ல, விதி அவளை இருகரம் நீட்டி வரவேற்றது. இவள் வருகையை எதிர்பார்ப்பது போல் அறை திறந்தே இருந்தது.

உள்ளே நுழைந்தவளின் பார்வையில் இவளின் ஆதவனுக்குப் பதில் பிரபு நின்றிருந்தான்.

''பிரபு நீயெப்படி?''

''தயங்காதே நிலா, நானேதான் வா...! இங்கே நம்ம இரண்டு பேரைத் தவிர வேற யாரும் இல்லை. நான்தான் உன்னை இங்கே வரவழைத்தேன்.''

''நீயா?''

''ஆமாம் நானேதான். யாரோ என்று நினைத்து வந்திருப்பாய். என்னைப் பார்த்ததும் ஷாக்கா? அதுயெப்படி வெண்ணிலா, நாய் மாதிரி நான் பின்னாடியே அலைஞ்சிகிட்டு இருக்கேன். நேத்து வந்தவன் உனக்கு முக்கியமா போய்ட்டான் இல்லையா?, அப்படி என்கிட்டே இல்லாதது அவனுக்கு மட்டும்...!''

''அசிங்கமா பேசாதே பிரபு. இது என் வாழ்க்கை நீ யார் அதைக் கேட்க?''

''இத்தனை நாள்ல ஒருமுறை கூடவா நீ என்னை காதலோடு பார்க்காம இருந்திருப்பே?''

''பிரபு உன் மனம் எனக்குப் புரியுது. ஆனா... காதல் கட்டாயப்ப

டுத்தி வருவதில்லை. இத்தனை நாள் உன்மேல் தோன்றாத உணர்வு ஒரு நொடி சந்திப்பிலேயே அவரிடம் தோன்றிவிட்டது.''

''என்னை விட பணக்காரன் என்ற நினைப்பில் விழுந்திருப்பாய். எது எப்படியானாலும் பரவாயில்லை, இன்று ஒரு முறை மட்டும்...!'' அவள் கையைப் பற்ற வருமுன் பதறி விலகினாள் வெண்ணிலா

''பத்தினி வேஷம் போடாதே கண்ணு, நீ சம்மதிச்சே தீரணும்.''

பேசியபடி வந்த பிரபு திடீரென கீழே விழுந்தான். அவன் பின்னால் ஆதவன் நின்றிருக்க, பொங்கிய நிம்மதியோடு ஆதவனிடம் ஒண்டிக்கொண்டாள் வெண்ணிலா.

நடுங்கியவளை அழுத்தமாய் தன்னுடன் அணைத்தபடியே ''இடியட் உனக்கு என்ன திமிர் இருக்கும்?'' பற்களை கடித்தபடி ஆதவன் பேசினான். ''நேற்றே உன்னை அடித்திருக்க வேண்டும். ஆனால் உண்மை தெளிவாக வேண்டுமே என்று தான் காத்திருந்தேன்.''

''என்ன ஆதி சொல்கிறீர்கள்?''

''நான் சொல்றேன் வெண்ணிலா ஸாருகிட்ட நீயும் நானும் லவ் பண்றோம்னு சொன்னேன். அது உண்மையா பொய்யான்னு வேவு பார்க்கத்தான் அந்த அறைக்குள் இருக்கிறார் மிஸ்டர் ஆதவன்.'' நா எப்போ கூப்பிட்டாலும் நீ வருவேன்னு சொன்னேன்.''

''ஆதி இவன் என்ன சொல்றான்?''

''இந்த ராஸ்கல் என்கிட்டே வந்து உனக்கும் அவனுக்கும் தவறான தொடர்பு இருக்கிறதா சொன்னான். நீ எப்போ கூப்பிட்டாலும் வருவேன்னும் அதை செய்து காட்டறேன்னும் சவால் விட்டான். திட்டமிட்டபடியே உன்னை கூப்பிட்டும் வந்துட்டான். பாவம் நான் இங்கே மறைந்து நின்னு கவனிப்பதை அறியாமல் உண்மையை பேசிட்டான்.''

''அப்படின்னா...!''

''நீ வரும் போதே பின் அறை வழியா நானும் வந்திட்டேன். நான் எண் உண்மை என்னவென்று கவனிப்பதற்காக காத்திருந்தேன். ணியபடியே நீயும்....''

அவன் பேசி முடிக்கும் முன்னரே தன்னை அணைத்திருக்கும் கைகளில் இருந்து விலகினாள் வெண்ணிலா.''

''என்ன கண்ணம்மா'' மறுபடியும் அவளை அணைக்க முயல, தன்னை நோக்கி நீண்டு வந்த கைகளை தட்டி விட்டாள் வெண்ணிலா.

''வேண்டாம் ஆதி...! யாரோ ஒருத்தன் சொன்னதை நம்பி என்னை சந்தேகப்பட்டு வேவு பார்க்க ச்சே....! ஒரு நொடி என்றாலும் கூட என்னை தவறாக நினைக்க உங்களுக்கு எப்படி மனசு வந்தது?'' அவள் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

''இல்லை நிலா நான் நம்பவே இல்லைம்மா...''

''நம்பாமத்தான் இத்தனை நேரமா இங்கேயே ஒளிஞ்சிட்டு

இருந்தீங்களா? ச்சீ... கடைசியில் நீங்களும் உங்க ஆம்பிளை புத்தியை காமிச்சிட்டீங்க இல்லை! ''

'' நிலா... ''

'' பேசாதீங்க!? பார்த்த சில நிமிஷத்திலேயே உங்ககிட்ட நெருங்கிப் பழகினதால என்னை எந்த எல்லைக்கும் போவேன்னு நினைச்சிட்டீங்க அப்படித்தானே! '' கோபமாய் பேசிய அவள் உடல் நடுங்கியது.

'' இல்லேம்மா... என்னையும் கொஞ்சம் பேச விடு... உன்னைப் பற்றி தப்பா சொன்னவனை உன் முன்னாடியே நிரூபிக்கனும்னு தான், நான் மறைந்து நின்றேன். அதுவே என்னை தப்பா நினைக்கும் படி ஆகுமின்னு நான் நினைக்கலே! ''

'' என் மனசை முழுசா உடைச்சிட்டீங்க ஆதி! இந்த பிரபுவை விடவும் தாம் தாழ்ந்து போயிட்டீங்க! இனிமேல் என்னைத் தொடர வேண்டாம். '' கண்ணீரோடு கைகூப்பியபடி அவள் ஆதவனைத் தாண்டி நடக்க,

இவனோ முழுவதுமாய் இடிந்து போய் நின்றான். எப்படி இவளை நம்ப வைக்க? கேள்வி மலையாய் மனக்கண் முன்பு எழுந்தது.

அன்றைய நிகழ்விற்குப் பிறகு ஓரிரு முறை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்ற போதும் அவளை பிடிக்க இயலவில்லை. கடைசி வருடம் படிப்பு என்பதால், ஹாஸ்டலை விட்டு எங்கும் நகரவில்லை, படிப்பிலேயே மூழ்கியிருப்பவளைப் போல அமுங்கினாள். இயல்பிலேயே அவள் யாரிடமும் கலகலப்பாக பேசியது இல்லாதபடியால் யாருக்கும் அது வித்தியாசமாய்ப் படவில்லை. யாரை ஏமாத்தினாலும் அவள் மனதை மட்டும் மாற்ற இயலவில்லை.

ஆதவனின் பேச்சு, அவன் அணைப்பு, முத்தம் என ஒன்று மாத்தி ஒன்று நினைவில் தோன்றியது.

''மன்னர் எதிரியின் புகைப்படத்தை முதுகில் ஒட்டியிருக்காரே...ஏன்?''

''போர்க்களத்திலிருந்து புறமுதுகிட்டு ஓடிவரும் போது, வில் எய்தும் எதிரி நாட்டு வீரர்களை குழப்பத்தான்...!''

-பெ.பாண்டியன், காரைக்குடி

கண்முன்னே அவள் முகம் கண்ணாமூச்சி ஆடியது. எப்படியோ ஓடி ஓடி ஒளிந்தாலும் கல்லூரிக்கே அவன் வந்து நிற்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

பஸ் நிறுத்தத்தில் காத்திருந்த சமயம் காண்டஸாவை உரசியபடி வந்து நிறுத்தியவன் '' உள்ளே வா உங்கிட்டே பேசனும். '' என்றான்.

'' ஸாரி! மிஸ்டர் எனக்கு உங்க கிட்ட பேச எதுவுமே இல்லை. ''

உதடுகள் மறுத்தாலும், கண்கள் அவளையும் மீறி காட்டிய மகிழ்வை நிலாவே உணர்ந்தாள்.

'' நிலா இது பப்ளிக் பிளேஸ், ப்ளீஸ் வா ஐந்தே நிமிடம்....! '' அவன் கெஞ்சிட மறுக்க முடியாமல் காரினுள் அமர்ந்தாள்.

'' சொல்லுங்க என்ன பேசனும்? ''

'' காரை செலுத்தியவனிடம் சலனம் ஏதுமில்லாமல் போகவே, இவளிடம் நீண்ட பெருமூச்சு வெளிப்படுத்தப்பட்டது. ''

காரை சற்று ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் நிறுத்தியவன் அவள் புறம் திரும்பினான். '' நிலா நான் சுத்தி வளைக்கப் பேச விரும்பலை, நேரடியா விஷயத்திற்கே வந்திடறேன். ''

'' எனக்கு உன்னை ரொம்பவே பிடிச்சிருக்கு. பார்த்தவுடனே ஏதோ ஒன்று என்னை சார்த்தது, மயங்கினேன் விளைவு என் வேலையில் கூட என்னால் சரிவர கவனம் செலுத்த முடியவில்லை. எப்பவும் தவிப்பா இருக்கு யூ நோ. நிலா இந்த தவிப்பு எனக்கு புதுசு நான் எதற்காகவும் இப்படி ஏங்கியது கிடையாது. யதார்த்தமா யோசி, முதல் நாளே பார்த்த பெண் உன்னை என் வாழ்க்கைத் துணையா ஏற்கத் தயாராயிட்டேன். ''

'' ஆனா திமர்னு யாரோ ஒரு ஆள் இல்லை உன் கூட படிக்கிற ஒருவனே வந்து தப்பா சொல்லும் போது உண்மை உணர நினைத்தது தப்பா சொல்லு? ''

''இப்போ நான் என்ன சொல்லணும்னு எதிர்பார்க்குறீங்க? நடந்த தவறை நான் மறந்திட்டேன்னு உங்க மடியிலே விழ சொல்றீங்களா? கூடப்படிச்சவன் பொறாமைல சொல்லிட்டா தப்பா நினைப்பீங்களா? அன்பு, காதல் சொல்லி புரியறது இல்லை ஆதி.... பார்வையிலும், தொடுதலிலும் உணர்ற விஷயம். அதை உணர முடியாத உங்களோடு எதிர்காலமின்னா நான் எப்படி ஒப்புக்கொள்ள முடியும். ''

'' இதுக்கு முடிவு தான் என்ன? ''

'' உங்க கண் அசைவிற்கே ஆயிரம் பெண்கள் வந்து விழுவாங்களே! இருந்தும் என்னையேன் தேட வேண்டும். ஆசை ஆசையாய் முளைத்த விதை வேரிலேயே கருகிப்போச்சு. இனியும் என் வரையில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. இதுவே நம்ம சந்திப்பின் கடைசி நேரமாக இருக்கட்டும். ''

'' பை....! '' சொல்லிவிட்டு திரும்பிப் பாராமல் நடக்க, ஆத

வனோ தலையில் ஆணவைத்துக் கொண்டான். தன் மேல் தவறில்லாத போதும் கிடைத்த தண்டனை ரொம்பவே உறுத்தியது. எத்தனை வெற்றிகள், கேடயங்கள் எல்லாம் சின்ன பெண்ணிடம் அடி பட்டு விட்டதே, என்று தவித்தான்.

நிலாவோ தன் மீதிப்படிப்பை முடித்துவிட்டு, ஆசிரமத்துப் பாதரின் உதவியால் சென்னையில் இருந்தால் மீண்டும் ஆதவனின் கண்களில் பட வேண்டும் என்ற நினைப்பில் ஊட்டிக்கு வந்து வேலைக்கு சேர்ந்தாள். இங்கு வந்து சேர்ந்த இத்தனை நாட்கள் மற்றவர்களிடம் இருந்து சற்று விலகினாலும், அவ்வீட்டு பெரியவர்களிடத்தில் ஓர் ஈர்ப்பு உண்டாகத்தான் செய்தது.

அதிலும் சந்திரசேகரின் கண்களின் பளபளப்பு எதையோ உணர்த்தியது. அன்பிற்காய் ஏங்கித்தவித்த உள்ளம், இடையில் உண்டான தோல்வி என கலங்கிய மனதிற்கு இந்த முதியவர்களின் அன்பிற்கு பாத்திரமாக்கியது.

அண்டி வாழ்வதற்கு ஒரு நிழல் கிடைத்து விட்டது என்ற மனமகிழ்வில் இருந்தவளுக்கு ஆதவனின் வரவு அதிர்வைத்தான் உண்டாக்கியது. இவளைச் சீண்டிக்கொண்டே இருக்கும் அவனிடமிருந்து தப்புவதும் முடியுமா?

இந்த இடத்தில் கிடைக்கும் சம்பளம் அதிகப்படியாததால் தன் தேவைக்கு போக மீதியில் இரண்டு மாணவர்களைப் படிக்க வைத்து வந்தாள். ஆதவனுக்கு பயந்து வேலை வேண்டாமென்றால், அவர்களின் கதி மோசமாகுமே! தவிரவும் இவ்வீட்டு பெரியவர்களிடம், பாதரிடம் என்னவென்று சொல்லுவாள். குழம்பிய நிலையிலும், ஆதவனின் வரவில் மனம் துள்ளிக்குதித்தது உண்மைதான். என்னதான் ஆதவனின் முன்பு வெறுப்பை கொட்டினாலும் அவள் மனம் முழுவதிலும் வீற்றிருக்கும் ராஜன் அல்லவா!

அவனின் அன்பை ஏற்கவும் முடியாமல், விலக்கவும் முடியாமல் தவிக்கின்றாளே இது என்று தான் தீருமோ!

அவள் கைப்பேசி ஒலித்தது.

சிந்தனையை ஒதுக்கி வைத்தவள் '' ஹலோ....''

'' நான் பாதர் பேசுகிறேன் ராணிம்மா! நாளைக்கு நம்ம அர்ச்சனுக்கு செகண்ட் ஹியர் பீஸ் கட்டணும்மா மறந்திட்டியா? ''

உண்மையில் எப்போதும் ஒரு நாள் முன்பாகவே அனுப்பும் அவள் இப்போது மறந்தே போக பாதர் கேட்கும்படி வைத்துக்கொண்டோமே என்ற திகைப்பில் '' ஸாரி பாதர் கொஞ்சம் வேலை அதிகம் அதனால் மறந்து விட்டேன். '' என்றாள்.

'' பரவாயில்லேம்மா சும்மா நினைவுப்படுத்திஜேன். வேலை ரொம்பவும் கடினமாம்மா....! உடம்பை பார்த்துக்கொள். அந்த வீட்டுப் பெரியவர்கள் கூட பேசினார்கள். உன்மேல் அத்தனை அன்பு, நல்ல இடத்தில் உன்னை சேர்த்த நிம்மதிம்மா எனக்கு! ''

'' எல்லாம் உங்க ஆசீர்வாதம் பாதர். அர்ஜுனை கொஞ்சம் நேரில் வந்து கலெக்ட் பண்ணிக்க சொல்லுங்க பாதர் எனக்கு கொஞ்சம் ஹெவி ஒர்க் இருக்கு. ''

''சரிம்மா... ராணிம்மா! நாளைக்கு உங்க அம்மாவுடைய நினைவுநாள்.

''தெரியும் பாதர் அர்ஜுனிடம் பணம் தர்றேன். குழந்தைகளுக்கு இனிப்பு வாங்கி தந்திடுங்க.'' நன்றி செலுத்திவிட்டு போனை வைத்து விட, அம்மாவின் நினைவு நாளையும் அவள் மறந்துதான் போயிருந்தாள்.

இதென்ன ஆதவனின் அரை நாள் சந்திப்பே இப்படி எல்லாத்தையும் மறக்கடித்து விட்டதே! இதே நிலை நீடித்தால் மன அமைதி சாத்தியம் தானா? என்று யோசித்தாள். கண் முன்னால் ஆதவனின் உருவம் தோன்றி, என்னை விட்டு எங்கும் போக முடியாது என்று குறும்பாய் சிரிக்க, இவள் அயர்ந்தே போனாள்.

6

ஆதவன் மனம் முழுக்க பரவிய நிம்மதியோடு தோட்டத்தில் நடைபயின்று கொண்டு இருந்தான். மாலை மங்கிய நேரம் இருளிலும் இனிமை, தனிமை கொடுமை என்பார்கள். ஆனால், காதலில் விழுந்தவர்கள் பெரும்பாலும் தனிமையிலேயே கழிப்பார்கள். தனக்கென்று உலகம் சுழல்வதைப் போல் தோன்றும்.

உலகம் முழுமையும் குறுகுறுப்பாய் காண்பதாய் உணர்வும், இறக்கை கட்டி பறக்கும் மனம், உடல் ஒருபுறமும் உயிர் ஒருபுறமும் வாழும் உன்னதமான நிலையது!

''இரு கண்களின் இடைவெளியில்
இமைகளுக்குப் பதில்
என்னவளின் இதழ்களை
படைக்கலாமே இறைவா...!''

என்று இறைவனுக்கே கட்டளையிடும் மயக்க நிலை.

அப்படியொரு மயக்க நிலையில் தான் ஆதவனும் அப்போதிருந்தான். பாதையெங்கும் மஞ்சள் நிறப்பூக்கள் சிதறி படுக்கையாய் விரிந்திருக்க, கண்களை கொள்ளை கொள்ளும் வண்ணம் ரம்மியமாய் இருந்தது. அந்த இடம்...

இடையில் ஏதோ பேச்சுக்குரல் அவன் கவனத்தை கலைத்து சட்டென திரும்பினான் ஹோட்டல் பணியாளர்கள்

லாவண்யா-வருண்.

லாவண்யாவின் அழுகையைக் காணத் தவிப்பாய் இருந்தது வருணிற்கு!

''என்ன லாவண்? ஏன் இப்படி அழுவுறே? நீ அழுதா உன்னோட கிளாமர் கொஞ்சம் கம்மியாகுதும்மா. உன் கண்ணில் நீர் வழிந்தால்... என் கண்ணில்....!'' அவன் பாடத் துவங்கும் போதே பட்டென்று கையில் அடித்தாள்.

''ராஸ்கல் உனக்கு பாட்டு வேறயா? என்னை பெண்பார்க்க வர்றாங்கன்னு சீரியஸா பேசிக்கிட்டு இருக்கேன், நீங்க காமெடியா பண்றீங்க?''

''ஏய்! இப்போவென்ன கல்யாணமா ஆயிடுச்சு. அதனாலதான் இந்த பாட்டு பாடினேன். இல்லேன்னா ''அவள் பறந்து போனாளேன்னு! பாடியிருப்போன்.''

''டைமிங் லாங்கா - நா போறேன், போ!''

''எங்கே?''

''பொண்ணு பார்க்க வர்றவனையே கல்யாணம் பண்ணிக்கப் போறேன்.''

''என் மேல என்னம்மா திடீர் கரிசனம்?''

''ஓ...!'' கோபமாய் எழ முயன்றவளை தன் மேல் சாய்த்துக் கொண்டான் வருண்.

''என்ன டார்லிங் இது? நான் ஒருத்தன் இருக்கும் போது நீயேன் கவலைப்படறே? உன்னைத் தூக்கிட்டுப் போக முடியாட்டியும், அட்லீஸ்ட் ஆட்டோவிலாவது கூட்டிட்டு போக மாட்டேனாயென்ன?''

அவன் கேட்ட பாவனையில் களுக்கென்று சிரித்து விட்டாள் லாவண்யா.

''இப்போ எத்தனை இதமா இருக்கு. சொல்லு லாவண். நான் உங்க அப்பாகிட்டே பேசட்டுமா?''

அவசரமாய் தலையாட்டி மறுத்தாள். ''எனக்கு பயமாயிருக்கு வருண். அப்பாவுக்கு காதல்னாலே பிடிக்காது''.

''நாட்டுலே எந்த அப்பனுக்குத்தான் இதெல்லாம் பிடிக்குது. பேசாம ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாமா?''

''நடக்கிற விஷயமா பேசுங்க?''

'' என் நடக்காது? என்னை நம்பி வரமாட்டியா?''

''பிரச்சனை உங்க மேல நம்பிக்கை இருக்கா இல்லையாங்கிறது இல்லை? பெரியவங்க வயித்தெரிச்சலைக் கொட்டிகிட்டு நம்ம வாழ்க்கையைத் துவங்க வேண்டாம்.''

''வர வர கிழவியாயிட்டே லாவண். உன்னைச் சொல்லித் தப்பில்லை. உனக்கு டிரைனிங் கொடுக்கிற ஆள் அப்படி?''

''மேடமை குறை சொல்லலைன்னா உனக்கு தூக்கமே வராதே?''

''பாலிசிட்டில் இங்கிங் முக்கியம் டார்லிங். நல்ல படிப்பு வேலைன்னு எல்லாமே நம்மிடம் இருக்கு. முயற்சி பண்ணாமலே ஏன் முடியலைன்னு சொல்லணும்.''

''வெரிகுட் வருண் நீங்க சொல்றது தான் கரெக்ட்''. புதிய குரலுக்கு சொந்தமானவன் தன் முதலாளி என்ற நினைப்பில் இருவரும் அதிர்ந்து எழுந்தனர்.

'' ஸார் அது வந்து...!''

''பதட்டப்பட வேண்டாம். நான் உலாவ வந்த இடத்தில் எதேச்சையாய் உங்க பேச்சு காதில் விழுந்தது''.

''ஸார்! நாங்க இரண்டு பேரும் மூணுவருசமா லவ் பண்றோம். நானும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவங்க அப்பாகிட்டே பேசலாம்னு சொன்னா, இப்போ வேணாம் வேணாம்னு சொல்றா ஸார்?''

''ஏன்? லாவண்யா?''

''அப்பாவுக்கு உடம்பு சுகமில்லை ஸார்... தேவையில்லாம ஏதாவது பேசப்போய்...!''

''இப்படியே பயந்துகிட்டே இருந்தா நீங்க இரண்டு பேரும் அறுபதாம் கல்யாணம் தான் செய்துக்கணும். நீங்க உங்க காதலில் உறுதியா இருந்தால் நானே உங்க வீட்டிலே வந்து பேசி சம்மதம் வாங்குறேன்.''

''நன்றி ஸார்...''

''ஆல் தி பெஸ்ட்...''

'' இது தான் ஆண்களோட மனசு. கேட்டவுடனே முடிவு சொல்லிட்டோம் பார்த்தியா? நீயும் உங்க மேடமும் போட்டு இழுப்பீங்களே?''

''மேடம் ரொம்ப நல்லவங்க வருண்''

''யாரைப் பற்றி பேசுறீங்க?'' -ஆதவன்

''எல்லாம் நம்ம ராணி மேடத்தைப் பற்றித்தான் ஸார்.

'எங்கள் கட்சி தென்னை மரம் மாதிரி 'ஓங்கி வளரும் கட்சி'னு சொல்கிறீர்களே?'

'வேறு எங்கும் கிளைகள் இல்லை!'

-எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

அவங்களும் சின்ன வயசு தானே. எப்பவும் முகத்தை சீரியசா வைச்சிருப்பாங்க. அவங்க சிரிச்சு நான் பார்த்ததேயில்லை.''

வருண் குறைப்பட்டுக் கொள்ள லாவண்யா அவன் காதை செல்லமாய்த் திருகினாள்.

வலியோடு காதைத்தேய்த்த படியே சிரித்தான் வருண். ''பிரச்சனை தீர்ந்தவுடன் எத்தனை சந்தோஷம். இது நிலைக்க வேண்டுமெனில் இவர்களின் திருமணம் விரைவில் நடக்க வேண்டும்.

இவர்களைப் போல் தன் திருணத்துக்கு அப்பாவிடம் அனுமதி கேட்க பயந்து யோசிக்க வேண்டியதே இல்லை அவன்.

''இந்தப் பெண்ணை விரும்புகிறேன் என்று யாரைக் கூட்டி வந்தாலும் சரியென்று ஒப்புக் கொள்பவர். அத்தோடு அவனின் திருமணத்தை ஆவலோடு எதிர்பார்ப்பவரும் கூட, ஆனால் இவனை ஏற்கத் தயங்கி நிலா முறைத்துக் கொண்டு நிற்கிறாளே, என்ன செய்யப் போகிறேனோ...?'' யோசனையோடு வீடு நோக்கி நடந்தான் ஆதவன்.

அதிகாலை நேரத்தில் தோட்டத்தில் நடைபயிற்சியை முடித்து விட்டு புல்வெளியில் அமர்ந்து பத்திரிக்கையை புரட்டிக் கொண்டிருந்தான் ஆதவன். இருளெல்லாம் இருளாகவே இருந்து விடுவதில்லை. வெளிச்சத் துளிகளை தூவி இருளென்னும் வெற்றுப் பள்ளத்தை நிரப்பிக் கொண்டிருந்தான் சூரியன்.

வெள்ளையும் கருப்புமாய் பூக்கள் பூத்திருந்த புடவையுடன் நீளமான சரக் கூந்தலை முதுகில் பா ர விட்டு கையில் ஒரு தட்டோடு நடந்து வந்தாள் ராணி. பங்களாவில் லாபில் அமர்ந்திருந்த இவன் புறம் பார்வையைத் திருப்பாமல் உள்ளே நுழைந்தாள்.

ஆதவனுக்கு ஒரு கணம் சிரிப்பு பீறிட்டது. கேட்டருகே வரும் வரையில் அவனைப் பார்த்தபடியே வந்தவள். அருகே வந்தவுடன் பார்வையைத் திருப்புவதைக் காண வேடிக்கையாகவும் இருந்தது. எதற்காக வந்திருக்கிறாள் என்பதை அறிவதற்காக அவனும் உள்ளே சென்றான்.

அவள் ''அம்மா'' என்ற குரலோடு உள்ளே நுழையவும், தாமரை அம்மாள் பூஜையறையில் இருந்து வெளியே வந்தவள் சிறு முறுவலோடு, ''வாம்மா உட்கார்'' என்றார் வாஞ்சையுடன்.

''அம்மா இன்னைக்கு எங்கம்மாவுடைய நினைவு நாள். வருஷாவருஷம் யாராவது ஒருத்தருக்கு அம்மா நினைவாக புடவை எடுத்து தர்றது வழக்கம். இந்தமுறை உங்களுக்குத் தாணுமின்னு தோணிச்சு ஏத்துப்பீங்களாம்மா?''

''ராணி! அன்பு என்று கொடுக்கிற பொருளில் இல்லை! தர்றவங்க மனசில் இருக்கு. உன் தாய்க்கு இணையா என்னை நினைச்சுத் தர்றியே அதுக்கு நல்ல மனசு வேணும்மா''.

தட்டில் கொண்டு வந்த புடவை ரவிக்கை, வளையல், பூச்சரம், குங்குமம் முதலியவற்றை அவரிடம் நீட்டினாள். வாங்கியவரின் காலில் விழுந்து வணங்கினாள். குங்குமத்தை எடுத்து சிறு தீற்றலாய் அவள் நெற்றியில் இட்டார். தன் கழுத்தில் அணிந்திருந்த தங்க சங்கிலியையும் அணிவிக்க இவளோ பதறினாள்.

''அம்மா இதெல்லாம்?...!''

''உஷ்...பேசக்கூடாது. நீயென்னைத் தாயா நினைச்சே. நான் உன்னை மகளா பாக்கிறேன். ராணி உண்மையை சொல்லணும். உனக்கும் எனக்கும் ஏதோவொரு பந்தம் இருக்குன்னு என் மனசு சொல்லுது.''

''என்ன தாமரை! உன் மனசு சொல்லுது?'' கேள்வியோடு வந்தார் சந்திரசேகர்.

''ராணியோட அம்மாவிற்கு நினைவு நாளாம் எனக்கு புடவையெல்லாம் தர்றா''.

''ஏம்மா உனக்குயேன் இந்த ஓரவஞ்சனை. அம்மாவிற்கு மட்டும்தானா? எனக்கு வேட்டி சட்டை இல்லையா?'' அவர் கேட்க.

அம்முதியவர்களின் அன்பில் இவள் கரைந்தாள்.

''ராணி ஏதாவது சாப்பிட்டியா?

''தேங்காய் பாலும், ஆப்பமும் பண்ணியிருக்கேன்.''

''இல்லேம்மா இன்னிக்கு காலையில் விரதம். இன்னொரு வேண்டுகோள். இன்று நீங்க என் கையால சாப்பிடணும்.''

'' கண்டிப்பா நாங்க வர்றோம்''

பெரியவர்களிடம் விடைபெற்று கிளம்பிட, வழிமறித்தான் ஆதவன்.

''எனக்கு அழைப்பில்லையா மேடம்''.

''எதற்கு?''

''இந்தக் காங்கள் பரிமாறி நான் உண்பதற்கு?''

''நீங்க பெரிய ஹோட்டலின் அதிபதி நினைச்சா எத்தனையோ விருந்துகளில் கலந்துக்கலாம் இதெல்லாம் சாதாரணம்''.

''அதை நாலில்லே சொல்லணும்''

''வந்து....!''

''உன் விருந்துபசாரமே சரியில்லையே? குடும்பத்தில் உள்ள எல்லாரையும் அழைப்பது தானே முறை?''

''பிளீஸ் இன்னைக்கு எனக்கு..! வேண்டாம் வம்பு பண்ணாதீங்க? ஸார்...!''

''ஏம்மா விருந்துக்கு கூப்பிடலைங்கிறது வம்பு செய்வதாகுமா?''

மேற்கொண்டு அவனிடம் வாதம் செய்ய மனமின்றிஅவள் வேகவேகமாக நடந்தாள்.

புன்சிரிப்புடன் அவள் போவதையே பார்த்து நின்றான் ஆதவன்.

''வா லாவண்யா...!'' என்னடா இன்னமும் காணலையேன்னு பார்த்தேன்''.

''ஹோட்டலில் கொஞ்சம் வேலை ராணி மேடம்! இப்பத்தான் வருண் வந்தார்! நான் புறப்பட்டு வந்திட்டேன்''.

'' வருணையும் அழைத்தேனே...!''

''சின்னவருக்கு ஏதோ வேலையாம்...! அதனால வருணால ஓட்டலை விட்டு வரமுடியலை, முடிந்தால் என்னை உணவு கொண்டு வரச் சொன்னார்''.

''சின்னவர் எங்கே போறாராம்.?''

''ஏதோ முக்கியமான வேலையா இருக்கும்!''

அதற்கு மேல் பேசாமல் டேபிளில் உணவை எடுத்து வைக்கும் வேலையைக் கவனித்தாள் லாவண்யா.

''ஆதவனையும் அழைத்திருக்கலாமோ?'' என்று எண்ணிய மனதை உடனே அடக்கினாள். வாசலில் அரவம் கேட்டிட திரும்பியவள் தாயுடன் வந்தவனைக் கண்டதும் திகைத்து பின் மகிழ்வுடன் வரவேற்றாள்.

''வாங்கம்மா... வாங்க ஸார்''.

''எதை வாங்கணும்?'' ''சும்மாயிருடா! தாயின் செல்லமான அதட்டலை தலைசரித்து புன்கையோடு ஏற்றான்.

''சாப்பிட வாங்கம்மா....!''

டைனிங் டேபிளில் லாவண்யா இருந்தாள். முதலாளியைக் கண்டதும் சிறு வியப்பு. ரொம்பவும் முக்கியமாய் வெளியே போக வேண்டும் என்று வேலையை ஒதுக்கியவர் இங்கே வந்திருக்கிறாரேயென்று

அதை உணர்ந்தவனாய், ''என்ன லாவண்யா? திகைத்து நிற்கிறே? மேடம் உன்னை சிலையாக்கி நிற்க விட்டார்களா யென்ன?''

''வெல்கம் ஸார் பிளீஸ்...'' உட்கார இருக்கை காட்டி, இரண்டு பெண்களும் பரிமாறினார்கள்.

சாம்பார், சாதம், ரசம் இரண்டு வகைப் பொரியல், அப்பளம் பாயசம் என அற்புதமாய் இருந்தது.

''என்ன கபாலி...வெளிநாடு எல்லாம் போய் திருடுறியாமே?''

''ஆமாங்க எஜமான். இங்க திருடுறது வரவுக்கும், செலவுக்கும் தான் சரியா இருக்கு!''

-பெ.பாண்டியன், காரைக்குடி

''இதையெல்லாம் நீயே செய்தியா ராணிம்மா! உனக்கு நல்ல கைப்பக்குவம்'' தாமரையம்மாள் பாராட்டினார்.

''கரெக்ட்மா...! பேசாம நம்ம வீட்டுக்கு இனிமே இவங்களையே சமைக்க வைச்சிடலாம்''.

''போடா போக்கிரி''

''என் மேடம் எங்களுக்காக சமைக்க தரமாட்டீங்களா என்ன?'' புன்னகையை தவிர்த்து வேறு எதுவும் பேசவில்லை ராணி.

அம்மாவுடைய படத்திற்கு உங்க கையால விளக்கு ஏத்திடுங்கம்மா''.

''சரிம்மா! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு, நான் கிளம்பறேன்! உங்க சாப்பாட்டுக்கு நன்றி மேடம்.'' அவன் கிளம்பும் சமயம், லாவண்யாவின் புறம் திரும்பி ''லாவண்யா உங்களுக்கு ஏதும் வேலையிருக்கா?''

''இல்லை ஸார்?''

''அப்போ கிளம்புங்க! நானும் ஓட்டலுக்குத்தான் போறேன்.வாங்க, டிராப் பண்ணிடறேன்'' என்றான்.

ராணியின் முகம் லேசாய் வாடியது போல் இருந்தது. லாவண்யா இருவரின் புறமும் விடைபெற்று நகர்ந்தாள்.

''வா....ராணிம்மா'', தாமரையம்மாளின் குரலில் திரும்பியவள் பூஜையறை நோக்கி நடந்தாள். ஓவியமாய் வரையப்பட்ட புகைப்படம் அதனை உற்று நோக்கிய கண்கள் அதிர்விலும், மகிழ்விலும் விரிந்தன.

''ராணி இவங்க?''

''எங்கம்மா? பேரு''

''நந்தினி தானே...!''

''அம்மாவை உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியுமாவா? அவங்க வாழ்ந்த வாழ்க்கையும் நல்லாத் தெரியும்''.

''என்னம்மா சொல்றீங்க? எனக்கொண்ணும் புரியலையே?''

''இப்போ எதையும் விளக்கமா என்னால சொல்ல முடியாது. எம் மனசு நீ கொடுத்த பாயசத்தை விடவும் இனிப்பா இருக்கு. நீ பூஜையை முடிச்சிட்டு வீட்டுக்கு வா உங்கிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும்''.

''அம்மா...!''

''நீ பூஜை முடிச்சுட்டு வா! நான் சொல்றேன்''.

தாமரையம்மாவுக்கு சந்தோஷமும், பூரிப்பும் உண்டான காரணம் இவளுக்குப் புரியவில்லை.

தாயின் படத்தை ஒருமுறை உற்று நோக்கினாள். என்னவாக இருக்கும் என்று தனக்குத்தானே கேள்வியும் எழுப்பிக் கொண்டாள்.

7

''என்னங்க உங்களுக்கு ஒரு சந்தோஷமான விஷயம்'', ஓட்டமும் நடையுமாய் வந்த மனைவியைப் பார்த்த சந்திரசேகர்

''எதுவாய் இருந்தாலும் கொஞ்சம் மூச்சு வாங்கிட்டுப் பேசம்மா. இப்படி ஓடி வந்தா உடம்பிற்கு என்னாவது?''

''இனிமே எனக்கு எதுவுமே ஆகாது? என்னோட கவலையெல்லாம் தீர்ந்து போச்சு''.

அதே நேரம் உள்ளே நுழைந்த ஆதவன், அம்மாவின் முகத்தில் பூத்த மலர்ச்சியைக் கண்டவன் ''என்னம்மா ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க?'' என்றான்.

''நல்லவேளைடா தம்பி நீயும்வந்திட்டே, உங்க இரண்டு பேர்கிட்டேயும் முக்கியமான விஷயம் பேசணும். எங்க அண்ணன் தான் உங்க நண்பர் சீனிவாசன் தன்னோட கடைசி காலத்திலே நம்மகிட்டே கேட்ட சத்தியத்தை எங்கே காப்பாற்ற முடியாம போயிடுமோன்னு பயந்தோமே! அதுக்கு ஒரு நல்ல வழி பிறந்திருக்கு''.

''என்ன சொல்றே? அப்பமன்னா நந்தினியும், அவ மகளும் கிடைச்சிட்டாங்களா?''

''கிட்டதட்ட! ஆனா அண்ணி இப்போ உயிரோட இல்லே, ஆனா அந்த பொண்ணு வேற யாரும் இல்லே நம்ம ராணிதான்''.

''அப்படியா? '' இப்போது சந்திரசேகரின் முகத்திலும் மகிழ்ச்சிப் பூக்கள். ஆனால் ஆதவனுக்குத்தான் ஒன்றுமே புரியவில்லை. ''என்னம்மா அண்ணன் என்கிறீர்கள்? அவர் மகள் ராணிங்கிறீங்க? எனக்கு ஒண்ணுமே புரியவில்லையே?''

''கொஞ்சம் நேரம் பொறுடா கண்ணா, ராணியையும் வரச்சொல்லி இருக்கேன். வந்ததும் இரண்டு பேரிடமுமே விவரம் சொல்றேன். முக்கியமா இதை தெரிந்து கொள்ள வேண்டியவர்களே நீங்க இரண்டு பேரும்தானே!''

அப்போது ராணியும் சிறு தயக்கத்தோடு உள்ளே நுழைந்தாள். வெகு ஜாக்கிரதையாய் ஆதவனின் பக்கம் பார்வையைத் திருப்பாமலே,

''வா ராணி உன்னைத்தான் எதிர்பார்த்திட்டு இருக்கேன். உட்காரும்மா''

''இருக்கட்டும்மா...!''

''அட...! நீ ஒண்ணும் சாதாரண ஆள் இல்லையே, என் மருமகளா வேற ஆயிட்டே!'' தாமரையம்மாளின் அந்த பேச்சில் திடுக்கிட்டுப் போய் ஆதவனிடம் பார்வையைத் திருப்பிட அவனும் இவளைப்



போலவே முழித்தாள்.

''என்னம்மா ஆச்சரியமா இருக்கா? அது ஒரு பெரிய கதை, என் சொந்த அண்ணன் பேரு சீனிவாசன் அவரும் இவரும் நெருங்கிய நண்பர்கள். ஒண்ணா தொழில் துவங்கிய நேரம் எங்க இரண்டு பேருக்குள்ளேயும் அன்பு துளிர் விட்டுப் போச்சு. எங்க கல்யாணத்திற்குப் பிறகு நாங்க இவருடைய சொந்த ஊரில் சில நாட்கள் தங்கினோம்.

அண்ணனும் ஏதோ ஒரு பொண்ணைத் திருமணம் செய்து கொண்டதாகவும், ஊருக்கு அழைத்து வருவதாகவும் கடிதம் போட்டு இருந்தார். அப்போ ஆதவன் வயித்திலே மூணுமாசம்''.

''அண்ணி ரொம்ப அழகு, பரமசாது, குணமும் பொடம் போட்ட தங்கம். கல்யாணமாகி வந்து ஒரு வாரத்திலே புறப்பட்டு போனாங்க. சந்தோஷமாகத்தான் இருந்தாங்க. ஒரு பொண்ணும் பிறந்தது''.

''கணவன் மனைவிக்குள்ளே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமா ரெண்டு பேரும் பிரிஞ்சிட்டாங்கன்னு கேள்விப்பட்டு எவ்வளவோ சமாதானம் பண்ணினோம். அண்ணன் அவங்க மேல சேற்றைப் பூசினார். ஆனா அண்ணி எந்தக் குறையும் பேசலை. அவரோட வாழ எனக்குப் பிடிக்கலைன்னு சொல்லி விலகிட்டாங்க''.

''அண்ணனுக்கு எதிலுமே அவசரம்தான். அண்ணியோட நல்ல மனசை புரிந்து கொள்ளலை, இவருக்கும் ஊட்டிலே பிஸினஸ் துவங்கியதாலே நாங்க இங்கே வந்திட்டோம்''.

அண்ணன் சரி ஏதோ கோபத்திலே இப்படி நடந்துக்கிறாங்கன்னும் போகப்போக சரியாயிடுமின்னு நினைச்சேன்.

ஆனா கடலில் போட்ட அவங்க வாழ்க்கை கல்லா அமுங்கிப்

'மன்னர் அரண்மனைச் சுவரில் துளையிடச் சொல்லிவிட்டார்.

'ஏன்?'

'சேடிப் பெண்கள் குளிப்பதைப் பார்த்து ரசிக்கத்தான்

-எம். அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி

போச்சு. அண்ணன் அப்புறம் சுமித்ரான்னு ஒருத்தியை கல்யாணம் என்ற பேர்ல சேர்த்துக்கிட்டார். ஆனா அவ சரியான பணப்பேய். அந்த அடங்கா பிடாரிகிட்டே அண்ணன் பட்டபாடு கொஞ்சம் நஞ்சமில்லை.

''குத்துவிளக்கான அண்ணிக்கு பண்ணின துரோகத்துக்கு தண்டனை அனுபவிச்சிட்டார்! அண்ணனின் போக்கு பிடிக்காததால் நாங்கள் போக்குவரத்தை குறைச்சிகிட்டோம். இப்போ ஒரு இரண்டு மூணு வருஷத்திற்கு முந்தி ஒருநாள் வீட்டுக்கு ஒரு ஆள் வந்து, உங்க அண்ணன் மரணப்படுக்கையில் இருக்காருன்னு சொன்னாங்க''.

''மனசு கேட்கலை, நாங்க பார்க்கப் போனோம். அப்பவும் வாங்கன்னு ஒரு வார்த்தை கூப்பிடலை அந்த மகராசி. அண்ணனை கட்டிலில் படுத்த படுக்கையாய் பார்த்த அந்த நிலைமையிலே எனக்குத் தாங்கலை. மனசு ரொம்பவும் வலிச்சது. அண்ணன் இவர் கையைப் பிடிச்சிகிட்டு அழுதார்''.

''நான் அவளுக்கு செய்த தவறுக்கு நல்லா அனுபவிச்சிட்டேன். கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரங்கிற மாதிரி இத்தனை வருஷம் கழிச்சு செஞ்ச தவறுக்கு பிராயசித்தம் தேடுகிறேன்''.

''என்னண்ணா? இது பெரிய வார்த்தை எல்லாம் பேசிகிட்டு?''

''இல்லே தாமரை! எனக்கு மன்னிப்பு கேட்குற தகுதிகூட இல்லேம்மா''

''டேய் போனவரையில் போகட்டும், இப்போ டாக்டர் என்ன சொல்றார்?''

''எனக்கே என் உடல்நிலைமைப் பற்றித் தெரியும் சேகரா! நான் பிழைக்கிறது துர்பலம் ஆனா கடைசி கடைசியா எனக்கு ஒரு ஆசை நிறைவேத்துவியா?''

''அப்படியெல்லாம் பேசாதேடா?''

''உனக்கு என்ன செய்யணும் சொல்லு?''

''நந்தினி...! நந்தினியை தேடிக்கண்டுபிடிக்க அந்த தேவதையை புறக்கணிச்ச பாவத்திற்கு நல்லா அனுபவிச்சிட்டேன்னு சொல்லி என்னை மன்னிக்க சொல்லுடா சேகரா என் மகளை நீ உன்னோட மருமகளா ஏத்துக்கோ செய்வியா?'' அவர் நாதழுதழுக்க கேட்க,

''என்ன சீனு! இதுயென்ன யாசகம் கேட்கிற விஷயமா? கட்டளை போடுடா நான் உடன்படறேன். இது நம் நட்பின் மேல் சத்தியம். நான் நிச்சயம் நந்தினியைக் கண்டுபிடிப்பேன்''.

பவுடர் பூச்சுடன் கவலை அப்பிய முகமாய் வந்த சுமித்ராவிடம் ''என்ன சொல்றார் சுமித்ரா டாக்டர்?''

''என்னத்த சொல்றது? இவர் படுக்கையில் கிடந்தாலும் ரொம்பவும் படுத்துறார். எரிச்சல்தான் வருது. இப்படி கஷ்டப்படறதுக்கு பேசாம போயிடலாம். எத்தனை பணம் செலவாகுது தெரியுமா?'' சவு இரக்கமின்றி அவள் பேசியதைக்

கேட்டத் தாமரைக்கு எரிச்சலாய் வந்தது.

''பேசிப் பேசிதான் இப்படி எங்கஅண்ணனைப் படுக்க வைச்சிட்டா! அண்ணிக்கு துரோகம் செய்துட்டு இவ வலையிலே விழுந்து இப்போ படுத்தபடுக்கையாய் விழுந்தும் இவர் போயிட்டாத் தேவலைன்னு சொல்ல எப்படித்தான் இவளுக்கு மனசு வருதோ'' என்று கணவரிடம் கண்ணீர் மல்க கூறினார் தாமரையம்மாள்.

''தன் மனதில் இருந்த பெரும்பாரம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது என்று எண்ணினாரோ என்னவோ அடுத்த மூன்றுநாட்களில் அந்த நரகத்தில் இருந்து விடுதலை அடைந்து விட்டார்.

அதோடு அந்த உறவு அற்றுப்போச்சு. அண்ணன் கேட்டுக்கிட்டபடி அண்ணி நந்தினியையும் மகளையும் கண்டுபிடிக்க நாங்க எடுத்த முயற்சிகள் பலனில்லாம இருந்தது. ஆனா இப்போ தான் முயற்சி கைக்கூடியது. ஆனா துரதிர்ஷ்டவசமா அண்ணி இப்போ உயிரோட இல்லை. நல்லவேளை அவங்க மகதான் எங்க கண்ணு முன்னாடி இருக்கா.''

''அம்மா...!''

''ஆமா ராணி! நீதான் என் அண்ணன் மக. உன்னை முதல்ல பார்க்கும் போதே எங்க இரண்டு பேருக்குமே அதிக ஒட்டுதல் இருந்தது. அதுக்கு காரணம் எனக்கு அப்போ புரியலை. ஆனா அண்ணிக்கிட்டே இருந்த அதே பரிவு, அன்பு, அடக்கம், கம்பீரம் எல்லாமே உன்கிட்டேயும் இருக்கு. எம்மனசிலே பெரும்பாரம் இறங்கினாற் போல இருக்கும்மா''.

ராணி பிரமிப்பு அகலாமல் நின்றாள். ஆதவனின் மனம் சர்க்கரைகப்பாகாய் உருகியது.

''என்னம்மா எதுவுமே பேசலே மாட்டேங்கிறே?''

''எனக்கு என்ன பேசறதுன்னே தெரியலைம்மா. யாருமில்லாத அநாதையா இருந்த எனக்கு கிடைச்ச உறவுகளை நினைச்சு சந்தோஷப்படறதா இல்லை அப்பாவால அம்மா பட்ட துன்பங்களை நினைச்சு வருத்தப்படறதான்னு புரியலை''.

''இல்லே ராணி! அண்ணன் மனசு திருந்தி அண்ணியை கஷ்டப்படுத்தியது தப்புன்னு உணர்ந்து தானே மன்னிப்பும் கேட்டு இருக்கிறார்''.

''வார்த்தை கத்தியால மனதைக் குத்தி கிழிச்சிட்டு மன்னிப்புங்கிற ஒரு வார்த்தையிலே எல்லா ரணமும் ஆறிடாது''. இந்த வார்த்தையைப் பேசும் போது அவளையும் அறியாமல் கண்கள் ஆதவனிடம் சென்றது.

''தினம் தினம் அம்மாபட்ட வேதனைகளையும், அவமானங்களையும் கேட்டவ நான், வாழ்ந்த ஒவ்வொரு நொடியும்

நரகம் முள் மேல் வாழ்க்கை, எத்தனை வார்த்தை சாட்டைகள் மாறி மாறி அடிச்சிருக்கும்''.

''ஆண்துணை இல்லாம அவங்க பட்ட இன்னல்கள் எந்த பொது நிகழ்ச்சிக்கும் கூட முன்னால் நிக்கமாட்டாங்க'', மனம் தாளாமல் அவள் விழிகளில் இருந்து நீர் பெருகியது.

தாமரையம்மாள் ஆதரவாய் வந்து தலையை வருடித் தந்தபடியே, ''எந்த மனிதனும் தவறு செய்யாமல் இல்லை. தவறுதல் இயல்பு. மனசுதான் எல்லாத்துக்கும் காரணம். தவறு செய்தவங்க திருந்த ஒரு சந்தர்ப்பம் தரணும் இல்லையா? உங்கப்பா கடைசியா கேட்ட மன்னிப்பு, வருத்தம் எல்லாமே மரணப் படுக்கையில் அப்போ ஒரு மனிதன் கோபம் வெறுப்பு அன்பு ஆசைன்னு எல்லாத்தையும் கடந்து விட்ட நிலைமையில் இருப்பான். அப்படிப்பட்ட நிலைமையிலே தான் அவர் பேசினார்''.

''இருந்தாலும்...! வேறு பெண்ணை மணந்து அவர் சுகப்பட்டு இருக்க நாங்க மட்டும்...!''

''இங்க பாரும்மா... பாதிக்கப்பட்டவங்களும், பாதிப்பிற்கு காரணமானவங்களும் இப்போ நம்ம முன்பு இல்லை, ஒரு வேளை உயிரோட இருந்து இரண்டு பேரும் ஒண்ணா சேர்ந்திருந்தாலும் வியப்பு இல்லை. ஏன்னா அவங்க இணைந்தது காதலால். அண்ணனைப் பிரிந்தாலும் அண்ணி அவரோட நினைவிலேயே தானே இருந்தாங்க''.

''என்னம்மா செய்யறது? அது பெண்களோட இயல்பு. ஒரு முறை மனசுக்குள்ளே நினைச்சிட்டாங்கன்னா உயிருள்ளவரை மறக்க முடியலை''.

''அதே தான் ராணிம்மாம் வேறு பெண்ணை மணந்தாலும் அண்ணனும் மனதால அண்ணியைத் தான் நினைச்சு கிட்டு இருந்தார்ன்னு சுமித்ரா பேச்சிலே நான் புரிஞ்சிகிட்டேன்''.

''இறக்கும் சமயமும் வேதனையோடு தானே அம்மா போனாங்க!?''

''ராணி மன்னிப்போம் மறப்போங்கிறது தான் இயல்பு. அண்ணியோட குணம் உன்கிட்டேயும் இருக்குமே, பழசை மறந்திடும்மா. இனிமே என்னை அத்தைன்னே கூப்பிடு ராணி.

இங்கு நீ வந்து சேர்ந்த இத்தனை நாட்களில் எங்க இரண்டு பேரையும் நீ சொந்த தாய் தகப்பனாத்தான் நினைச்சே. இப்போ எதையாவது காரணம் காட்டி எங்களை விட்டுட்டு போய் விடாதேம்மா. ஏற்கனவே உயிருக்கு உயிரான இரண்டு உறவுகளை இழந்துட்டோம். இனியும் இழக்க மனசுக்கு தெம்பு இல்லை''.

சிறுபிள்ளையாய் மாறி அவர் தேம்பிட அங்கிருந்தோர் நிலை இன்னும் தர்ம சங்கடமாயிற்று.

யாரைவிட்டு ஒரேடியாய் விலகிட வேண்டும்மென்று யோசித்து

நேரம் பார்த்து காத்திருந்தாளோ அவர்களையே உறவுகளாக்கி விதி கண்ணாமூச்சி காட்டுகிறதே. இந்த அன்பை உதறிவிட்டு செல்லவும் மனம் வரவில்லையே!

ஏனெனில் தவறு செய்தது தன் தந்தை இவர்கள் இருவருமே எல்லாரிடமும் அன்பை மட்டுமே செலுத்த தெரிந்தவர்கள் அப்படிப்பட்ட இவர்களை விட்டு பிரிந்து செல்வது என்ன நியாயம்? மனம் முழுக்க குழப்பச் சுவடுகள்.

எல்லாவற்றையும் மீறி அநாதையென்னும் பெயர் மறைந்து தனக்கென்று இருக்கும் உறவுகள் மத்தியில் சிறு ஆறுதல். ''கண்டிப்பா உங்களை விட்டு போகமாட்டேன் அத்தை'' தாமரையம்மாவின் கைகளைப் பற்றி ஆறுதலாய்க் கூறினாள்.

மேலும் சற்று நேரம் அவர்களுடன் செலவழித்துவிட்டு வெளியே வந்தாள். மார்பின் குறுக்காய் கைகளைக் கட்டியபடி நின்றான் ஆதவன்.

''நன்றி!''

''எதுக்கு?''

''அப்பா அம்மாவின் மனதைக் கஷ்டப்படுத்தாமல் இருக்க சம்மதித்ததற்கு!''

''யாரையும் புண்படுத்திட எனக்கு பழக்கமில்லை'' ஆதவன் புன்னகைத்தான்.

''ஏன் சிரிக்கிறீங்க?''

''நத்திங்! ராணி ஹோட்டலுக்கு போவதற்கு முன்னாடி என்கூட வெளியே வாங்க சைட் சீயிங் போகணும்''.

''எதற்கு?''

''வாங்களேன் சொல்றேன்''. காரில் அவன் அருகே அமர மனமில்லாமல் பின் இருக்கையில் அமரப் போனவளை,

''ஒரு நிமிஷம் மேடம் முன்பக்கமே அமரலாம் நான் ஒன்னும் உன்னைக் கடிச்சுத் தின்னுட மாட்டேன்!''

''எனக்கு யார்கிட்டேயும் பயமே இல்லை''.

''சரி உட்காரு''.

அவள் அருகில் அமர்ந்தாள். கோதுமை நிற சல்வாரில் பெரிய பூக்கள் விழித்தன. மெல்லியதாய் மல்லிகையின் வாசம் முதுகில் புரள விட்டிருந்த கூந்தலில் இருந்து வந்தது.

''பட்டிமன்றமே வைக்கலாம் போல் இருக்கிறது''.

''எதற்கு?''

''பெண்களின் கூந்தலுக்கு மணம் இயற்கையா செயற்கையாயென்று?''

''நக்கீரனைப் போல கிணற்றில் விழ வேண்டுமா?''

''நான் தான் ஏற்கனவே விழுந்து விட்டேனே?''

''விளையாட்டுப் பேச்சு வேண்டாம் இப்போ எங்கே

போறோம்?''

''அந்தப்புரத்திற்கு?''

''வாட்?''

''கண்ணை உருட்டாதே தாயே பயமா இருக்கு. நம்ம ஹோட்டலில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் நம் நிலமிருக்கு. அங்கே ஒரு பிக்னிக் ஸ்பாட் கட்டற ஐடியாவில் இருக்கிறேன். இப்போ அந்த சைட்டைப் பாக்கத்தான் நாம போறோம் உன்னோட ஐடியாஸ் இருந்தாலும் சொல்லு''.

''ஷ்யூர்...!''

வண்டியை விட்டு இறங்கியவர்களை வரவேற்றான் வருண்.

''வெல்கம் ஸார், வெல்கம் மேடம்''

''யெஸ், வந்து ரொம்ப நேரம் ஆயிட்டதா வருண்'',

''இல்லை ஸார் ஜஸ்ட் 10 மினிட்ஸ்''.

அங்கு கட்டுமானப் பணிகள் ஓரளவிற்கு நடந்து கொண்டு இருந்தது. சில மிஷினரிஸ் பெரிய ராட்டினங்கள் பிக்ஸ் பண்ணியபடி ஆட்கள் வேலை செய்து கொண்டு இருக்கவும், சின்ன சின்ன கடைகள் முளைக்கும் அறிகுறியும் இருந்தது.

''நல்ல ஏற்பாடுகள் தான் ஸார் ஒரு பிக்னிக் ஸ்பாட்டுக்கு தேவையான எல்லாமேயிருக்கு. சில கேம் ஷோவெல்லாம் வைக்கலாம். அப்புறம் புக் ஸ்டால் வீக்-எண்ட்ல ஒரு மேஜிக் விழா, டான்ஸ் இப்படி ஏதாவது செய்யலாம்''.

''அப்புறம்,''

''கொஞ்சம் வித்தியாசமான ஐடியாதான். அழகான மரம் செடிகள் உள்ள ஒரு கனவு பூங்காவை உருவாக்கலாம். எப்படின்னா? செயற்கை நீரூற்று, மின்னல் போல இல்லாம மஞ்சளாய் பூசின மாதிரி இதமான விளக்கொளி, நட்சத்திரம், நிலவும் கைகோர்த்த மாதிரி செட்டிங்ஸ், மனதை வருடும் சாக்ஸபோன் மியூசிக் அப்படின்னு ரொம்ப

''பக்கத்து வீட்டுல திருடியிருந்த பத்தாயிரத்தையும் சேர்த்து இந்த வீட்டுல பறிகொடுத்திட்டேன்!''

''ஏன்டா?''

''திருடப்போன வீடு நடிகை வீடாச்சே!''

-ஆர்.ஜி. அம்பிகைராமன், நிகசபன்விளை

ரொமாண்டிக்கான ஒரு பூங்கா புதுமையாகவும் இருக்கும்.

அப்புறம் சின்னதாய் குகைப்போல வடிவமைப்புகள் அதில் நம்ம புராதன இலக்கியங்ககள் கொண்ட ஒவியங்கள், குறிப்புகள்ன்னும் ரெடி பண்ணலாம்''.

''ரியல்லி புதுமையான சிந்தனை தான். கட்டாயமா முயற்சி செய்யலாம்''.

''அப்புறம் நமக்கு ஹோட்டல் வேலைகள் நிறைய இருப்பதால் இந்த சைட்டில் கூட வேலையிருந்து கண்காணிக்கவும் ஆள் தேவைப்படறாங்க''.

''வருண் இருக்காரே ஸார், ரொம்பவும் ஷார்ப்! இன்பேக்ட் நம்ம ஹோட்டலை நல்ல முறையில் நிர்வாகம் செய்ய எனக்கு நம்ம ஸ்டாப்ஸ் ஒவ்வொருத்தரும் எனக்கு உதவுறது தான் உண்மை. வருணும் லாவண்யாவும் நேரம் காலம் பார்க்காமல் வேலை செய்யக் கூடியவர்கள்''.

''இஸிட்...!''

''எஸ் ஸார் இந்த புராஜக்டை நம்பி வருணிடம் தரலாம்''.

''வருண் நீங்க யென்ன சொல்றீங்க?''

மேடம் எம்மேல இத்தனை நம்பிக்கை வைச்சிருக்காங்க அதை காப்பாத்த வேண்டியது என் கடமை ஸார்.

''வெரி குட்....''

''மேலும் வருணிடம் சில குறிப்புகளைச் சொல்லிவிட்டு அவன் வரும் வரை இவள் காத்திருந்தாள்''.

''போகலாமா?''

''போகலாம் ஸார்''.

''இந்த புராஜக்ட் நல்லா வருமா? இல்லையா?''

''அதுலேயென்ன சந்தேகம் ஹோட்டல் பக்கத்திலேயே இருக்கு, எந்கனவே ஊட்டி ஒரு சுற்றுலாத்தலம். மெயின் பிளேஸில் வைக்கிறதால நிச்சயமா இந்த தீம்பார்க் மக்களிடம் நல்லா ரீச் ஆகும் ஸார்''.

''நன்றி! நான் வந்ததில் இருந்தே கவனிக்கிறேன் நிலா! நிர்வாகம் சாதாரண விஷயம் இல்லை. இந்த ஸ்தாபனத்தை நிர்வகிக்கிற உன்னிடம் சாதாரண வேலையாட்கள் கூட அன்போடு பழகுவதை நான் பார்க்கிறேன்''.

''எனக்கு யாரையும் வெறுத்துப் பேசி பழக்கம் இல்லை ஸார்''.ஆதவன் காரை நிறுத்தி விட்டு அவளைப் பார்த்தான்.

''என்னை மட்டும் ஏன் நிலா?''

''பழசையெல்லாம் நான் மறந்திட்டேன்.''

''பொய். என்னை ஊட்டியில் முதன் முதலாப் பார்த்த போது உன் கண்ணில் தெரிஞ்ச சந்தோஷம் ஒரு விநாடிதான்னாலும் அதிலே உன் காதல் தெரிஞ்சதே''.

''ஸார் வாழ்வின் அடித்தளமே நம்பிக்கை தான். நான் உயிரோட இருக்கேன். இந்த நிமிடம் நான் நம்மதியா இருப்பேன். இதெல்லாம் நம்பிக்கையோட வெளிப்பாடு தானே. அடித்தளமே அசையும் போது அஸ்திவாரம் எப்படி நிலைக்கும்?''

''உன் வாதப்படி பார்த்தாலும் இப்போ நீயும் என்மேல நம்பிக்கை வைக்க மறுக்கிறது. உண்மைதானே!''

இப்போது அவளிடம் மௌனம் நிலவியது. ஒரு கணம் தயங்கி பின் கூறினாள். ''நான் நிலாங்கிறதை நீங்க உணர்ந்ததும் எனக்கு தெரியும். ஆனா யாரோ ஒருவனுடைய பேச்சைக் கேட்டு... என்னை சோதிக்க நினைத்தது... எங்கப்பா எங்கம்மாவை சந்தேகப்பட்டதைப் போலவே...''

''ஏன் நிலா, பழையதையே பேசுறே? நான் தான் அதுக்கு மன்னிப்பும் கேட்டேனே?''

''மன்னிப்புங்கிற ஒரு வார்த்தை மட்டும் எல்லா ரணத்தையும் ஆற்றிடாது. நான் உங்களை நம்பினேனே. அந்த ஒரு நொடி பார்வையாலும், உங்க தொடுதலும் உண்மைன்னு நம்பித்தானே நான்... அந்த நம்பிக்கையை நீங்க சிதைச்சிட்டீங்க?''

''அன்னைக்கு பிறபு எங்கிட்டே தவறா நடக்கப் பார்த்த போது எம்மனசு எப்படித்தவிச்சுது தெரியுமா? ஆபத்தில் உங்களைக் காணவும் மனம் எத்தனை நிம்மதியடைந்தது தெரியுமா? எல்லாத்தையும் ஒரே நொடியில் சிதற அடிச்சிட்டீங்களே?''

''அதுக்குத் தான் நான் ஆயிரம் முறை மன்னிப்பு கேட்டேனே, நீ என் நிலையில் இருந்து கொஞ்சம் யோசி நிலா. பிரபு எப்படிப்பட்டவன்னு எனக்குத் தெரியாது. நான் விரும்புற நேசிக்கிற ஒரு பெண்ணைப் பற்றி அவன் தவறா சொன்னான். நீ என்னவள்னு ஆன பிறகு, உன்னுடைய நன்மையும், தீமையும் என தில்லையா? அதில் நான் அடக்கம் இல்லையா?''

''அவனை உன் முன்னாடி ஒரு குற்றவாளியா நிறுத்தனுமின்னு நான் நினைச்சேன். ஆனா கடைசியிலே நானே குற்றவாளி ஆயிட்டேன்.'' சந்தேகங்கிற ஒரு உணர்வால எங்கம்மா என் கண்முன்னாடி பட்ட வேதனையை துடிப்பை உடனிருந்து பார்த்தவ நான்! ஆனா அதையும் மறந்து உங்க கிட்ட மயங்கினேன். அதன் விளைவு இப்போ... சரி வீண் பேச்செதற்கு?!''

''என் மனசு உடைஞ்சு போச்சு. இனிமே ஒட்டறது கஷ்டம். தெரியாம எங்கப்பா செய்த தப்பை தெரிஞ்சே செய்ய நான் தயாரா இல்லை. தெரிஞ்சே நெருப்பில் ஒரு முறை சுடுபட்ட பிறகும் மீண்டும் நெருப்பைத் தொட யார் துணிவார்கள்? என் மனசை நானே தேத்திகிட்டு வாழறேன். தயவு செய்து என்னை தொந்தரவு செய்ய வேண்டாம்.''

''ஏதோ அநாதையான எனக்கு ஆறுதலா இரண்டு உறவு கிடைச்

ரிருக்கு! அதில் உங்களுக்கு விருப்பம் இல்லேன்னா சொல்லிடுங்க. ஆனா, பெரியவங்களோட மனசை நோகடிக்க வேண்டாம் பாவம் அவங்களாவது சந்தோஷமா இருக்கட்டும்.''

''அதுவரையில் இங்கதங்க எனக்கு அனுமதி தாங்க. பொறுமையா அவங்ககிட்டே எடுத்து சொல்லிட்டு நானே போயிடறேன். ப்ளீஸ் என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்க?'' பேசியபடியே அவன் முகத்தைப் பார்த்தாள்.

பாறையாய் இறுகியிருந்த முகம் எவ்வித உணர்வையும் வெளிக் காட்டாமல் இருந்தது. பதிலேதும் பேசாமல் வண்டியைக் கிளப்பினான்.

8

வீடு வந்து சேரும் வரையில் பேசுவது, ஏன் ஒரு பார்வை கூட இவளை திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. இவளாக ஓரிரு முறை அவனைப் பார்த்ததோடு சரி.. ஆனால், நிலைமையோ இவர்களுக்கு வேறு மாதிரி இருந்தது.

வாசலிலேயே! தாமரையம்மாளும், சந்திரசேகரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

''என்னத்தே வாசலிலேயே!''

''உங்கிட்டே ஒரு சந்தோஷமான விஷயத்தைப் பற்றி பேசணும்! ஆதவா அதான் காத்திருக்கிறேன். ஆனா நீங்க ரெண்டு பேரும் ஒண்ணா நடந்து வர்றதைப் பார்க்கவும் மெய் மறந்திட்டோம்.''

''சரி அத்தை நான் அவுட் ஹவுஸிற்குப் போறேன்.''

''இந்த படத்துல டாக்டரா நடிக்கிற நடிகர் ரொம்ப மோசம்...''

''ஏன்...என்ன விஷயம்?''

''லேகியத்தை நடிகையோட தொப்புள்ல வச்சுதான் கிண்டுவேன்னு அடம்பிடிக்கிறார்!''

-பெ.பாண்டியன், காரைக்குடி

''அங்கே போய் என்னம்மா பண்ணப்போறே? உன்னோட திங்ஸ் எல்லாம் நம்ம வீட்டு மாடியறையில் வைத்தாயிற்று.''

''ஏன்? ஸார்?''

''அட மாமான்னு கூப்பிடும்மா, இன்னமும் என்ன ஸார் மோருன்னுட்டு?!''

''அது வந்து...!''

''என்னடாம்மா நீ இன்னமும் அன்னியமாவே நினைக்கிறே? இந்த வயசான காலத்திலே நீயும் ஆதவனும் தான் எங்களுக்கு இரு கண்கள். ஹோட்டலில் கூட எல்லாருக்கும் சொல்லியாச்சு.''

''மாமா நான் உங்ககிட்டே எதிர்பாக்குறது அன்பைத்தான், உரிமையை இல்லே''

''கூடிய விரைவில் உனக்கும் ஆதவனுக்கும் ஒரு கல்யாணத்தைப் பண்ணிப் பார்த்திட்டா தான் இப்படி பேசறதை நிறுத்துவே''

''அம்மா ப்ளீஸ்! திடீர்னு எதிர்பாராம கிடைச்ச அதிர்ச்சியிலேயே நிலா ரொம்பவும் குழம்பிப் போய் இருக்கா, இப்பவே எல்லாத்தையும் பேசிடணுமா? பாவம் இன்னைக்கு ரொம்ப வேலை அலைச்சல் நிலா, நீ போய் ரெஸ்ட் எடு.''

அப்போதைக்கு அந்த விஷயத்திற்கு தடை போட்டாலும், அவன் குரலில் இருந்த இறுக்கம் அவளை வருந்த வைத்தது.

''அதென்னடா ராணியை நிலான்னு கூப்பிடறே அதுக்குள்ளே செல்லப் பேரா?''

தாய் கண்சிமிட்ட,

''இல்லே மாமா, என் முழுபேரு வெண்ணிலா ராணி அதை இவர்கிட்டே சொன்னேன்''

''அப்படியா? சரி சரி சின்னஞ்சிறுசுங்க கொஞ்ச நாள் பிரியா இருந்திட்டு அப்புறம் தான் கல்யாணம் பண்ணிகிட்டட்டுமே இப்போ யென்ன அவசரம்.''

''அதை விடுங்கம்மா நாங்க வீட்டுகுள்ளே நுழையும் போது ஏதோ சந்தோஷமான செய்தின்னு சொன்னீங்களே என்ன அது?''

''நம்ம ஊர் கோவில் மேல கோர்ட்டில் கேஸ் நடந்ததே அதுலே நம்ம பங்குக்கு வெற்றி கிடைச்சிருக்கு. இப்போதான் நம்ம லாயர் போன் பண்ணினார். இதுக்கெல்லாம் எம்மருமவ வந்த நேரம் தான் காரணம், அதான் ரொம்ப நாளைக்குப் பிறகு நல்ல விஷயங்கள் நடக்குது.''

''போச்சுடா இத்தனை நாளா மகன் புராணம் இப்போ மருமகள் புராணமா?''

''உனக்கு ஏன்டா கண்ணா பொறாமை?''

பெரியவர்களின் சீண்டலில் இயல்பாய் கலந்து கொண்டனர் இளைகள் இருவரும். ஆனால் அதற்கு அடுத்தபடி பேசிய விஷயங்கள் அடியோடு அவள் தூக்கத்தைக் கலைத்தன.

''நம்ம கோவில்ல நடக்கப்போற சிவராத்திரி திருவிழாவிற்கு, நம்ம குடும்பத்து மனிதர்கள் தான் தலைமையேற்று நடத்தனும், இப்போ உள்ள சூழ்நிலையில் என்னாலயோ அப்பாவாலேயோ போக முடியாது. அதனால நீயும் நம்ம நிலாவும் போயிட்டு வந்திருங்களேன்.''

''நம்ம குல தெய்வ வழிபாட்டோட உங்க வாழ்வு நல்லபடியா துவங்கட்டுமே.'' பெரியவர்களின் இந்த பேச்சில் நிலா மட்டுமல்ல ஆதவனுமே கொஞ்சம் கலங்கித் தான் போனான். நிலாவைப் பார்த்தான் அவன் முகத்திலும் குழப்ப ரேகைகள்.

''அப்பா இப்போதான் நம்ம ஹோட்டலில் இருந்து 10 கி.மீ. தொலைவில் தீம் பார்க் அமைக்கும் விஷயமா ரெடி பண்ணிகிட்டு இருக்கேன். இப்போ சம்மர் வெகேஷன் வரப்போகுது. அதுக்குள்ளே முடிச்சிட்டா நல்லா இருக்குமின்னு பீல் பண்றேன். தவிரவும், நம்ம ரிஸாட்டுக்கும் ரெகுலர் கஸ்டமர்ஸ் வருவாங்க எல்லாரையும் ரிசீவ் பண்ணனுமே'' என்றான்.

''இத்தனை நாள் நீங்க இல்லாமல் பிஸினஸை நான் நல்லபடியா கவனிச்சிருக்கேன். ஆதவா, ஆடிட்டர், வருண், லாவண்யான்னு நான் சமாளிச்சுப்பேன்.''

''இருந்தாலும் உங்களுக்கு கஷ்டம் இல்லையா மாமா.''

''இப்போ கோயிலுக்கு நீங்க புறப்படலைன்னாத்தான் எனக்கு மனக்கஷ்டம். என் மருமகளின் கவனிப்பில் என் உடல் மட்டுமில்லாம மனசுக்கும் தெம்பு வந்திட்டது. அதனால தைரியமா போயிட்டு வாங்க. அந்த ஆதிபராசக்தி எல்லா விதத்திலும் துணை இருப்பாள்.''

''தம்பி நம்ம தொழில் நல்ல முறையில் நடக்குதுன்னா அது கடவுள் புண்ணியம். முதன் முறையா நம்ம கைங்கரியத்தில் பூஜை நடக்கப்போகுது. அதுக்கு நம்ம குடும்பத்து மனுஷங்க இல்லேன்னா எப்படிடா?''

அதெல்லாம் சரிதாம்பா. நானும் நிலாவும் தனியா எப்படி போறது?''

''என்னடா தம்பி தப்பு? இதிலே, நாளைக்கு உங்க இரண்டு பேருக்கும் கல்யாணம் நடக்கப்போகுது தானே,'' தாமரையம்மாள் இயல்பாய் கூறிட, நிலாவிற்குள் இனம்புரியா படபடப்பு.

''தம்பி நீ இத்தனை யோசிப்பது சரியில்லை, உங்க விருப்பத்திற்கு மதிப்பளித்து, திருமணத்தை நாங்க தள்ளிப்போட சம்மதித்து இருக்கிறோம். அதே மாதிரி நீங்களும் எங்களுடைய விருப்பத்திற்கும் மதிப்பு தானும் இல்லையா?''

''ஆதவன் ஏதோ குறுக்கிடு செய்ய வாய்திறக்க அதற்குள் நிலா எப்போ கிளம்பணும் அத்தை'' என்றாள்.

''பார்த்தியா எம்மருமகளை எல்லாத்திலேயும் பர்பெக்ட்தான். டிக்கெட் மெயில்ல பண்ணிட்டேன்ம்மா வர்ற புதன் கிளம்பணும்.''

''அதாவது நாளை மறுநாள்''

''ஆமாம்...!''

''சரி நீங்க போய் ரெஸ்ட் எடுங்க,'' சாப்பாட்டை கொறித்துவிட்டு, எழுந்தார்கள். ஆதவனுக்கு பாலை தயார் செய்த தாமரையம்மாளிடம் இருந்து பெற்றுக் கொண்டு ஆதவனின் அறைக்கதவைத் தட்டினாள்.

லேப்டாப்பில் ஏதோ தகவல்களை பார்த்த வண்ணம் இருந்தவன், இவளை தன் அறைவாயிலில் கண்டதும் ''வெல்கம்...'' என்றான்.

''பால்...''

வாங்கிப் பருகியவன் டீபாயின் மேல் டம்ளரை வைக்க அவள் தயங்குவதைக் கண்டு ''என்ன நிலா'' என்றான் பரிவுடன்.

''உங்க கிட்டே கொஞ்சம் பேசணும்.''

''சொல்லு...''

''நான் அத்தை மாமா மனசு புண்படக் கூடாதுன்னு தான் உங்க கூட வர சம்மதிச்சேன். ஆனால், மனசில் ஒரு சின்ன நெருடல்.''

''கவலைப்படாதே நிலா என்னால் உன் தன்மானத்திற்கோ பெண்மைக்கோ எந்த களங்கமும் ஏற்படாது.''

''நான் அதைப் பற்றி பேசலை, ஆனா இந்த கல்யாண விஷயம்...''

''நான் உன்னைக் கட்டாயப்படுத்தலை.''

''நீங்க இல்லை.... அத்தை...!''

அவன் எழுந்து வந்து அவள் அருகில் நின்று ஊன்றி கவனித்தான். ''உன் விருப்பத்திற்கு மாறாக எதுவும் நடக்காது நிலா. நான் எந்த விதத்திலும் உனக்கு தொல்லை தரமாட்டேன்.'' அந்த வார்த்தைகள் மிகுந்த வலியோடு வந்ததை அவளும் உணர்ந்தாள்.

''ஸார்...!''

''இன்னொரு விஷயம்... அத்தான் என்று முறை வைத்து கூப்பிடாவிட்டாலும் ஆதியென்று அழைக்கலாமே! இதுவும் அம்மா அப்பாவிற்காகத்தான். நீயாக உணர்ந்து என் தவறை மன்னிக்கும் வரை நான் காத்திருப்பேன்.''

'ஆதி! எத்தனையோ இழப்புகளை வாழ்வில் உணர்ந்தவள் நான். ஒவ்வொரு குழந்தையும் அதிலும் பெண் பிள்ளைக்கு தந்தையின் மேல் அலாதி அன்பு உண்டு. ஒரு முறை கூட எனக்கு நினைவு தெரிந்து அந்த அன்பு எனக்கு கிடைக்கவில்லை.''

''எத்தனை ஏக்கங்களை எனக்குள்ளேயே புதைத்திருப்பேன் தெரியுமா? சுடு சொற்களிலும் அவமானங்களிலும் என் தாயின் நிலையைக் கண்டு நான் அழாத தினமே இல்லை. தவறு புரிந்தாலும் என் மனம் சமாதானம் அடைய மறுக்கிறது.''

அன்றைய நிகழ்ச்சிகள் கசப்பான தாக்கம் அவளுள் தோன்றியது போலும், கண்களை மூடி எதையோ மறைக்க முயல்பவள் போலி

ருக்க, முதல் முதலில் தன் கைப்பிடிக்குள் அவன் கண்மூடி சாய்ந்திருந்த நிலையை நினைவூட்டியது ஆதவனுக்கு! மெல்ல கண்களை மலர்த்தினாள். இளம்புரியா தேடல்கள் இருவரின் பார்வைகளிலும்!

''நீ போய் தூங்கு நிலா காலையில் நேரத்தோடு ஹோட்டலுக்குப் போக வேண்டி வரும்'' என்றான். மனமின்றி திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே நடந்தாள் வெண்ணிலா.

9

அறைக்குள் நுழைந்து பெட்டியின் நடுவில் துணிகளுக்கு இடையில் இருந்த டைரியை எடுத்தாள். குறிப்பிட்ட அந்த நாளின் தேதியைப் பிரித்து பார்வையை விரட்டினாள்.

உன் மனதை ஆயிரம் மூடிபோட்டு நீ மறைத்தாலும், விழிகள் உண்மையைக் காட்டிக் கொடுத்து விடுகிறதே! இமைக்க மறந்த தருணங்கள்! புரிபடாத பார்வைகள்! காரணம் புரியாமல் தவிப்பாய் நான்... தனிமையை சந்திக்க பயம் கொண்டு யோசித்தபடி அங்கு இருந்தேன். மனதில் ஒரு சிறு நினைப்பு!

வீசி விட்டு போகும் புன்னகையில் ஆயிரம் அர்த்தங்கள். முதுகிற்கு பின்னால் துளைத்த பார்வையில் புரிந்தது மறக்க முயன்றும் தோற்றுப் போன உன் இதயம். வாசலில் நின்று வாடிய முகம்தனில் உன் வருகையின் காரணங்கள்! வந்தாய், அழைத்தாய், அதிகாரப் பூர்வமாய் மெல்லிய உரசல். உன் விழிகள் என்ன சொல்கிறது என்னிடம், இரவுகளின் தொடக்கத்தில் போர்வையாய் உன் நினைவுகள்.

நீ விழிகளால் உறவாடியது சில மணித் துளிகள் தான். ஆனால், பல ஆயிரம் தருணங்களில் அதை நினைக்க வைத்து விட்டாயே! எங்கு திரும்பினாலும் நீயே இருப்பதாய் ஒரு நினைவு. உறங்கிட முயன்றால் இமைகளுக்கு நடுவில் வந்து நிற்கிறாய்!

ஏக்கம் வழிந்த பார்வை, தயங்கிய நடை, எவிது? விநாடிகளைக் கூடக் கடக்க சிரமப்படுகிறேன். என் விரல்களை அணைத்த உன் விரல்கள் உறவாடிய போது மென்மையாய், பூப்போல என் விரல்களைத் தொட்டு உன் உதடுகளுக்கு அருகில் நீ எடுத்துச் செல்ல.....

உன் தொடுதலில் இத்தனை இதமா? உனை சந்திக்க இயலாமல் நாணதாழ்ந்தன விழிகள், மொத்த சக்தியும் வடிந்து போனாற்போல் தளர்ந்தது உடல், வெட்கம் நெட்டித் தள்ள மனமின்றி பிரித்தேன் என் விரல்களை உன்னிடமிருந்து!

ஏக்கமாய் வேண்டும் என்பதைப் போல் உன் விரல் நீண்டு வர, போதுமென்ற என் கெஞ்சலில் பிரிந்தாய் மனமின்றி திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே! நாட்கள் சில ஆனாலும், நினைவுகள் மட்டும் நெஞ்சில் பசுமையாய்!

எனக்கு பயம் அதிகமாகியது! என்னையும் அறியாமல் விழுந்து விட்டேன். உன் அணைப்பிற்கும், அருகாமைக்கும், முத்தத்திற்கும் ஏங்குகிறது என் மனம்! எனை விட்டு பிரிந்து விடுவாயோ என்று தவிக்கிறது இதயம்.

''நிலா...''

''சொல்லுங்க ஸார்...''

''ஸார் வேண்டாமென்று நேற்றே சொன்னேனே?''

''எஸ் ஆதி... போதுமா?''

''குட், சரி சம்மர் வெகேஷனில் முக்கியமானவங்க யாரும் வர்றாங்களா?''

''ரெகுலர் கஸ்டமர்ஸ் சிலர் மெயில் மூலமா புக் பண்ணியிருக்காங்க. லிஸ்ட் டேபிளில் இருக்கு. மற்ற ஸ்டாப்ஸ் கிட்டேயும் அலாட் பண்ணியிருக்கேன். வெகேஷனில் கிச்சன் ஒர்க்குக்கு சில பேர் தேவைப்படறாங்க ஆதி! அதுக்கு லாவண்யாவை இன்டர்வியூ பண்ணச் சொல்லி இருக்கேன்.''

''அப்புறம் நம்ம பழைய லாண்டரியில் சர்வீஸ் அத்தனை சரியில்லை. புதிய காண்டிராக்ட் எடுத்திருக்கேன். அப்புறம் ரெசாட்ஸ் ரூமில் சின்னச் சின்ன டெகரேஷன்ஸ் ஒர்க் ஸ்டார்ட் பண்ணியிருக்கேன். இன்ஸ்பெக்ட் லாவண்யாவை நம்பி முழுப் பொறுப்பையும் தரலாம். நீங்க.... உங்க சைட் ஒர்க்?''

''வருண் உன் டிரைனிங் ஆயிற்றே! எதிர்பார்த்ததை விடவும் வேலை துரிதமா நடக்குது. அம்மாவை தேதி பார்க்க சொல்லியிருக்கேன்.''

''எதுக்கு?''

''கல்யாணமின்னு சொல்ல ஆசைதான். ஆனா, நம்மிடம் இப்போ நேரமில்லை பாரு! தீம்பார்க் திறப்பு விழாவிற்கு!''

ஒரு சிறு மௌனத்திற்குப் பிறகு, ''நான் கிளம்பட்டுமா ஆதி?''

''ஸ்பெஷல் சாப்பாடு 300 ரூபான்னு போட்டிருக்கே! அப்படி என்ன ஸ்பெஷல்?''

''லேடீஸ் சர்வர் வந்து ஊட்டி விடுவாங்க சார்!''

-தேனி, எஸ்.மாரியப்பன்.

''எனக்கும் வேலை முடிந்து விட்டது போகலாம்'' அவனும் கூடவே எழுந்தான்.

''ஒரு நிமிஷம் வருணையும், லாவண்யாவையும் கூப்பிட்டு சொல்லிடலாமே,'' அவள் இண்டர்காமில் கையை வைக்கப்போக, தடுத்தான் ஆதவன்.

''வேண்டாம் தாயே! எற்கனவே நம்ம பேரில் நிறைய பாவங்கள் இருக்கோ என்னவோ?.... இப்போ மறுபடியும் ஒரு லவ்ஜோடியை பிரித்த பாவம் வேண்டாமே!''

''என்ன சொல்றீங்க ஆதி?''

''லாவண்யாவும், வருணும் லவ்வர்ஸ் சின்சியர் லவ்வர்ஸ்..!''

''நிஜமாகவா?'' விழிகளை அகல விரித்தாள் ''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''அவங்க இரண்டு பேரோட கண்பார்வைகளையும் பார்த்தாலே போதுமே! நான் தான் இந்தபத்து நாளா கவனிச்சிகிட்டு வரேனே! அவங்க ரொமான்ஸை?!''

''வேலையைத் தவிர மத்த எல்லாத்தையும் ரொம்ப நல்லா கவனிக்கிறீங்க போல...!''

''நிர்வாகியின் கண் நாலாபுறமும் சுழலணும் இல்லையா? தவிரவும், அடியேனுக்குத் தான் அந்த பாக்கியம் கிடைக்கலை பிறருக்காவது கிடைக்கட்டுமே!''

பேச்சு மறுபடியும் சுற்றி அங்கேயே வருவது கண்டு இவள் மௌனமாக!

''இன்னும் ஒரு விஷயம், வருணும், லாவண்யாவும் நமக்காக வீட்டில் வெயிட் பண்ணிகிட்டு இருக்காங்க.''

''அவங்க இரண்டு பேர் வீட்டிலேயும் பேசி கல்யாணத்திற்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். அதைச் சொல்லத்தான்...!''

''எனக்குத் தெரியாம நிறையவேலை செய்து இருக்கீங்க.''

''புரிஞ்சா சரி வா போகலாம்.''

இருவரும் வீட்டை அடையும் போது, அங்கே வருணும், லாவண்யாவும் நின்றிருந்தார்கள்.

''என்ன லாவண்யா கடைசியிலே என்கிட்டே சொல்லாமலேயே மறைச்சிட்டீங்க?''

''என்ன மேடம்?''

''அதான் உங்க காதல் விவகாரத்தை...!''

''அது வந்து...''

''நீங்க ஸார் மாதிரிப்ரீயா பேசியிருந்தா சொல்லியிருப்போம். நீங்க தான் ரொம்பவும் கண்டிப்பாச்சே!''

''உண்மைதான் வருண்! மேடம் ரொம்ப கண்டிப்புதான். நானே ஸ்கூல் பையன் மாதிரி கைகட்டி நிற்கிறேன் பாரேன்.''

''இதற்கெல்லாம் நீங்க கொடுத்து வைச்சிருக்கணும் ஸார்.''



''என்னப்பா கொடுத்து வைச்சு இருக்கணும்'' கேட்டபடியே வந்தார் தாமரையம்மாள்.''

''அம்மா நம்ம வருணுக்கும், லாவண்யாவுக்கும் சீக்கிரமே கல்யாணம் நடக்கப்போகுது.

''அப்படியா? ரொம்ப சந்தோஷமா இருக்கு. சில நாட்களாகவே நல்ல நல்ல விஷயங்கள் தான் காதிலே விழுது. ஆதவனுக்கும், உங்க மேடமுக்கும் கல்யாணம் பண்ணலான்னு ஆசைப்பட்டேன். ஆனா அவங்க தள்ளிப் போட்டுட்டாங்க.''

''இப்போ உங்களோட கல்யாணத்தை செய்து அந்தக் குறையைத் தீர்த்துடலாம்.''

''நன்றிம்மா. எங்க கல்யாண வாழ்க்கையில் சாருக்குத் தான் அதிக பங்கு. நன்றிக்கடன்பட்டு இருக்கோம்.''

''பெரிய வார்த்தையெல்லாம் வேண்டாம் வருண். எங்க சொந்த ஊரான மறவர் பெருங்குடியில் கோவில் திருவிழா காரியமா நானும் நிலாவும் போக வேண்டியிருக்கு. நீயும் லாவண்யாவும் அப்பாவோட இருந்து பொறுப்பா எல்லாத்தையும் பார்த்துக்கணும்.''

''ஸார் அவ்வளவு பெரிய பொறுப்பை?...''

''ஊச்... மேடமோட ஆர்டர். கூடவே உனக்கு எத்தனை நல்லது செய்றேன் பார். லவ் பண்ற பொண்ணு தனிமை. அழகான சூழல் இதெல்லாம் யாருக்கு அமையும்.''

''கூடவே கடினமான வேலையும் கொடுத்திட்டீங்களே ஸார்.''

''கடமையும் காதலும் ஆடவரின் இரண்டு கண் அல்லவா.''

''ஒன்று சொல்லட்டுமா ஸார். இதிலும் நீங்க தான் அட்வான்ஸ். கல்யாணத்திற்கு முன்னாடியே ஹனிமூன் போறீங்க...'' நிலாவின் முகம் எத்தனை முயன்று சிவந்து மெல்லிய சிரிப்பை வெளியிட,

''மேடமோட முகத்தில் இப்பத்தான் சிரிப்பையே பாக்குறேன். ஏன் மேடம்? இந்த அழகான சிரிப்பை விடுத்து எப்ப பாரு முகத்தை சீரியஸா வைச்சிருந்தீங்க?''

''இடத்திற்கு தகுந்த மாதிரி தோற்றமும் அமையணுமே''

''டயாபடீஸ் கிளீனிக் ஆரம்பிச்சிருக்கிற அந்த டாக்டர் ஆபரேஷனை ரொம்ப சிம்பிளா பண்றாராமே...எப்படி?''

''ஒரு கிலோ ஸ்வீட்லயே பேஷண்டை முடிச்சிடுறாராம்...!''

-பெ.பாண்டியன், காரைக்குடி

''ஸார் ஒரு சின்ன அட்வைஸ் ஏதோ பழகிட்டோமேன்னு சொல்றேன். எப்பவும் மேடம் முன்னாடி கை கட்டியே நில்லுங்க. இல்லேன்னா பெஞ்ச் மேல ஏத்திடப் போறாங்க?''

வருண் கிண்டலாய் கூறிட வீடே சிரிப்பில் குலுங்கியது. இதே சிரிப்பு நிலைக்க வேண்டும் என்று தாமரையம்மாள் மனதார பிரார்த்தித்தார்.

10

''நிலா இன்னும் ஒரு மணி நேரத்தில் நாம இறங்க வேண்டிய ஊர் வந்து விடும். கொஞ்சம் பிரஷ் பண்ணிக்கிறியாம்மா?''

தூக்கம் கலைந்த விழிகளோடு அவனைப் பார்த்தாள் நிலா. இரண்டு நாட்களில் பயணம் என்பதால் மற்ற வேலையில் கூடுதல் கவனம் செலுத்தியதும், சில பொருட்களை வாங்க எடுக்க என பல வேலைகளினால் ஓய்வில்லாமல் இருந்தாலும், ஒளி கோச்சில் வேறு யாரும் இல்லாத காரணத்தினால், ஆதவனுடன் பேசுவதை மறைக்க புத்தகம் படிக்கும் சாக்கில் உறங்கியும் போனாள்.

''காபி வேணுமா நிலா?''

''வேண்டாம்,'' உடைகளைச் சரிபடுத்தியபடியே எழுந்து முகம் கழுவி வந்தாள்.

கலைந்த முடிக்கற்றைகள் முகத்தில் மோதி மோதி விளையாடின. ஆதவனின் ஊடுருவும் பார்வையைத் தாங்க முடியாமல் ஜன்னல்புறம் பார்வையைத் திருப்பிக் கொண்டாள்.

இவனுள் புன்னகை, நினைவில் சற்று சப்தமாகவே சிரித்து விட்டான்.

''ஏன் சிரிக்கிறீங்க?''

''அவசியம் சொல்லணுமா?''

''சொன்னால் நானும் தெரிஞ்சிப்பேன். இப்போதைக்கு வேறு யாரும் இல்லையே. உங்க கிட்டே தானே பேசியாகணும்.''

''இன்னும் ஒரு நாலு ஐந்து நாளுக்கேனும் இந்த அவஸ்தையைப் பொறுத்துதான் தாயே ஆகணும்.''

''வேற வழி? என்ன செய்ய? சகித்துக் கொள்கிறேன். என்னைப் பார்த்து சிரிச்சதற்கு காரணம் சொல்லுங்க.''

''வேண்டாமே...!''

''வேணுமே!'' அவளும் அதே தொனியில் கூறினாள்.

''தூக்கத்தில் கூட என்னைப் பற்றிய பயம் தான் உனக்கு இல்லையா நிலா? எனக்கு ஒரு பதில் சொல்லு. என்னைப் பார்த்தால் அத்

தனை மோசமாகவா இருக்கிறது? எப்படியெனில், பார்க்கவே கோர மாய்...''

''ஆஹா... நீங்கள் அழகுதான் எத்தனை பேர் சைட் அடிக்கிறாங்க.''

''உடையவள் பார்த்தால் இன்பம். முறைக்காதே. கிட்டத்தட்ட ஆறேமுறை ஆதி...''

ஆதியென்று அழைத்தான்.

''நானா?...''

''என் நம்பிக்கையில்லையா? நான் பொய் சொல்லவில்லை.''

''நேற்றே டிவியில் சொன்னார்கள்.''

'என்னவென்று?''

''நீங்கள் பொய்யே சொல்ல மாட்டீர்கள் என்று!''

''அட ஆதவா! உனக்கு இது தேவை தானா? வருண் அப்பவே சொன்னான். நான்தான் கொஞ்சம் ஓவரா பேசிட்டேன். நல்லவேளை இங்கே பெஞ்ச் இல்ல.''

அவள் கலகலவென நகைத்தாள். அதற்குள் ''காபி... காபி'' என்று குரல் கேட்கவும், இரண்டு காபி வாங்கி வந்து ஒன்றை அவளிடம் நீட்டி, மற்றொன்றை ருசித்தான். மீண்டும் இருவரிடையே மௌனம்.

நிலாவிற்கு மனம் முழுக்க ஒரே குறுகுறுப்பு. வெளிப்படையாக ஆதவனிடம் முகம் திருப்பினாலும், மனதின் ஒரு மூலையில் அவன் மேல் கொண்ட நேசம் நீறு பூத்த நெருப்பாய் கனன்று கொண்டு தான் இருந்தது. விழிப்போடு இருக்கும். தருணம் மறைத்தது தன்னையும் அறியாமல் உறக்கத்தில்...

இன்னும் வேறு என்னவெல்லாம் உளறி வைத்தேனோ...? என்னைப் பற்றி என்ன நினைத்தாரோ? நல்ல வேளை வெறும் சீண்டலோடு நிறுத்திக் கொண்டானே ஒழிய அது குறித்து கேலி ஏதும் செய்யவில்லை. அந்த மட்டில் நிம்மதிதான்.

அவளின் நினைப்பு அவ்வாறு இருக்க ஆதவனோ, முன்பைக் காட்டிலும் நிலாவிடம் உள்ள இறுக்கம் மெல்லியதாய் தளர்ந்து தான் வருகிறது. இதே நிலை நீடித்தால், பழைய கசப்பை மறக்க இயலும் என்று எண்ணினான்.

இருவரின் உள்ளங்களும் வெவ்வேறு சிந்தனையில் உழன்று கொண்டிருக்க, ரெயில் ஊர்ந்து சாத்தூர் என்ற பெயர் பலகை தாங்கிய இடத்தில் நின்ற போது மணி இரவு பதினொன்றைத் தொட்டு இருந்தது. இரவு நேரம் என்பதால் ஸ்டேஷன் வெறிச்சோடிப் போய் இருக்க, பெட்டியை தூக்கிய படியே,'' நிலா இங்கே ஒரு ஓட்டலில் ரூம் ஏற்பாடு செய்து இருக்கிறேன்.'' என்றான் ஆதவன் ஆட்டோவை அழைத்த படியே,

''ஓட்டலிலா?''

''ஆமாம்...!''

''ஏன்? நேராக நம்ம ஊருக்கு போய் விடலாமே.''

''அம்மனி இது ஒன்றும் வளர்ந்த நகரம் இல்லை. நினைத்த நேரத்திற்கு, பஸ்ஸிலோ, டாக்ஸியிலோ ஏறிச் செல்ல, பக்கா கிராமம். இங் கேயெல்லாம் மணிக்கு இத்தனை முறை பிரயாணம் என்ற கணக்கு உண்டு. தவிரவும் நடுராத்திரியில் யாரையும் தொந்தரவு செய்ய வேண்டாமே!''

''நாம் போக வேண்டிய ஊர், இங்கிருந்து குறைந்தது 40 மைலாவது இருக்கும் காலையில் தான் பஸ் கிடைக்கும் அதனால் தான்.''

வேறு வழியின்றி அவளும் தலையசைத்தாள். அவன் குறிப்பிட்ட அந்த ஓட்டல் பைபாஸ் ரோட்டில் இருந்தது. வரவேற்பில் விவரம் சொல்லி சாவியைப் பெற்றுக் கொண்டு ரூமிற்கு சென்றனர்.

பெட்டியை கொண்டு வந்த பையன் இருவரையும் ஏற இறங்க பார்த்து விட்டு நமட்டுச் சிரிப்பை உதிர்த்தான். நிலாவிற்கு அந்நிலை சங்கடமாய் இருந்தாலும், ஆதவன் அதைப் பற்றி பெரிதும் எண்ணவில்லை. உடையை மாற்றிக் கொண்டு உறங்க முனைந்தவன், இவள் இன்னமும் சல்வாரிலேயே ஸ்தம்பித்து நிற்பதை அறிந்து ''என்ன நிலா?'' என்றான்.

வெறும் லுங்கியோடு இறுக்கமான பனியனும் அணிந்த அவனின் கம்பீரத்தை உணர்ந்து இவள் தலை குனிந்தாள்.

''பசிக்கிறதா? இங்கே சாத்தூர் பரோட்டா என்றால் ரொம்பவும் பேமஸ் ஆர்டர் செய்யவா?''

''வேண்டாம் ஆதி பசியில்லை!?!''

''எனக்கு உறக்கம் வருகிறது'' என்றவள் அவன் பார்வைபோன இடத்தைக் கண்டவுடன் அவளின் தயக்கத்திற்கான காரணத்தைப் புரிந்து கொண்டான்.

அங்கு ஒரேயொரு பெட் மட்டுமே இருக்க அதிலெப்படி என்று மலைத்து நிற்கிறாள் என்பதை உணர்ந்து, ''நீ கட்டிலில் படுத்துக் கொள் நிலா, நான் சோபாவில் படுக்கிறேன்.'' என்று தலையசைத்து விட்டு தலையணையோடு நகர்ந்தான்.

மௌனமாய் படுக்கையில் சரிந்தாள். ஆனால் மனம் உலைக்களம் போல் கொந்தளிப்பாய் இருந்தது. விவரிக்கவே முடியாத உணர்வுகள் மனதை பேரலையாய் மாறி மோதின!

11

மஞ்சள் நிற வானை வாசலாய் கொண்டு வாழும் சூரியனே! இருள் கவ்விய மலை முகடுகளுக்கு நடுவில் புதிதாய் பூத்திருக்கும் பூவாய் எந்த மன்மதனைக் கவர்ந்திட அக்னிக் கண்களில்

குளிர்பார்வையை வீசுகிறாய்! இருள் என்னும் பெண்ணின் ஊடல் அழைப்பை ஏற்று பூமியை அணைக்க ஓடோடி வந்தான் சூரியன், தன் வெளிச்சக் கரங்களை விரித்தபடியே!

நிலாதான் முதலில் கண் விழித்தாள். அதிகாலைச் சோம்பலை அனுபவித்த படியே ஆதவனைக் கண்டாள். ஆழ்ந்த உறக்கம் என்ப தன் அடையாளமாய் மூச்சு வெகுசீராய் ஏறி இறங்கியது. சோபா மிக வும் சிறியதென்பதால், நெடிய கால்களையும், உடலையும் குறுக்கிப் படுத்து இருந்தான். அந்நிலை ஆதவனுக்கு மிகவும் அசௌகரியமாய் இருக்கும் என்பதை உணர்ந்த போது ஒருபுறம் பாவமாகவும் இருந் தது.

தலைக்கு கையை மடித்து வைத்து படுத்திருந்தவனின் அருகில் சென்று அவன் கேசத்தை கோதிவிட வேண்டுமென்று மனம் துடித் தது. சப்தமே இல்லாமல் எழுந்து குளியலறை நோக்கி நடந்தாள்.

குளிர்ந்த நீர் உடலைக் கழுவிட, உடலின் உஷ்ணம் தணிந்ததே தவிர மனதின் உஷ்ணம் தணிய மறுத்தது.

தனிமையான மனம் எதை எதையோ நினைத்தது. ஆதவனின் அணைப்பினையே நினைவூட்டியது. அவன் பிரிவை விடவும் இந்த அருகாமைதான் ரொம்பவும் ஏக்கம் கொள்ள வைத்தது.

ஈரமான உடலை நைட்டியில் மறைத்து வெளியே வரவும், ஆத வன் பேப்பரை விரித்தபடி அமர்ந்திருப்பதைக் கண்டு வியப்பாய் விழித்தாள். ஒரே அறையில் இவனை எப்படி இவனுடன்.... குழப் பமாய் எறிட, தெளிவான வசீகரப் புன்னகையுடன் ''ஹாய்... குட்மார் னிங்'' என்றான்.

''மார்னிங்... நீங்க குளிக்கலையா?''

''கிண்டலா? இருக்கிறது ஒரே பாத்ரூம். மேடமே இப்போதான் உன் ஜலக்கிரீடையை முடிச்சிட்டு வர்றே. அடுத்த ஒரு நிமிடத்தி லேயே குளிக்கணுமின்னு சொன்னா, எனக்கு காக்காய் குளியல்

''பெண் பார்க்க வந்தபோது எதைப் பார்த்து என்னை பிடிச்சிருக்குன்னு சொன்னீங்க...?''

''உங்கப்பாவோட சொத்து விவரத்தை எல்லாம் சொன்னதைப் பார்த்து...!''

-தேனி, எஸ்.மாரியப்பன்.

குளித்து பழக்கம் இல்லையே?''

''ஜோக்கா? காலையே கடியா?''

''இரத்தம் வருதா?''

''நான் உடை மாற்றணும்.''

''சச்.. இதுக்கெல்லாம் என் அனுமதி தேவையில்லை.''

''ஆதி... ப்ளீஸ்...'' அவஸ்தையாய் பார்க்கவும், இவனும் விளை யாட்டை தொடர்ந்த படியே,

''இதையேன் இப்படி மென்று விழுங்குகிறாய்? போடா என்றால் போகப் போகிறேன்.''

சற்றும் யோசியாமல் ''போடா'' என்றாள்.

''நன்றி...! புன்னகைத்தபடியே பால்கனியின் பக்கம் சென்றவன் ''நிலா ஒரு சின்ன அட்வைஸ், தலைகாணி உறை மாதிரி உடுத்தாம அழகா புடவை கட்டிக்கோம்மா'' என்றான்.

''ஓ...''

''எஸ்...ஜு!''

பர்ப்பிள் கலர் புடவையை உடுத்தியவள் இறுக்கமானதை விடுத்து இப்படி இலகுவாய் பேசுவதும் மனதிற்கு இதமாய் இருப் பதை உணர்ந்தாள். நெடுநாளைக்குப் பிறகு, ஒரு நிம்மதி பரவியதை அவளால் உணர முடிந்தது.

காலை உணவை முடித்துவிட்டு, கிளம்பினார்கள்.

ஹோட்டலில் இருந்து ஊருக்குள் செல்ல 2 1/2 மணி நேரங்கள் பிடிக்கும் என்பதால் ஆதவன் கார் ஒன்றிற்கும் ஏற்பாடு செய்தான்.

டிரைவர் வண்டியைச் செலுத்திட இவர்கள் இருவரும் பின்புறம் அமர்ந்து இருந்தார்கள். ஒவ்வொரு இடம் பற்றியும் வெகு ஆர்வமாய் சொல்லியபடியே வந்தான். அவளும் தலையாட்டியவாறே கேட்டு வந்தாள்.

''இது தான் பஸ்ஸ்டாண்ட் நிலா''

''இந்த பச்சைக் கலர்லே நாலு டயரோடு ஸ்டேரிங் எல்லாம் இருக்குமே. அந்த பஸ் நிக்கிற ஸ்டாண்டா?''

''மன்னிச்சிடு தாயே உனக்கு கூட இத்தனை விவரங்கள் தெரிந்தி ருக்கும் என்றும் நான் நினைக்கலை.''

''பூ வேணுமா?''...

''ம்..''

''அவன் ஐம்பது ரூபாய்த் தாளை நீட்ட அந்த பெண்மணி பூ அளந்த முறை கண்டு வியப்பாய் இதுவென்ன ஆதி முழம் போடவே இல்லையே?''

''இங்கேயெல்லாம் எண்ணிக்கை கணக்கு தான் நிலா நூறு பூ பத்து ரூபாய் என்று.''

''அப்போ இதிலே 500 பூ இருக்குமா?''

''நாம போய் சேர 2 1/2 மணி ஆகும். அதுவரையில் எண்ணி

இட்டே வாயேன்.''

''உங்களுக்கு ரொம்பவும் கொழுப்பு ஆதி.''

''ஒரு நாள் சமைச்சுப் போட்டே அதுக்கே இப்படி சொல்றி யேம்மா?''

''ஒவ்வொரு ஊருக்கும் ஒவ்வொரு ஸ்பெஷல் உண்டு. இங்கு என்ன ஸ்பெஷல் ஆதி?''

''ஊர்லேயெல்லாம் கோவில்கள் ரொம்ப பிரசித்தம். பங்குனி திரு விழா கூட பிரமாதமா கொண்டாடுவாங்க, முளைப்பாரி, தீச்சட்டி என்று...''

''ஒஹோ..!''

''இதென்ன எதையோ தூக்கிட்டுப் போறாங்களே?''

''சாத்தூரில் மெயின் தொழிலே, தீப்பெட்டி தயார் பண்றதுதான் வாயேன்.'' வண்டியை விட்டு இறங்கி அந்த இடத்தில் நுழைந்து, குவித்து வைக்கப்பட்டு இருந்த, ஒரே சீராய் வெட்டப்பட்டு இருந்த குச்சிகளைக் காட்டி, ''இந்தக் குச்சிகள் எல்லாம் கேரளா, அந்தமான் போன்ற இடங்களில் இருந்து ஆட்கள் மூலம் கிடைக்கும். இதோ இந்த குச்சிகளை எல்லாம் இரும்பு ராடில் அடுக்கி வெயிலில் காய வைத்து, அப்புறம் இந்த மெழுகு அடுப்பில் வைத்து இங்கே அந்த எரிமருந்தை முக்கி குச்சியைப் பரப்பி விடுவாங்க''

''பின்னர் மறுபடியும் வெயிலில் காய வைத்து பெட்டியில் அடுக்கி லேபிள் ஒட்டி பண்டல் போட்டு வெளியூர்களுக்கு போகும்''

''பெண்களுக்குமா இந்த வேலை?''

''பெண்கள் தான் அதிகம் பணி புரிவார்கள். மருந்து முக்கும் வேலை. கடைகளுக்கு சப்ளை செய்வது ஆண்கள் பண்றாங்க. முன்பு சின்ன சின்ன பிள்ளைங்க கூட நிறைய இருப்பாங்க. கவர்மெண்ட் டோட சிவியர் கண்காணிப்பில் அவங்க படிப்பு எல்லாம் பிழைச்சது''

''இந்த மாதிரி கிராமங்களில் தான் குடிசைத் தொழிலா நிறைய செய்றாங்க. கிராமமின்னு மட்டமா நாம பேசறோம். விரல் நுனியில் அழுக்குப்படாம பட்டணத்தில் நாம வேலை பாக்குறோம். ஆனா எத்தனை பேர் உடம்பை வருத்தி இங்கே வேலை செய்யறாங்க தெரியுமா?''

''உண்மையான உழைப்பாளிகள் இவர்கள். பேனாவோட நிப் தயாரிப்பு, சோப்பு, பேப்பர்ன்னு நிறைய குடிசைத் தொழில்கள் இங்கே இருக்கு. பெயருக்குத்தான் கிராமமே தவிர இது ஓரளவுக்கு நல்லா வளர்ந்த நகரம் தான். பாரேன் வங்கிகள் கம்ப்யூட்டர் சென்டர்ஸ்.''

''உண்மைதான் ஆதி.''

''இன்னொரு விஷயம். இந்த ஊர்லே இருக்கிறே ஸ்கூலில்தான்

நான் ஐந்து வரை படித்தேன். அதோ பார் அந்த எட்வார்டு ஸ்கூலில் தான் படித்தேன்.''

''ஆதி நீங்க படிச்ச ஸ்கூலை நாம போய் பார்க்கலாமா?''

''ஷ்யூர்..'' காரை ஒரு ஓரமாய் நிறுத்தச் சொல்லிவிட்டு, கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தார்கள்.

''இந்த ஊரிலேயே இதுதான் பெரிய ஸ்கூல் நிலா. அடுக்கடுக்காய் அறைகள் ஒவ்வொன்றிலும் மரபெஞ்சுகளோடு நாற்காலியும், அது விடுமுறை நாள் என்பதால் காலியாய் இருந்தது. சாயம் போன திரைச் சீலைகளை சுமந்த ஜன்னல்கள்

அழகான மண் தரை அதில் ஒளிந்து மினுக்கும் கூழாங்கற்கள்.

''இதுதான் என் கிளாஸ் ரூம். இதில்தான் நான் தர்ட் வரையில் படித்தேன். இந்த லாஸ்ட் டெஸ்கில்தான் உட்காருவேன்'' அவன் தான் அமர்ந்த இடத்தை தடவிப் பார்த்தான்.

''ஏன் ஆதி? கடைசி பெஞ்ச் ஸ்டூடண்டா நீங்க? அப்போ படிப்பில் ரொம்பவும் வீக் இல்லையா''

''நோ.. நோ.. நான்தான் பர்ஸ்ட் ராங்க் எல்லாரையும் விட நான் கொஞ்சம் வளர்த்தி அதனால் இந்த இடம்''

''சரி சரி நம்பிட்டேன்''

''கிண்டலா?''

''இல்லையே?''

''சரி... அங்கே வாயேன் பிரேயர் ஹாலைக் காண்பிக்கிறேன். இங்குதான் அசெம்பிளி நடக்கும் நான் தான் பிரேயர் பாடல் பாடுவேன்.''

''உங்க ஸ்கூல் பசங்க எல்லோருக்குமே கழுதை பொறுமை போல.''

''அப்புறம் ஒருமுறை 4-ம் வகுப்பு படிக்கும் போது இங்கேதான் முட்டி போட்டேன்.''

''ஏன்?''

''ஹோம் வொர்க் செய்யலை? இந்த மதில் சுவர் அப்போவெல்லாம் இத்தனை உயரம் இருக்காது? பின்னாடிதான் எங்க வீடுங்கிறதாலே போரடிச்சா எகிறி குதிக்க ஓடிடுவேன்''

''அய்யய்யோ...''

''ஜாதான் புட்பால் சேம்பியன் ஆக்கும் கிரவுண்ட் பாத்தியா எவ்வளவு சூப்பரா இருக்குன்னு!'' அவன் சொன்னாற் போல கிரவுண்ட் பெரிசாகத்தான் இருந்தது. நெட் கட்டி விளையாடிக் கொண்டிருந்த சிலர் இவர்களை ஒருமுறை நிமிர்ந்து பார்த்தார்கள்.

''நிலா இங்கே வாயேன். இந்த திண்ணை தான் எனக்கு பிடித்த இடம் இங்கே உட்கார்ந்து தான் படிப்பேன். சாப்பிடுவேன், அரட்டை அடிப்பேன். அப்புறம் இந்த புங்கை மரம். இதுவும் என் பேவரிட்! கிளாஸ் இல்லாத போது இதிலே ஏறி உட்கார்ந்து இருந்தா சிலுசிலுன்னு வர்ற காத்துலே தனி சுகம்தான்''

குடடியாய் கட்டம் போட்ட டவுஸர் சட்டையில் சிறுவனாய் மாத்தின் மேல் ஆதவன் அமர்ந்திருப்பதைப் போல் கற்பனை செய்து பார்த்தாள். கலகலவென்று நகைத்தாள்.

''ஏய் என்னம்மா சிரிக்கிறே? இல்லை உங்களை டிரவுஸர் சட்டையில் கற்பனைப் பண்ணிப் பார்த்தேன் சிரிப்பு வந்திட்டது''

''ஆதி உங்க சின்ன வயசு போட்டோ இருக்கா தான் பார்க்கணுமே''

''வேண்டாம் கிண்டல் பண்ணுவே!''

''பிளீஸ். எனக்காக..''

''சின்னம்மாவிடம் கூட ஒண்ணு இருக்கும் வாயேன் வாங்கித் தர்றேன்'' பேசி சிரித்தபடியே காரில் ஏறினார்கள்.

12

வீடு போய் சேரும் போது மதியம் ஆகி விட்டிருந்தது. புழுதி படிந்த தெருக்களும், மேல் சட்டையின்றி துண்டை சுமந்த தோள்களோடு ஆங்காங்கே நின்ற மனிதர்களும், கார் சப்தத்தைக் கேட்டு ஓடி வந்த பொடிசுகளும் முற்றிலும் புதிய சூழலாய் உணர்ந்தாள் நிலா.

ஊர் பெரியவரின் வீடு என்பதால் கண்டுபிடிக்க ஒன்றும் அத்தனை சிரமமாய் இல்லை. அந்த ஊர் பிரசிடெண்ட் தான் சுப்பையா சித்தப்பா.

வாசலில் இறங்கும் போதே கையைப் பிடித்தபடி வரவேற்றார் வேட்டி சட்டையில் பளீரென்று இருந்தார். ''இதப்பாரு ஈஸ்வரி பிள்ளைங்க வந்திட்டாங்க''

''வாங்க வாங்க என்று பின்கட்டு கொசுவச் சேலையை இறுகக் கட்டியபடி மஞ்சள் பூசிய முகமாய் வந்தார். அந்த நாற்பது வயது பெண்மணி. அம்மாவையும் அப்பாவையும் எதிர் பார்த்தோம் தம்பி''

''உடம்புக்கு அத்தனை சுகமில்லை சின்னம்மா''

''பரவாயில்லைப்பா இனிமே சின்னஞ்சிறுசுகள் நீங்கதானே வரணும். வாங்க கைகால் அலம்புங்க எனுங்க! இரண்டு இளநீ கொண்டு வந்து தரச்சொல்லுங்க''

முற்றத்தில் போடப்பட்டு இருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்தனர். ஐந்து நிமிடங்களில் இளநீர் வர வெயிலுக்கு இதமாய் இருந்தது. நிலாவிற்கு அந்த சூழல் புதிதாய் இருந்தது. அவளைப் பொறுத்த வரையில் நகரம் மட்டுமே கண்ணாரக் கண்டது.

''ஏன் சித்தப்பா? எப்படி கோவில் நம்ம பக்கம் தீர்ப்பாச்சு. போனமுறை வந்தப்போ கூட கஷ்டமின்னு சொன்னிங்களே?''

''ஆமாதம்பி! இந்த கேசுக்காகவே எத்தனையோ தடவை நடையா நடந்து போனாங்க நம்ம ஆளுங்க எல்லாம், எப்படியோ அந்த பட்டத்தரசியம்மன் துணையால நல்லபடியா நடந்திட்டது. பாருப்பா எல்லாரும் மூக்கிலே விரல் வைச்சிட்டாங்கல்ல இல்லே''

''என் சண்டையா?''

''இந்த அம்மன் கோவிலை கட்டினது நம்ம ஜாதி ஆளுங்க. ஆனா வேற ஜாதி ஆளுங்களோட இடத்திலே கட்டியதால அவங்க உரிமை கொண்டாடினாங்க. இது கிட்டதட்ட 18 வருஷமா நடக்குது. எங்க சைடு பெரியவங்க எத்தனையோ முயற்சியெல்லாம் பண்ணாங்க. நல்லபடியா நமக்கு நடந்திட்டது''

''ரொம்ப சந்தோஷம் சித்தப்பா. ஆமா வேல்முருகன் எங்கே ஆளையே காணோம்?''

''அவன் எங்கே தம்பி வீடு தங்குறான். படிப்பும் சரியா வரலை. எங்காவது போயிட்டான்னா. ஒரு வாரம் கழிச்சாதான் வீட்டு பக்கம் வருவான்.

மதிய நேரம் என்பதால் சூடாய் மிளகு சாம்பார் சுட்ட அப்பளம் கத்திரிக்காய் வதக்கல் என பரிமாறப்பட்டது

''தம்பி கறி சமைச்சுப் போடணும்னு தான் ஆசை, ஆனா காப்பு கட்டியாச்சு. திருவிழாவுக்கு பிறகு கறியெடுத்து சமைப்போம்''

''பரவாயில்லை எங்க இரண்டு பேருக்கும் வெஜ். ரொம்ப இஷ்டம்''

தூய்மையான நீர். தோட்டத்துக் கறிகாய்கள் என உணவு வெகு ருசியாய் இருந்தது. அதை விட அந்த ஈஸ்வரி அம்மாளின் கவனிப்பும், கள்ளம் கபடமற்ற அவரின் பேச்சும் அன்பும் பார்த்தவுடனேயே கவர்ந்தது.''

''கொஞ்ச நேரம் ஓய்வாக இருங்கள். இல்லேன்னா காலாரத் தோட்டத்துப் பக்கம் நடந்து வாருங்கள் கண்ணுக்கு குளிர்ச்சியாய்

''மகளிரணியைப் பார்த்தா தலைவர் கண்ணை மூடிக்கிறாரே...ஏன்?''

''காதல் பித்தம் தலைக்கேறிட்டா அப்புறம் சின்ன வீடுகளை விஸ்தரிக்க வேண்டி வருமேன்னுதான்...!''

-பெ.பாண்டியன், காரைக்குடி

இருக்கும்''

''ஆமா தம்பி நாளைக்குத் தான் கோவில் கும்பாபிஷேகம். அதுக்கு தேவையான ஏற்பாடுகளையெல்லாம் நான் கவனிச்சுட்டு வந்திடறேன்.''

சுப்பையா கிளம்பும்போதே ''தம்பி இந்த வலப்புறமாகவே போனீங்கன்னா நம்ம வாய்க்கா வரப்பு வரும் எல்லாமே உங்க நிலம் தான்'' என்றார். புன்னகைத்த படியே நடந்தார்கள். ஆதவனும் வெண்ணிலாவும்.

அவனோடு உரசியபடி நடந்தது இன்பமாய் இருந்தது. இருபுறமும் கூரை வேய்ந்த வீடுகள் குண்டு குழியுமாய்த் தரைகள். வீடுகளிலிருந்து வியப்பாய் இவர்களை சிலர் எட்டிப் பார்த்தனர்.

''யாருடி இவுக?''

''பெரிய வீட்டுக்கு வந்து இருக்காகளாம்''

''எம்புட்டு பொருத்தமான ஜோடி பார்த்தியா?'' ஒவ்வொரு பேச்சிலும் இவள் மனம் இளகி குளிர்ந்தது.

''நீங்க இங்கே ரொம்ப நாள் இருந்தீங்களா ஆதி?''

''நல்ல கேள்வி கேட்ட போ! நான் பிறந்ததே இங்கேதான் நிலா. ஐந்து வருடகாலம் நினைவு தெரிந்து இந்த தெருக்களில் சுற்றி இருந்திருக்கிறேன்''

''சுற்றிலும் பசுமை நிறைந்த தோட்டம், கண்களுக்கு குளிர்ச்சியாய் இருந்தது. வயலில் குனிந்து வேலை செய்து கொண்டிருந்தவர்களை கவனித்தபடியே சென்றனர். சோளக் கதிர் உயர உயர வளர்ந்திருக்க. வரப்பு வழியே நடந்து கிணறு ஒன்றை அடைந்தனர்.

''இதே கிணற்றில் நாங்கள் எத்தனை முறை நீச்சல் அடித்து விளையாடி இருப்போம் தெரியுமா?''

''ஆதி உள்ளே ஒரு பாம்பு.. அதுதானே..''

''அது தண்ணிப்பாம்பு. விஷம் இல்லை. இங்கே அதிகம் அலையும் பக்கத்திலே சூரியகாந்தி தோட்டம் இருக்கு வா போகலாம்.'' ஒத்தையடிப் பாதையென்பதால், அவன் தோள்களைப் பற்றியபடியே பின்னால் நகர்ந்தாள் அகன்ற முதுகு ஆசை கூட்டியது. தோளின் உயரத்திற்கு வளர்ந்து நின்றது சூரியகாந்தி பூக்கள். மஞ்சள் நிற இதழ்களின் நடுவில் குங்கும விதைகள் பிரிந்திருந்த இதழ்கள் கிளர்ச்சியை ஊட்டின.

மலர்ந்த முகமும். சூரியன் திரும்பும் இடமெல்லாம் பார்க்கும் அழகும் கண்ணைப் பறித்தன. சூரிய ஒளி அதன் அழகை இன்னும் மெருகேற்றுவது போல் இருந்தது.

''இந்த பூ எத்தனை அழகு பார்த்தீங்களா? ஆதி''

ம்.. அவன் கண்கள் அவளைத் தைத்தன. ''உன்னை விடவா?'' என்று வாய் விட்டு சொல்லிவிட்டு அவளைப் பார்த்தான்.

அவளின் கண்கள் ஏக்கமாய் தரையைத் தொட்டன.

அவன் கைகளைப் பற்றினான்.

''ஆதி ப்ளீஸ்.. வேண்டாம்.. உங்களை கெஞ்சி கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து, என் மன உறுதியைக் குலைக்காதீர்கள். ஒருமுறை உங்கள் அணைப்பில் மயங்கிய நிலையில் நான்பட்ட வலியும் வேதனையுமே இன்னமும், தீரலை. மறுபடியும் என்னால் முடியாது ஆதி..!'' அவள் அணைப்பில் ஒரு விநாடி இருந்தபடியே அவள் பேசியதில் விட்டுவிட்டான் ஆதவன்.

''ஸாரிம்மா..! ஏதோ உணர்வு வேகத்தில்!'' ஆதவனின் குரலில் உண்மையான வருத்தத் தொனி ஒலித்தது.

மதியநேரம் என்பதால், அதுவரையில் வேலை செய்து கொண்டு இருந்தவர்கள் கஞ்சி கலயங்களில் இருந்த உணவை எடுத்து உண்ணத் துவங்கி இருந்தனர்.

வியர்வை பெருக்கெடுத்தபடி கணவன் வந்தமர, பெண் தன் முந்தானைத் தலைப்பின் மூலம் கணவனின் வியர்வையைத் துடைத்து தான் கொண்டு வந்த கலயத்தில் இருந்த சாதத்தை பிசைந்து அவன் கையில் உருட்டிப்போட, அவன் ஆவலாய் வாங்கி உண்டான். இவர்கள் இருவரின் பார்வையும் அவர்களின் மேலேயே நிலைத்தது.

''என்ன நிலா அப்படி பாக்குறே?''

''இல்லே ஆதி, இயந்திரமயமாகிவிட்ட நகர வாழ்க்கையிலே எதையோ பாதி வெந்ததை சமைச்சு தம் குடும்பத்தோடு உட்கார்ந்து நிம்மதியா ஒருவாய் சாப்பிடக் கூட முடியாம வாழுறாங்க. ஆனா இங்கே குடிக்கிறது. பழங்கஞ்சியா இருந்தாலும் எத்தனை அன்போடும் பாசத்தோடும் அன்னியோன்யமா ம்ப்ச்... சிட்டி லைப் வேஸ்ட் ஆதி..!''

''ஏதேது நீ சொல்றதைப் பார்த்தா இங்கேயே செட்டில் ஆயிடுவே போலயிருக்கே!''

''வொ வாட்? இந்தக் காத்தும், அமைதியும் அன்பான மக்களும் எங்கே கிடைப்பாங்க?''

''டாக்டர்... ரெண்டு பக்கமும் வலிதாங்க முடியல டாக்டர்...!''

''ரெண்டு மனைவிகளையும் ஒரே வீட்டில் வைத்துக் கொண்டால் அப்படித்தாங்க இருக்கும்.''

-எஸ்.மாரியப்பன்.

''அப்போ இங்கேயும் ஒரு ஹோட்டலை துவங்கிடலாமா?''

''வியாபார புத்தி போகுதுதா பாரு?''

நன்றாய் சுற்றிவிட்டு வீட்டுக்கு வர, கருப்பட்டி காபியோடு, அதிரசம், முறுக்கு, அடை போன்ற வகையறாக்கள் வரவேற்றன.

''அச்சச்சோ சாப்பிட்டதே வயிறு புல்லாயிடுச்சு. இதிலே இது வேறயா?''

''என்ன ஆதவா? உன்னை நல்லா கவனிக்க வேண்டாமா?''

திருவிழா கோலாகலமாய் நடந்தது. வீதி எங்கிலும் பந்தலிட்டு, பெண்கள் அனைவரும் வரிசையாய் குலவையிட்டு பொங்கல் வைத்தனர். சிறுவர்கள் வாணவேடிக்கை, வேட்டு என அவ்விடத்தையே இரண்டு பண்ணியிருக்க, கரகாட்டம், ஒயிலாட்டம் போன்ற கிராமிய நடனங்களும் நடந்தேறின.

கூட்ட மிகுதியாகையால் பிரகார நெருக்கடியில் ஆதவனும், வெண்ணிலாவும் இணக்கமாய் நின்றிருந்தார்கள். சில நேரம் தடுமாறும் போதும் அவனே அவளை அருகில் நிறுத்திக் கொண்டான். கற்பூர தீபாராதனையில் அம்மனின் முகம் பொன்னிறமாய் மின்னியது.

தன் மனக் குறைகளையெல்லாம் கூறி மனமுருக வேண்டிக் கொண்டனர். முதல் மரியாதை ஆதவனுக்கு செய்யப்பட்டது. இறைவனின் கழுத்தில் இருந்த பூமாலையை இருவரின் கழுத்திலும் போட... இறைவனின் சன்னதியில் அவ்வாறு நின்றது நிறைய மன மாற்றங்களை உண்டு பண்ணியது நிலாவிற்கு! மாலையும் கழுத்துமாய் அவர்கள் தங்களின் குடிலில் அமர்ந்தனர் மனமும் உடலும் பரவசமாய் இருந்தது. ஆதவனும் நிலாவும் மறுநாள் காலையே கிளம்பி விட்டார்கள். தடுத்த பெரியோர்களிடம், ''இல்லை சித்தப்பா அம்மாவிற்கும், அப்பாவிற்கும் ஏற்கனவே உடம்பு சரியில்லை. பாவம் நாங்களும் இல்லாமல் அவங்க கஷ்டப்படுவாங்க அதுதான். திருவிழா நல்ல படியாக முடிந்து விட்டதே. இனி நேரம் கிடைக்கும் சமயம் கட்டாயம் வருகிறோம்.

''எம்பா இன்னும் நீ கார் வாங்கின கடனைக் கட்டலியா...?''

''எப்படி சார் உங்களுக்குத் தெரியாமா?''

''நீ கார் ஓட்டுற வேகத்தை வைத்துத் தான் சொல்றேன்.''

-தேனி, எஸ்.மாரியப்பன்.

ஏற்ற இறக்கத்தோடு தெளிவான குரலில் அவன் பேசிடவும் பெரியவர்களுக்கு மறுக்கத் தோன்றவில்லை. கிளம்பும் தருணம் சுவர்ணம்மாள் பட்டுப்புடவை, வேஷ்டி என சகல மரியாதையோடு குங்குமம் கொடுத்து இளையவர்கள் இருவரும் காலில் விழுந்து வணங்கி விட்டு பின் பெற்றுக் கொண்டனர்.

''அடுத்த முறை இரண்டு பேரையும் கணவன் மனைவியைப் போல்தான் பார்க்கணும்'' என்று சொன்னார் சுவர்ணம்மாள். ஆதவன் நிலாவின் முகத்தைப் பார்த்தான். எவ்வித உணர்வும் வெளியே தெரியாமல் அவள் முகம் சலனமற்று இருந்தது.

13

வீட்டுக்கு வந்தால் நிலைமையே தலைகீழாய் மாறி இருந்தது. அங்கே சுமித்ராவும், சீதாவும் டேரா போட்டிருந்தனர்.

தாமரையம்மாள் மகனையும், நிலாவையும் கண்டதும் புன்னகையோடு ''எப்போம்மா வந்தீங்க? பிரயாணம் எல்லாம் சௌகரியமாய் இருந்ததா? கோவில் விசேஷம், கப்பையா, சுவர்ணம் எல்லாம்?''

''அதெல்லாம் இருக்கட்டும் அம்மா யார் இவங்க?''

தாமரையம்மா பேச வாயெடுப்பதற்குள் ''இவதான் உங்க மாமா பொண்ணு சீதா நான் அத்தை சுமித்ரா. போகவர இருந்தாத்தானே உறவுகள் எல்லாம் தெரியும். ரொம்ப காலமா தொடர்பே இல்லாம போயிட்டது'' என்றாள் சுமித்ரா.

''அதற்குள் தாமரை நீ வாடா தம்பி நான் சொல்றேன்.'' மகனைத் தனியாய் அழைத்துச் சென்றார். ''என்ன விஷயமின்னு தெரியலை டா ஆதவா. வந்து மூணு நாளாகுது. இத்தனை நாள் வராதவங்க அத்தை அண்ணின்னு உரிமை கொண்டாடிட்டு வந்து நிக்குறாங்க?''

''இந்த மாதிரி உறவு ஜனங்களை நீங்களா இழுத்துக்காதீங்கம்மா? பேசாம போகச் சொல்லிடுங்க? உங்களுக்குத் தயக்கமா இருந்தா நானே சொல்லிடறேன்.''

''அவசரப்படாதேடா தம்பி இன்னும் இரண்டு நாள் பொறுமையா இரு. விரோதியா இருந்தாலும் வீடு தேடி வந்தவங்களை போகச் சொல்லக்கூடாது.''

''உங்க இஷ்டம் பசிக்குதும்மா ஏதாவது டிபன் ரெடி பண்ணுங்க. நா குளிச்சிட்டு வந்திடறேன்.'' அவன் நகர, தாமரையம்மாள் அச்சச்சோ இவர்களிடம் நிலாவைத் தனியாக விட்டு வந்திட்டேனே என்று அங்கு விரைந்தார். அதற்கு ஏற்றார்போல் தாயும், மகளும்

நிலாவை வறுத்தெடுத்துக் கொண்டு இருந்தனர்.

''நீதான் அந்த மூத்த தாரத்துப் பொண்ணா? உங்கப்பா கதை கதையாய் சொல்லியிருக்கார் உங்கம்மாவைப் பத்தி.'' இங்கே பாருங்க என்னைப் பத்தியும், உங்கம்மாவைப் பத்தியும் உங்களுக்கு என்னத் தெரியும்? வயசில பெரியவங்களா இருக்கிங் பேசும் போது யோசிச்சு பேசுங்க''

அவள் பதில் பேசும் முன், தாமரை அம்மாள் வந்து விட, ''இந்தாங்க அத்தை'' பிரசாதம் என்று தந்தவளை

நீயே போய் உன் கையால பூஜையறையில் வைத்திடும்மா'' அவளும் அவள் கூடவே வந்தாள்.

''அத்தே ?''

''என்னம்மா?''

''நான் கொஞ்ச நாளைக்கு அவுட் ஹவுஸில் தங்கிடறேனே.''

''எம்மா? அப்படி சொல்றே? ''

''இல்லத்தே! வந்தவங்க தேவையில்லாம என்கிட்டே வம்புக்கு வர்றா மாதிரி தெரியுது. அம்மாவைப் பத்தி வாய்க்கு வந்தபடி பேசுறாங்க.''

''சுமித்ராவோட குணமே அதுதாம்மா! உங்கப்பா அவங்ககிட்ட மாட்டிக்கிட்டு படாதபாடு பட்டுத்தான் உயிர் விட்டிருக்கார்''

''இவங்களோட ஜாடை மாடையான பேச்சுக்களை கேட்கவே பிடிக்கல அத்தை.

அவுட் ஹவுசில் போய்ட்டா இவங்க தொடர்போ இல்லாம என் வேலையை கவனிப்பேன்.''

''நீ சொல்றதும் ஒரு வகையில் சரிதான். ஆனா ஆதவன் என்ன சொல்வான்னு தெரியலையே? அவனுக்கும் இவங்களை சுத்தமா பிடிக்கலை!!''

''அவர்கிட்டேட் நான் சொல்லிக்கறேன்.''

''சரிதாம்மா! நீ சொன்னா சரிதான்.''

''நிலா வந்ததிலிருந்தே கண்ணில் படவில்லை. ஓட்டலுக்கும் அவள் வரவில்லை என்றதும் நேராய் அவள் அறைக்கு விரைந்தான் அவன். கதவு திறந்தே இருந்தது. உள்ளே நுழைந்தவன் அரையிருளில் கட்டிலில் படுத்திருந்தவளிடம் சென்றான்.

''என்ன நிலா அதுக்குள்ளே தூங்கிட்டியா?'' பதிலுக்கு எந்தக் குரலும் வராமல் போகவே, மெல்ல பின்புறம் அமர்ந்து அவள் தோளைத் தொட்டான். அடுத்த விநாடி பட்டென்று முன்புறமாய் இழுக்கப்பட்டு அவளின் மேல் சாய்ந்த போதுதான் அது நிலா இல்லையென்று உதித்தது.

''ஏய்! விடு என்னை?'' திமிறினான்.

''முடியவே முடியாது!''

''சீதா நீ ஒரு பெண்ணா? விடு இதென்ன அசிங்கமாய்!''

என் அத்தானை நான் அணைப்பது அசிங்கமா? கல்யாணத்திற்கு பிறகு இது நடப்பதுதானே!''

அவளை பிடித்து தள்ளிவிட்டு வருவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

அதற்குள் ஹோட்டல் விஷயமாய் நிலா ஏதோ பேசிட வந்தவள், இவர்களின் நெருக்கமும், தள்ளுமுள்ளுவும் கண்டு என்ன நடக்கிறதென புரியாமல் கற்சிலையாய் திகைத்து நின்றாள். சம்மட்டியால் அடி விழுந்தது போல அதிர்ச்சி அடைந்தாள்.

அதற்கு மேல் அங்கே நிற்கப் பிடிக்காமல் ஓடியே விட்டாள் நிலா.

சீதாவை தன்னிடமிருந்து பிரித்து தூரத் தள்ளினான் ஆதவன்.

''நீயும் ஒரு பொண்ணா?''

''இந்நேரம் நீ ஆம்பிளையா இருந்திருந்தா உனக்குப் புரிந்திருக்கும்.''

''ச்சீ...!'' வெறுப்போடு வெளியேறினான். சீதா தன் திட்டத்தின் முதல்படி வெற்றியடைந்ததையெண்ணி மகிழ்ந்தாள்.

14

நிலாவைப் போய் பார்க்கவும் மனம் வரவில்லை. எந்த முகத்தோடு போய் அவளைப் பார்ப்பது? எப்படி அவளிடம் புரிய வைப்பது? ஆனால் இது நிலாவின் அறைதானே? சீதா எப்படி இங்கே வந்தாள்? நிலைமை சீராகும் என்று பார்த்தால், மேலும் மேலும் இடியாப்பச் சிக்கலாய் விரிந்து கொண்டே போகிறதே? இதையெப்படி நான் சமாளிப்பேன். இவன் தவிப்பு இப்படி இருக்கையில்,

அங்கே ,

நிலா அழுகையில் கரைந்தே போய் விடுவாள் போல இருந்தது. ஆதவனின் அணைப்பில் வேறொரு பெண்ணைக் கண்டதும் அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. அந்தக் கணமே இறந்து விடலாம் போல் இருந்தது.

நான் உங்களை புரிந்து கொண்டு உங்களுடன் சேர முயலும் நேரம் எப்படியோ சூழ்நிலை உங்கள் மீது கறையாக படிந்து விட்டதே?

ஆதி? என்று கதறவேண்டும் போல் இருந்தது.

சிறிது நேரத்திற்கெல்லாம் அறைக்கதவு தட்டப்படும் சப்தம் கேட்க, கதவைத் திறந்தவளைத் தள்ளிக் கொண்டு சீதாவும், சுமித்ராவும் உள்ளே நுழைந்தனர்.

''எண்டி! உனக்கெல்லாம் அறிவே இல்லையா? எம் பொண்ணும், மாப்பிள்ளையும் தனியா இருக்கும் போது போனியாமே? இதுதான் உன் அம்மா உன்னை வளர்த்து வச்சிருக்கிற லட்சணம் போல''

''அம்மாவைப் பற்றி பேச உங்களுக்கு எந்த அருகதையும் இல்ல''

''அவ சரியில்லைன்னு தானே உன் அப்பன் என்கிட்டே வந்தான். நல்லவளா இருந்தா புருஷன் கூட வாழ்ந்து இருப்பாளே. எங்கேயோ பிறந்து எப்படியோ வளர்ந்தவ பெரிய இடமா பார்த்து உறவைச் சொல்லி வளைச்சிப் போடலான்னு வர்றியா?''

''உங்க அசிங்கமான பேச்சை நிறுத்துங்க. நான் இங்கே யாரையும் வளைச்சிப் போட வரலை.''

''உண்மையைச் சொன்னா உடம்பு எரியத்தானே செய்யும்? அத்தனை ரோசம் உள்ளவ இந்த வீட்டை விட்டு உடனே கிளம்ப வேண்டியதுதானே!''

''விடு கீதா! மறுத்து பிரச்சனை பண்ணினால் இவளையெப்படி வழிக்கு கொண்டு வர்றதுன்னு எனக்குத் தெரியும்.'' சுமித்ரா ஜாக்கிரதையென்று விரலை நீட்டி எச்சரித்தபடியே சென்றாள்.

நிற்க நிழலும், அன்பான உறவுகளும், இவையெல்லாம் வற்றிற்கும் மேலாக இழந்து போன காதலும் கிடைத்ததே என்று மகிழ்ந்தாளே அந்த எண்ணம் சிதைந்தே போய்விடுமோ?

ஆதி கண்களில் காதலோடு நீங்க யாசித்த நேரமெல்லாம் உங்களை உதறித் தள்ளியதால் எனக்கு இந்த தண்டனையா?

அத்தனை அதிகாலையில் வருணிடம் இருந்து அழைப்பு வருமென்று ஆதவன் எதிர்பார்க்கவில்லை.

சொல்லுங்க வருண்! சைட்டில் ஏதும் பிரச்சனையா?''

''நத்திங் ஸார் ராணி மேடத்தை காலையிலே கையில் பெட்டியோட பஸ் நிலையத்தில் பார்த்தேன்.

ரொம்ப டிஸ்டர்ப்டா இருந்தாங்க விசாரிச்சிட்டிருந்தப்பவே மயக்கமாயிட்டிங்க!!

''அடடா என்ன ஆச்சு?''

''எங்க ஆசிரியர் ரொம்ப எச்சரிக்கையா இருக்கார்டா...!''

''எப்படிச் சொல்ற...?''

''பக்கத்து கிளாஸ் டீச்சருக்கு என்னை லவ்லெட்டர் எழுதச் சொல்றார்!''

-எஸ்.மாரியப்பன், தேனி.

''லாவண்யாவோட வீட்டிலே தங்க வச்சிருக்கேன். ஹை டெம்பரேஞ்சர் வேற, உங்க பேரையே சொல்லிட்டு புலம்பறாங்க. நீங்க வந்தா ரொம்ப பேவரா இருக்கும்.''

''இன்னும் அரைமணி நேரத்தில் அங்கிருப்பேன் தொலைபேசி இணைப்பை துண்டித்து விட்டு தவிப்போடு இறங்கியவன் தாயிடம், அம்மா நிலா எங்கேன்னு தெரியுமா?''

''அவ ஒரு ரெண்டு மூணு நாளைக்கு நம்ம அவுட் ஹவுசில் தங்குறதா சொன்னா'' இருக்காளா இல்லையான்னு கூட பார்க்க மாட்டியா?

''அவ எங்கேப்பா போய் இருக்கப் போறா? நீ ஏன் இத்தனை பதட்டமா அவ அறையில் இல்லை'' லாவண்யாவோட வீட்டில் தங்க வச்சிருக்காங்கடா வருண் போன் பண்ணினான்.

அப்போது அங்கு சுமத்ரா வர,

''இதோ பாருங்க!''

''நான் திரும்ப வரும் போது, நீங்க இரண்டு பேரும் இங்கே இருக்கக்கூடாது. மீறி இருந்தா நான் என்ன செய்வேன் தெரியுமா? என் குடும்பத்துக்குள் வந்து பிரச்சனையை ஏற்படுத்துறாங்கன்னு சொல்லி போலீசில கம்ப்ளைண்ட் பண்ணிடுவேன்.'' ஆதவன் கோபமாய் வெளியேறிட,

தாயும் மகளும் இனிமேல் எதைப் பேசினாலும் காரியம் ஆவப் போவதில்லை என்ற முடிவுடன் கிளம்பினர்.

''என்னம்மா இது பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கா போய் விட்டதே! ''

அடி விடுடி இவன் ஒருத்தன் தான் பெரிய ஆளாயென்ன? இந்த ஆதவன் இல்லேன்னா இன்னொரு மாதவன்! நீ நினைச்சா எந்த ஆம்பிளையும் உன் காலடியில் கிடப்பான்.''அவர்கள் கிளம்பி விட்டனர்.

15

லாவண்யாவின் வீட்டில் நுழைந்து நிலாவைக் காணும் வரையில், ஆதவனுக்கு ஒரு மனமாய் இல்லை, கண்களை மூடியபடி படுத்திருந்த நிலாவைக கண்டதும் மனம் இளகியது.

''இப்போ எப்படியிருக்கு நிலா?''

மெல்ல அவளை எழுப்பி அமர வைத்தான்.

கண்ணீரோடு முகத்தை திருப்பிக் கொண்டாள்.

நிலா ஒற்றை விரல் கொண்டு முகத்தை திருப்பினான். லாவண்யா கொண்டு வந்து தந்த ஆரஞ்சு பழச்சாற்றை பருக வைத்தான்.'' முதல்ல குடி அப்புறம் பேசலாம்.

''நான் இத்தனை நாள் காத்து இருந்ததே உன் மனசு மாறுமின்னு தான் ஆனா இப்படி ஒரேயடியாய் என்னை விட்டுட்டு போக துணி வேன்னு நான் எதிர்பார்க்கலை. இத்தனை நாள் என்கூட இருந்தும் எம்மேல் உனக்கு நம்பிக்கை பிறக்கவே இல்லையா நிலா? எவளோ ஒருத்தி வலிய என்னை கட்டிப்பிடிச்சதை பார்த்ததும் அதை அப்ப டியே நம்பி விடுவியா நிலா?''

''ஆதி ப்ளீஸ்...! என்கிட்ட எந்த விளக்கமும் கேட்காதீங்க?'' அவள் அழத் தொடங்கினாள்.

ஒரு வழியாய் அவள் அழுது முடியும் வரை காத்திருந்தவன் மீண் டும் ஆரம்பித்தான்.

''உன் மனசிற்கு போட்டு இருக்கிற முகமூடியை முதலில் அதை கழட்டு ப்ளீஸ். நம்ம வாழ்க்கையோட சந்தோஷம் அத்தனையும் இழந்திட்டே வர்றது உன் கண்களுக்கு தெரியலையா? என்னைக்கோ செய்த தவறுக்கு எத்தனை நாள் தண்டனை அனுபவிக்கணும்.''

கலங்கிய விழிகளோடு பேசுகையில் இவளும் கரைந்தே போனாள்.

''அதான் சொன்னேனே ஆதி என்னால நீங்க பட்ட வேதனைகள் போதுமின்னு! சின்ன வயசில அப்பாவால ஏற்பட்ட பாதிப்பில், நான் உங்களை ஒதுக்கிட்டேன். நம்பிக்கையைப் பத்தி பெரிசா பேசிட்டு அதை நானே கடைப்பிடிக்கலையே மனத்திரை விலகி உங்ககிட்டே என் அன்பை வெளிப்படுத்த முயன்றப்போ வேல்முருகன், கீதான்னு ஆயிரம் தடைகள்.''

''அப்படின்னா ....!''

''ஸ்டில் ஐ லவ் யூ ஆதி!''

''உங்க மேல நான் வைச்ச காதலும், நம்பிக்கையும் தான் அத் தனை கோபத்தை தோன்றுவித்தது. கீதாவும், அவங்க அம்மாவும் உங்க இரண்டு பேருக்கும் கல்யாணமின்னு பேசினப்போ, வேத னையா இருந்தாலும், அதுதான் என் தவறுகளுக்கு எல்லாம் தண்ட னையா பட்டது. அதான் கிளம்பிட்டேன்.''

''நாங்கள் ஆட்சிக்கு வந்தால், திறந்தவெளிப் பல்கலைக்கழ களுக்கெல்லாம்..''

''என்ன செய்வீர்கள் தலைவரே?''

''திறந்த வெளியிப் பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் மேற்கூரை அமைப்போம்!''

எம்.அசோக்ராஜா
-அரவக்குறிச்சிப்பட்டி

''நம்ம ஆசிரமத்துக்கு ஒரு அழகான பெண்ணை வேலைக்கு சேர்க்கலாம்னு இருக்கேன் சீடரே...''

''எனக்கும் திருமண வயதாகிவிட்டது. இரண்டு பெண்களாய் வேலைக்கு சேர்ப்போம் குருவே!''

-பெ.பாண்டியன்,
காரைக்குடி

முட்டாள் பெண்ணே, நீ போயிட்டா உடனே அந்த கீதாவை கல்யாணம் பண்ணிப் பேன்னு நினைச்சியா? எத்தனை காலம் ஆனாலும் உன் மனசு மாற காத்து இருப்பேன்.

''ஐ ம் ஸாரி ஆதி.''

''உன் மன்னிப்பை குப்பையில போடு! திரும்ப திரும்ப இப்படி என்னை தவிக்க விடாதே. இங்கே வா, அவளை இழுத்து தன்னருகில் அணைத்துக் கொண் டான். அந்த அணைப்பின் கதக தப்பை அனுபவித்தபடியே ''ஆதி...'' என்று முனகினாள்.

ஆதி! உண்மையை சொல் லுங்க எம் மேல உங்களுக்கு கோபமே வரலையா?

''நீ ஒரு குழந்தை நிலா!

எப்போ உன்னை முதன் முதலா பார்த்தேனோ அப்பவே உன்னை, உன் அசைவை அணு அணுவாய் ரசிச்சிருக்கேன். அந்த கோபம், வெறுப்பு கூட எத்தனை சுவாரஸ்யமா இருந்தது தெரியுமா?''

நிஜமா? விழிகளை அகல விரித்து கேட்டாள்.

''இப்படி பார்த்து பார்த்துதான் என்னை... போங்க ஆதி.. வெட் கத்துடன் அவன் மார்பில் சரிந்தாள்.

''இந்த சந்தோஷமும் புன்னகையும் என்னைக்கும் நிலைக்க ணும்'' என்றபடியே உள்ளே நுழைந்தனர் தாமரையம்மாளும், சந்தி ரசேகரும்.

''அத்தே...!''

''என்னம்மா நிலாயிது! இப்படி நீ செய்யலாமா என்கிட்டே சொல்லியிருக்கலாமே உனக்கு ஏதாவதுன்னா...!''

''தப்புதான் அத்தை ஏதோ வேகத்திலே ஆனா இனிமேல உங்க ளையும் அத்தானையும் விட்டு எங்கேயும் போகவே மாட்டேன்.''

''என் தங்கம் இனியும் கல்யாணத்தை தள்ளிப்போட வேண்டாம். வரும் லாவண்யா கல்யாணத்தோடு சேர்த்து ஒண்ணாவே செய்திட லாம்.''

சந்திரசேகர் சொல்லிட, இரண்டு ஜோடிகளும் பெரியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கினார்கள்.

முற்றும்